


பொருளடக்கம்


| | |
|---|---|
| கீதா மஹான்கள் ... ... ... ... | 339 |
| விக்ரஹ ரஹஸ்யம் ... ... ... ... | 340 |
| கம்பநாடர் சரித்திர விளக்கம் ... ... ... | 344 |
| ஆத்திச்சூடி விளக்கம் ... ... ... | 352 |
| யானையில் முத்துக்களுண்டா ... ... ... | 354 |
| நியாயமாலை ... ... ... ... | 355 |
| அல்லஹாபாத் (ப்ரயாகை) ... ... ... | 357 |
| இராஜபக்தி ... ... ... ... | 359 |
| சக்தி தத்வ போதினி ... ... ... | 363 |
| உபநிஷத் ரத்தினமாலை ... ... ... | 367 |
| வஸந்த மாளிகை ... ... ... ... | 369 |
| காகாகந்தம் ... ... ... ... | 371 |
| உல்லாஸன் சரித்திரம் ... ... ... | 373 |
| மாணவர் பக்கங்கள் : வியாஸ விதானம் ... ... | 374 |
| சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள் ... | 377 |
| விசேஷக் குறிப்புகள் ... ... ... ... | 380 |


காபிரைட்




இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

*☞ Specially adapted for Elementary Training & High Schools*

# LESSONS from GEOLOGY

(IN TAMIL)

BY MR. M. R. SUBRAHMANYAM, B. A.

## பூதத்வ போதினி

நாமிருக்கும் பூமியின் தத்துவங்களை அறியாதிருப்பது பெரும் பேதமையே யன்றோ? பூமியின் தத்துவங்களைச் சரியாக அறியவேண்டுமாயின் Mr. சுப்பிரமணிய ஐயரவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு 30 படங்களால் நன்றாக விளக்கப்பட்டிருக்கும் பூதத்வ போதினி என்னும் நூலினை வாங்கி வாசித்தறியவும். இதில் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகம் எலிமெண்டரி ஸ்கூல் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும், உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணா 8

This treats of rocks and minerals: their action and uses: Contains more than 30 fine illustrations, specially prepared for the book: most of the examples and illustrations given in the book are Indian.

**Beautifully bound in full Calico: As. 8**

இதைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

**H. Narayana Rao, Esq., M. A., F. G. S., Lecturer on Geology, Presidency College, Madras**, writes:—This little book (Lessons in Geology by Mr. M. R. Subrahmanya Iyer, B. A.) is an introduction to Geology in Tamil. By referring to Indian Examples, the author has attempted to familiarize the reader with the various Geological phenomena without going too much into the details of the subject which would materially be repulsive to an ordinary reader, the author has given a general outline of the subject *in an easy and popular style.* The concluding chapter deals with the mode of occurrence in India of the most important minerals, coal, gold and diamond. *I have no doubt that the book will supply a real want and I hope it will be largely used in Secondary Schools and especially by teachers.*

**The "Madras Mail."**—The General Supplies Co., Mylapore Madras has published a little primer in Tamil embodying easy lessons in Geology by Mr. M. R. Subramaniam, B.A. It is intended to serve as an introduction to the study of this important science for the benefit of Tamil Readers. The illustrative examples are mostly of their country and the specimens referred to are such as must be familiar to readers selected as they are from their surroundings. The book is priced at As. 8 and is well adapted for introduction into Elementary Schools.

* * *

**The "Hindu."**—This little book on Geology in Tamil by Mr. M. R. Subrahmanyam, B.A. is an introduction to the important science of Geology, the knowledge of which has been long neglected in our country. The author has placed before us the important geological phenomena *in a simple and popular style* avoiding the use of all difficult technical terms. We are glad to note that English words are not introduced into the body of the book but a glossary of the important Tamil terms used in the book with the translation of those into English has been added at the end of the book. In the course of the lessons the author has described several simple experiments to illustrate the phenomena so that even young pupils may easily understand the facts. The book contains more than 30 fine illustrations. We are sure the pupils of the Elementary and the Secondary Schools and specially the teachers of the Elementary and the Training Schools will be highly benefitted by this book. We wish the author all success in his attempt. The book has been published by the General Supplies Co., Mylapore, and it has been neatly bound in full calico and is priced low, *viz*, As. 8 a copy.

* * *

**T. V. Sivakumara Sastry, Esq., B.A., L.T., Lecturer, Teachers' College, Saidapet.**—One of the most commendable features of the book is the *absence of all difficult technical terms. The style is simple and easy.* The book is sure to become highly popular.

393


# THE "VIVEKA BODHINI"

**An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors**

MAINLY DEVOTED TO

**Education, Science, Philosophy, Morality, Literature and Art, History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce and Economics.**

**THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA.**

*Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects.*

**Vol. IV** **FEBRUARY 1912** **No. 8**


## CONTENTS


| | Page |
|---|---|
| Great Men of the Gita ... ... ... ... ... ... | 339 |
| Inner Meaning of Images ... ... ... ... ... | 340 |
| Life of Kamban by Brahmasri Vasishta Barathi ... ... ... | 344 |
| Moral Sayings ... ... ... ... ... ... | 352 |
| Pearls in Elephants : by M. R. Ry. V. Panchapakesa Aiyar ... ... ... | 354 |
| Popular Maxims ... ... ... ... ... ... | 355 |
| Allahabad (Prayag)—its sceneries : by M.R.Ry. C. R. Srinivasarangachariar, B.A., L.T. ... | 357 |
| Loyalty : by M. R. Ry. Subramania Aiyar ... ... ... ... | 359 |
| Physics Primer : Light Reflection : by M. R. Ry A. S. Kasturiranga Aiyar, B.A., L.T. ... | 363 |
| Summary of the Minor Upanishads ... ... ... ... ... | 367 |
| Vasanthamalikai—The Evil of Lust : by M.R.Ry. R. S. Narayanaswami Aiyar, B.A., B.L. | 369 |
| Naganandam—A Classical Drama : by M.R.Ry. V. Seshagiri Sastriar, B. A. ... | 371 |
| Adventures of Ulysses : by M. R. Ry. K. Venkatrama Aiyar, B.A. ... ... | 373 |
| Students' Pages—Essay Writing—IV Reflective Essays ... ... ... | 374 |
| Children's and Ladies' Pages—True Greatness or Vasudeva Sastry (Translated) ... | 377 |
| News and Notes ... ... ... ... ... ... ... | 380 |


*All literary contributions, books, &c., for review, should be addressed to the Editor,* and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini, Mylapore, Madras.

# "VIVEKA BODHINI"

## A High Class Illustrated Popular Tamil Monthly

**Patronised by almost all Educational Institutions, Local Boards & Municipalities &c.**

**Started in 1908** ✠ ✠ ✠ **Devoted to various subjects**

**Annual Subscription including Postage Rs. 3** **Appreciated by one and all**

## Among some of the Contributors

M.R.Ry. Mahamahopadhyaya Pundit V. Swaminatha Aiyar Avergal ; Mahamahopadhyaya Pundit Sri Chandra Sekhara Sastrigal Avergal ; Hon. Dewan Bahadur R. Raghunatha Rao Avl., C.S.I. ; T. Kanakasundaram Pillai Avl., B.A. ; S. V. Kallapiran Pillai Avergal, B.A. ; Mahesa Kumara Sarma Avergal ; N. Balarama Aiyar Avergal ; T. Chelvakesavaroya Mudaliyar Avergal, M.A. ; T. A. Gopinatha Rao Avergal, M.A. ; V. S. Chengalvaroya Pillai Avergal, M.A. ; P. V. Shama Rao Avergal, M.A. ; S. Kuppuswami Sastrigal Avergal, M.A. ; C. P. Venkatarama Aiyar Avergal, M.A. ; T. S. Subramania Aiyar Avergal, M.A., L.T. ; V. R. Duraisami Sastri Avergal, M.A., L.T. ; A. Panchapagesa Aiyar Avergal, M.A., L.T. ; S. Appasami Aiyar Avergal, M.A., L.T. ; A. S. Kasturiranga Aiyar Avergal, B.A., L.T. ; V. Seshagiri Sastriar Avergal, B.A. ; B. S. Subramania Aiyar Avergal, B.A. ; P. Sambanda Mudaliyar Avergal, B.A., B.L. ; R. Narasimha Aiyengar Avergal, B.A., M.L. ; P. Krishnaswami Sastri Avergal, B.A., B.L. ; T. S. Narayana Sastriar Avergal, B.A., B.L. ; R. Srinivasa Aiyar Avergal, B.A., B.L. ; S. E. Sankara Aiyar Avergal, B.A., B.L. ; N. R. K. Tatachariar Avergal, B.A., B.L. ; R. S. Narayanaswami Aiyar Avergal, B.A., B.L. ; A. K. Sundaram Aiyar Avergal, B.A., B.L. ; V. Subramania Aiyar Avergal, B.A. ; T. R. Ramanatha Aiyar Avergal, B.A., L.T. ; A. Madhaviah Avergal, B.A. ; P. Kuppuswami Aiyar, B.A. ; K. Narayana Aiyar Avergal, B.A., M.B. & C.M. ; M. Gopalakrishna Aiyar Avergal ; J. V. Subramania Aiyar Avergal, B.A. ; C. Ramaswami Aiyengar Avergal, B.A. ; V. G. Subbier Avergal, B.A., L.T. ; G. Sundaresa Aiyar Avergal, B.A., L.T. ; G. Tatacharyar Avergal, B.A. ; C. Sundaram Aiyar Avergal, B.A., L.T. ; C. S. Sundaram Aiyar Avergal, B.A., L.T. ; P. S. Sundaram Aiyar Avergal, B.A., L.T. ; T. Balasubramania Mudaliyar Avergal, B.A. ; G. S. Krishnaswami Aiyar Avergal, B.A. ; R. Rajam Aiyangar Avergal, B.A., L.T. ; M. R. Subrahmanyam Avergal, B.A. ; S. Balakrishna Aiyar Avergal, B.A., L.T. ; G. Ratnam Pillai Avergal, B.A., L.T. ; K. Venkatrama Aiyar Avergal, B.A. ; G. Rajagopal Naidu Avergal ; S. V. Rangaswami Iyengar Avergal, B.A. ; S. Krishnaswami Aiyar Avergal, B.A., L.T. ; C. Narayanaswami Aiyar Avergal, B.A., L.T. ; N. S. Jambunatha Aiyar Avergal, B.A., L.T., F.Z.S. ; V. A. Venkatasubbiah Garu, B.A., L.T. ; N. Vanamamalai Pillai Avergal ; P. N. Srinivasachariar Avergal, B.A. ; R. P. Kulandaswami Pillai Avergal, B.A. L.T. ; V. K. Veeraraghava Chariar Avergal, B.A. ; M. V. Minakshisundara Mudaliar Avergal, B.A. ; J. R. Ranga Raju Avergal ; L. Ananta Aiyar Avergal ; &c., &c., &c.

## WHAT OTHERS SPEAK

**The late Rao Bahadur Mr. L. C. Williams Pillai, B.A., Retired Inspector of Schools,** writes :—* * * *A very readable Journal full of interesting matter written in chaste Tamil.* It deserves the liberal support of the educated public.

***

**Rao Bahadur Mr. C. Nagoji Rao, B.A., Retired Inspector of Schools** writes : *Interesting and instructive.*

**Hon'ble Dewan Bahadur R. Ragoonatha Row Avergal, C. S. I.,** writes :— * * * Written in good easy Tamil and deals with subjects of importance and usefulness to the general public. Even the poor can have valuable and useful reading in good Tamil for a small sum.

***

**Hon'ble Mr. P.S. Sivaswami Aiyar, C.I.E., Member of the Executive Council, Madras,** writes :—* * Written in an easy, readable style and deal with a variety of interesting subjects. Its usefulness and cheapness will, I hope, commend it to the Tamil public and secure popularity.

# விவேக போதினி

## ஓர் சிறந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை. 1908-ம் ஞு முதல் பிரசுரமாகி வருகிறது. யாவராலும் புகழ்ப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்கள் பெருமையால், இதன் பெருமையை நன்கு அறியலாம். மிக எளிய நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட களிப்புடன் வாசிக்கக் கூடியது. சித்திரப்படங்களுடன் பிரதி மாதமும் தவறாது பிரசுரமாகிறது. எளியவரும் வாங்கி வாசித்து நற்பயனடையவே சந்தாத்தொகையும் மிகக்குறைவாய் வைக்கப்பட்டிருக்கிறது. [யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய வேறொரு பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப் படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.]

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்:—(1) நீதி, (2) மஹான்களின் ஜீவிய சரிதை, (3) இயற்கை அற்புதங்கள், (4) உலக ஒழுக்கம், (5) கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயம், (6) வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம், (7) உயர்தரமான நாவல்கள், நாடகங்கள், (8) சிறுவர்க்கான சிறந்த நீதிக்கதைகள், (9) ஸ்திரீகளுக்கான நற்போதங்கள், (10) சாஸ்திரீக விசேஷ வர்த்தமானங்கள்.

### தபாற்கூலி உட்பட சந்தா விபரம்

| இந்தியா, பர்மா, ஸிலோன் | | | |
|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு | ரூ. 3 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | ,, 1 | 12 | 0 |
| தனிப்பிரதி | ,, 0 | 5 | 0 |

| பினங்கு, சிங்கப்பூர், நேடால், ஆகிய இடங்களுக்கு | | | |
|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு | ரூ. 4 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | ,, 2 | 4 | 0 |
| தனிப்பிரதி | ,, 0 | 6 | 0 |

☞ முன்பணமாகத்தான் சந்தாத்தொகையை அனுப்பவேண்டும். அல்லது, வி. பி. மூலமாய் முதல் ஸஞ்சிகையை ஒருவருஷத்திய அல்லது ஆறு மாதத்திய சந்தா கொடுத்துப் பெறவேண்டும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எங்களுடைய புத்தகங்கள் குறைந்தவிலைக்கு அனுப்பப் படுவதால், இப்பத்திரிகை வாங்குவார்க்கு எப்பொழுதும் நஷ்டமில்லை.

## TO ADVERTISERS

With a view to place our Journal within the easy reach of all classes of advertisers, the following rates will be charged:—

## RATES

| Particulars. | Per annum. | | Perhalf year. | | Per quarter. | | Per month. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | Rs. | A. | Rs. | A. | Rs. | A. |
| Full Page ... ... ... ... ... ... | 60 | 0 | 36 | 0 | 20 | 0 | 7 | 0 |
| Half page ... ... ... ... ... ... | 36 | 0 | 20 | 0 | 12 | 0 | 4 | 8 |
| Quarter Page ... ... ... ... ... | 25 | 0 | 15 | 0 | 8 | 0 | 3 | 0 |

A cash discount of 6¼ per cent on the above rates will be allowed to those who remit their advertisement charges in advance, for one year, or 6 months. Cover pages 50 % extra.

PAYMENTS:—No contract advertisements will be inserted, unless accompanied with remittance of 3 months' charges in advance. A voucher copy of our "Viveka Bodhini" will be sent only to those advertisers, who pay not less than Rs. 8 per quarter.

Further particulars on appliacation to :—

THE MANAGER, THE "VIVEKA BODHINI," Mylapore, Madras

# FOUNTAIN PENS JUST UNPACKED

| | Rs. | A. |
|---|---|---|
| " Waterman's Ideal " | 7 | 14 |
| " University " | 5 | 8 |
| " Excel " | 5 | 0 |
| " Fortune No. 3." | 4 | 8 |
| " Coronation safety " | 4 | 8 |
| " Royal." | 4 | 0 |
| " Gaekwar." | 3 | 12 |
| " Durbar." | 3 | 12 |
| " Standard." | 3 | 8 |
| " Improved fortune." | 3 | 8 |
| " Coronation." | 3 | 0 |
| " Express." | 3 | 0 |
| " Caltonian." | 2 | 12 |
| " Red giant stylo." | 2 | 12 |
| " Red spring stylo." | 2 | 8 |
| " Supplies." | 2 | 8 |
| " Coronation stylo." | 2 | 4 |
| " Red gem Stylo." | 2 | 4 |
| " County." | 0 | 12 |
| And other fountain pens. | | |
| " Waterman Section cleaner." | 9 | 0 |
| " Do Joint opener." | 0 | 6 |

We have also in Stock, Clips of different sizes and Stylo inks. Spare parts for all pens kept always in stock. Write for particulars.

**THE GENERAL SUPPLIES CO., MYLAPORE, MADRAS.**



கணேசர்.



ஸுப்ரஹ்மண்யர்.



மஹாவிஷ்ணு.



பரமசிவன்

THE GUARDIAN PRESS, MADRAS

# விவேக போதினி

“எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ தைமீ ௱ 1912-௵ பிப்ரவரிமீ { பகுதி 8


## கீதா மஹான்கள்

### THE GREAT MEN OF THE GITA

### 1. ஸ்திதப்ரஜ்ஞன் (கீதை II,54—72)

அர்ஜுனன் பகவானை நோக்கி ‘ஸ்திதப்ராஜ்ஞன் லக்ஷணம் யாவை? அவன் எவ்வாறு பேசுவான், இருப்பான், உலாவுவான்?’ என்று கேட்டான். அதற்குப் பகவான் பின்வருமாறு கூறுகிறார்.

‘மனத்தின்கண்ணுள்ள காமாதிகளை அறவே விட்டு தன்னுள்ளேயே ஆத்மதிருப்தி உடனிருப்பவனே ஸ்திதப்ராஜ்ஞன் எனப்படுவான். துக்க காலங்களில் மனச்சஞ்சல மற்றவனும், ஸுக காலங்களில் மனம் பற்றில்லாதவனும், ராகம், பயம், கோபம் ஆகிய இவைகளிலிருந்து விடுபட்டவனும் இருப்பான் அவன்.

எவ்விதப் பற்றுமின்றி, சுபாசுபங்கள் வந்தபோதிலும், விருப்பு வெறுப்பு அற்றவனாய் இருப்பவன் புத்தியே ஸ்திரமாயுள்ளது. அபாயகாலங்களில் தன்னை அறியாமலே தனது அங்கங்களை உள்ளிழுத்துக்கொள்ளும் தன்மை வாய்ந்த ஆமையின் குணத்தைப்போல விஷய ஸம்பந்தப்படுங்கால் இந்திரியங்கள் முதலியன அந்தர் முகப்படும் குணமாகிய கூர்மவிருத்தி வாய்ந்த மஹானது புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது என்று கூறலாம்.

‘விஷயங்கள் ஸாதாரணமாக ஒதுங்குபவரை வந்து அதிகமாகத் தாக்காவிடினும், விஷய ஆசை பரம்பொருளை உணர்ந்தக்கால்தான் முற்றிலும் நீங்கும். சஞ்சலமடையும் இந்திரியங்கள் அறிவுடையோர் முயற்சியை வீணாக்கி அவர் மனதை வேறு விஷயங்களில் இழுத்துச் செல்லும். இவைகளை எல்லாம் அறவே அடக்கி, இந்திரியங்களை எல்லாம் தகைந்து பரமாகிய என்னை உணர்ந்து நிற்பவன் புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது.

‘விஷயத்தை நினைத்ததும், அதனுடன் ஸம்பந்தம் ஏற்படுகிறது, இதனால் முறையே காமம், கோபம், மோஹம், அறிவு மயக்கம், புத்தி நாசம் முதலியவைகள் உண்டாகி ஸாதகன் அதோகதி யடைகிறான். ஆதலால் விஷயங்களுக்கிடையிலிருந்தும் விருப்பு வெறுப்பின்றி அடங்கிய விருத்தியுடையவன் சாந்தி பெறுவன். இதனால் துக்க நிவிருத்தியும், ஸ்திரபுத்தியும் உண்டாகிறது.

‘அயுக்ரதர்களுக்கு (தகாதவர்களுக்கு) புத்தி, பாவனை, முதலியவைகள் இல்லாமல் போக இவர்களுக்குச் சாந்தி ஏற்படாது, இவர்களுக்கு எப்படி ஸுகம் ஏற்படும்? சஞ்சலமான இந்திரியங்களுக்கு மனம் வசப்பட்டு விட்டால் கடலில் புயல்காற்றுல் அகப்பட்ட கப்பல் கதி அதற்கு வந்துவிடும். ஆதலால் இந்திரியம் அடங்கப்பெற்றவர் புத்தியே திடப்பட்டது என்னலாம்.

‘எல்லோருக்கும் இருளாக (விளங்காததாக) இருக்கும் பரமநிலை ஸ்திதப்ராஜ்ஞனுக்குப் பட்டப்பகல்போலவும் (நேரிட அறியக்கூடியதாகவும்); எல்லோருக்கும் பட்டப்பகல் போலவிருக்கும் உலகநிலை அவனுக்கு இருள்போலவும் காணப்படும். பாயும் ஆறுகளால் பூரிக்காத கடல்போல, தாக்கும் ஆசைகளால் அசையாத தன்மை வாய்ந்தவனே சாந்தி பெறுவன். ஆதலால் ஆசையைவிட்டு மற்ற அகங்காரம் மமகாரம் நீங்கப்பெற்றவனே சாந்தி பெறுவன். இதுதான் பரமநிலை; இதை அடைந்தவன் குழம்புவதில்லை. முடிவு காலத்தில் இதில் நிலைபெற்ற போதிலும் பிரஹ்ம நிர்வாணத்தை அடைவான்.’

### 2. க்ருதக்ருத்யன் (அத் 3-சுலோ 15—19)

‘இவ்வுலகில் கர்மகதியைப் பின்பற்றி செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாது இந்திரியங்கள் மூலமாக ஸுகங்களை விடாது அனுபவித்து எவன் அழுந்துகிறானோ அவன் வாழ்க்கை வீணே. ஆனால் ஆத்மாவினிடத்தே உள்ளக்கிளர்ச்சி, திருப்தி, தடையற்ற ஆனந்தம் முதலியவைகள் உடையவன் எவனோ அவன் செய்யவேண்டிய கர்மம் ஒன்றுமே இல்லை. செய்கை செய்யாமை என்பவற்றால் அவனுக்கு ஆவதும் ஆகாததும் ஒன்றுமில்லை. அவனுக்கு ஆகவேண்டிய காரியம் எந்த வஸ்துவையும் பொருத்ததல்ல. ஆதலால் நீ செய்யவேண்டிய கர்மத்தைப் பற்றில்லாது செய் இவ்வாறு செய்தால் மேலான (க்ருதக்ருத்ய) நிலையை நீ அடைவாய்.’

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது ஸு தைமீ [பகுதி 8

## விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### பீடிகை

விக்ரஹாராதனத்தின் ஆதாரத்தைப்பற்றிக் கூறுங்கால் வேதத்திலுள்ள அக்னி, ஸூர்யன் முதலியவைகளைப் பரம்பொருள் தோற்றங்களாகக்கொண்டு ஆராதிப்பதும், மந்திரசப்தங்களைக்கொண்டு, வழிபடும் பரம்பொருள் தோற்றமாக விருக்கும், சப்தப்பிரமத்தை ஆராதிப்பதும் ஆகிய ப்ரதீக (ப்ரதிவஸ்து) ஆராதனமே விக்ரஹாராதனத்திற்கு ஆதாரம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் தேவதைகளைத் தியானிப்பதற்கு ஏற்பட்டுள்ள தியான சுலோகங்களும், சிறந்த வேத உட்பொருள்களும் விக்ரஹங்கள் ரூபமாக அமைக்கப்பட, அவைகள் ஆராதிப்பவனுக்கு அவைகளைப் புகட்டும் அறிகுறிகளும் ஆகின்றன. இதனால்தான் விக்ரஹங்கள் ஞானிமுதல் பாமரன் வரையில் எல்லோருக்கும் உபயோகமாக விருக்கின்றன.

விக்ரஹங்களையே பரம்பொருளெனக் கருதி வழிபட்டு காம்யமான பிரார்த்தனை முதலியவைகள் செய்து உழலுவது பாமரர்கள் ஒழுங்காயினும், அது சற்று அறிவுண்டானவர்களுக்கும், ஞானிகளுக்கும் பொருந்தாத வழிபாடு. இவர்கள் விக்ரஹங்களை வழிபடுங்கால் எவ்வாறு வழிபடுவார்கள்; விக்ரஹங்களை எவ்வாறு மதிப்பார்கள் என்பவைகளை இங்கு கூறப்புகுவோம்.

ஆகவே விக்ரஹத்திலுள்ள ரஹஸ்யங்களை இருவிதமாக எடுத்துரைக்கலாம். அவையாவன: ஸாதாரணமாக அறிவுடையோர் நோக்கும் விதமாகிய ஈசுவர அல்லது பக்தி வழியென்றும், ஞானிகள் நோக்கும் **குரு** அல்லது **வேதாந்த** வழி என்றும் உள்ள இருவகையே. இதில்முன்வழியில் அறிவுடையோர்கள் விக்ரஹத்தை எங்கும் பாவி அந்தர்யாமியாகக் கலந்திருக்கும் கடவுளின் அறிகுறியாகக் கொண்டு,கடவுளது அனந்த கல்யாண குணங்களை விக்ரஹங்களின் ஒவ்வொரு சின்னங்களும் உணர்த்துகின்றன என்று மதித்து அக்கடவுளைத் தம்மைவிட்டுப் பொதுவாக வேறாக நினைத்து அவர் கல்யாண குணங்களில் ஈடுபட்டு நிற்பர். ஞானிகளோ அவ்வாறின்றி எங்கும் நிறைந்த ஸத்யவஸ்துவாகிய பரம்பொருள் விக்ரஹத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளி, தான் அடையக்கூடிய முடிவான நிலையாகிய ப்ரஹ்மமேயாதல் என்னும் பரம ரஹஸ்யத்தை அநேகவிதச் சின்னங்களால் உணர்த்தி தன் மனதைக் குவிய வைத்து ஆட்கொள்ளுவது என்று கருதுவர். இவ்வாறு ஞானிகள் கருத்து என்பதற்கு ஆதாரம் என்ன? என்றசங்கை உண்டாகலாம். ஸ்ரீமத் பாகவதம் ஏகாதச ஸ்கந்தத்தில் காணப்படும் **அவதூத ஸம்வாதத்தில்** யது மஹாராஜன் தத்தாத்ரேய மஹாயோகியை நோக்கி, 'இப்பேரின்ப நிலையை எவ்வாறு நீர் பெற்றீர்' என்று கேட்க அதற்கு அவர் கூறுவார்:—

தரை, புனல், கனல், கால், வானம்,
தபனம், வெண் திங்கள், வாரி,
வரையுரை அரவு, மான், கான்
வருகரி, பதங்கம், மீனம்,
மூரலளி, கணை எய்கின்றோன்,
மொழிதருங் குமரி, தேனீ
யுரைதரு புறவு, தாசி,
ஊன்கவர் அன்றில், நாகம்.
உறைந்நூல் சிலம்பி, மைந்தர்,
ஊதுவண் டெடுத்த கிடம்,
சிறந்தன இவை நாலாறும்
சிந்தையிற் குருவென் றுக்கி

மறந்தரு மவைகள் தீதாம்
மற்றவை நலனும் என்றிங்,
கறிந்தனன் இன்பம் உற்றேன்
அவ்வகை அரசே வேண்மோ.

இங்குக் கூறியிருக்கிறபடி ப்ரபஞ்சம் முழுவதையும் மோனானந்த நிலையை உணர்த்தும் குருவாகக்கொள்வது ஞானிகள் இயல்பேயானல் கோயில் விக்ரஹங்களையும் அவ்வாறே கொள்ளுவர் என்று சொல்லவும் வேண்டுமோ!

பொதுவாக நமது விக்ரஹங்களை ஞானிகளும் அறிவுடையோர்களும் இவ்வாறு கருதுவர் என்பதை ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் பின்வருமாறு கமலாம்பாள் சரித்திரத்தில் எடுத்துச் சுருக்கிக் கூறுகிறார்:

நம்முடைய பெரியவர்கள் கடவுள் மூர்த்தங்களை எல்லாம், ஞானனந்த மூர்த்திகளாக, பாவனைபண்ணியிருக்கிறார்கள். நான் அறிந்தமட்டில் வேறெவர்களும் கடவுளை இப்படி அறியவில்லை. கடவுள் அழிவில்லாத ஆனந்தமூர்த்தி. கணபதியோ ஆனந்தம் பொழிந்து, அந்த ஆனந்த வெள்ளத்தில் கண்சிறுத்த யானை ஸ்வரூபம். ஸுப்ரஹ்மண்யரோ மயில் வாஹனத்தின்மேலேறி ஆனந்தப் பிரமை பாடுகிறார். மஹாவிஷ்ணு பாற்கடலைத் தேடிப் பள்ளிகொண்டிருக்கிறார். நித்திரை வராவிடிலோ கருடன்மீதேறி ஆனந்தமாய் பவனி வருகிறார். நடராஜரைப்பற்றித் தான் கேட்கவேண்டியதேயில்லை. 'சித் ஸபையில் ஆனந்த நர்த்தமிடும் கருணாகரக் கடவுளே' என்று நன்றாய் (தாயுமானவர்) சொன்னர்.

வேதாந்த உல்லாஸத்திலும் 'நாட்டிய உடைகள், பழமையான நாற்காலிகள், புகைக் கப்பல்கள் ஆகிய, நாகரீகம் உடையோரால் நன்கு மதிக்கப்பட்ட விஷயங்களைக் கொடுத்து நம்மை மேன்மைப்படுத்தாவிடினும், நம்முன்னோர்கள், வெள்ளியங்கிரி, தங்கமலை, பாற்கடல், தெய்வ நதி, காமதேனு, கல்பகவிருக்ஷம்,வெள்ளையானை, கருணையங்கடவுள், ஆழ்ந்தவேதாந்தம், ஆகிய இவைகளை வைத்திருக்கின்றனர். இவைகளை ஒருவாறு குறிப்பாகக் காட்ட இம்மண்ணுலகிலும், ஹிமாலயம்,கங்கைமுதலியவைகளும் அமைந்து கிடக்கின்றன. நமக்கு என்னகுறை?' என்று கூறியிருக்கிறார்.

இம்மாதிரியான கூட்டத்தில் சேர்ந்தவை விக்ரஹங்களும். இதற்கேற்ப நாம் வழிபட்டு வரும் சிற்சில விக்ரஹங்களுள் அடங்கியிருக்கும் இருவிதமான உட்கருத்தை ஒருவாறு இங்கு வெளியிடுவோம்.

### 1. கணேசர்

யானை முகம் பருத்த தொந்தி சதுர்புஜங்களுடன் வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ரூபமாக இந்த விக்ரஹம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் யானைத்துதிக்கையில் மோதகம் அல்லது அமிர்த கலசம் கொடுக்கப்பட்டு அதை இடக்கை ஒன்றால் பிடித்திருப்பதாக அமைக்கப்பட்டிருக்கும். மற்றைய இடக்கையில் பாசமும், ஒரு வலக்கையில் சங்கமும் மற்றொரு வலக்கையில் அங்குசமும் காணப்படும். வலக்கொம்பு ஒடிந்திருக்கும். இவருக்கு வாஹனம் மூஷிகம். இவருக்கு முக்கியநாள் சதுர்த்தி. இவர் நித்ய ப்ரஹ்மசாரி. இவர் கோயில்கள் கண்டவிடமெல்லாம் இருக்கும். எந்தக்காரியம் தொடங்கியபோதிலும் இவரை முதலில் பூஜை தியானம் முதலியன செய்துவிட்டுத்தான் தொடங்கவேண்டும். இவருக்கு மோதகமே அதிகப்ரீதி.

இவ்வாறு அதிவிசித்திரமான உருவத்தைக் கண்ட உடனே இதை நேரிடக் கடவுள் எனக் கருதி வழிபட்டால் ஒருவேளை ஞானக்கண்ணுக்கு இது எதிர்ப்படுமாயின் இதைக்கண்டு பயப்பட நேரிடுமே ஒழிய வேறில்லை என்று தோன்றும். ஆகவே இந்த விசித்திரபிம்பத்தில் உட்கருத்து ஏதோ ஒன்று இருத்தல்வேண்டும். இல்லாவிடில் இதை நம்பெரியோர் சிறந்ததெனக் கொண்டாடி வழிபட்டிருக்க மாட்டார்கள். கணபதி விஷயமான புராணமும் மதமும் உபநிஷத்தும் ஏற்பட்டு ஓங்கியது என்பதும் இதன் உட்கருத்தின் சிறப்பையே குறிக்கும்.

கணபதியின் உருவம் ப்ரணவத்தின் ரூபம். இதற்கேற்பவே ப்ரணவகணபதி என்ற வசன

மும் வழங்கி வருகிறது. ஒடிந்த கொம்பு ப்ரண வத்தின் சுழி இருக்குமிடம். ப்ரணவ எழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கைகள் வழியாகக் கிரீடத்தைச் சுற்றிச் சென்று இடக்கை பாசம் வரையில் வந்து திரும்பி வளைந்து நெற்றித் திலகம்வரையில் போய் துதிக்கை வழியாகக் கீழ் இடக்கை வந்து, கால்வரை இறங்கும். இங்கு கூறப்பட்ட ப்ரணவ உருவம் கிரந்தாக்ஷரம்: மற்றைய பாஷைகளில் உள்ள ப்ரணவ உருவமும் சற்றேறக்குறைய இதைப்போலவே இருக்கும். யானையின் சப்தமும் ப்ரணவநாதம் போல இருப்பதால் இந்த விக்ரஹத்திற்கு யானைமுகம் அமைக்கப்பட்டது. ஆகவே ப்ரணவம் எவ்வாறு ஸகல சப்தங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறதோ அதுபோல ஈச்வரனும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறார் என்பதை இந்த உருவமே குறிக்கும். வலக்கையில் இருக்கும் சங்கமும் அதன் நாதம் தலைகீழாக நிறுத்துங்கால் உள்ள உருவம் இவைகளும் ப்ரணவத்தையே உணர்த்தும். ஸகல வேத மந்திரங்களும் ப்ரணவத்தால் தொடங்கப்படுவது போல ஸகல காரியங்களும் கணபதி ஆராதனையால்தான் தொடங்க வேண்டும். இரு கைகளிலுள்ள பாச அங்குசங்கள் ஈசுவரன் ஜீவராசிகளை அவரவர்கள் கர்மங்களால் பிணித்து அவைகளின் பலன்களைக் கொடுப்பவர் என்பதைக் காட்டும். வலக்கையில், மோதகம் அல்லது அமிர்தகலசத்தை உடைய துதிக்கையைப் பிடித்திருப்பது, அழிவற்ற தன்மை நிஜானந்தம் (மோதகம்) முதலிய கல்யாண குணங்கள் அவரிடம் குடிகொண்டிருப்பது என்பதைக் காட்டுகின்றது. ஆகவே அதையும் அனுக்கிரஹத்தால் ஆராதிப்பவர்களுக்கும் கொடுக்கவல்லவர் என்பதையும் காட்டும். பெரிய வயிறு ஸகல உலகங்களும் தன்னுதரத்துள் அடங்கும் என்பதைக் குறிக்கும். இவர் வாஹனம் சிறிதாகிய மூஞ்சூறு: இவர் பரிவாரங்கள் சிறியனவாகிய எறும்பு தேள் கணங்கள் என்பனவைகள், கடவுள் மஹத்துக்கு மஹத்தாயும், அணுவுக்கு அணுவாயும் உள்ளவர் என்பதை விளக்கும். இவர்பெயர் விநாயகர் என்பது நாயகரற்றவர், ஒப்புயர்வற்றவர் என்பதைக் குறிக்கும். ஆகவே கணபதி விக்ரஹம், தன் உருவத்தாலும் சின்னங்களாலும் வேதரஹஸ்யமாகிய ஈசுவரஸ்வரூபத்தை நன்கு உணர்ந்து ஆராதிப்பவர்களுக்கு விளக்குகின்றது.

குரு தமது சிஷ்யனை நோக்கி என் ஸம்பந்தப்பட்ட ப்ரபஞ்சம் கர்மம் செய்தல் அதன் பலனை அனுபவித்தல் ஆகிய வெல்லாம் என் வசப்பட்டுவிட்டது. என்னை அவைகள் தாக்கா, கடவுளுடன் ஒன்றுகி நிற்றலாகிய அழிவற்ற ஆனந்த நிலையிலிருக்கிறேனுகையால் எல்லாம் என்னுள்ளும், என்னை எல்லாவற்றுள்ளும் காணும் நிலையிலிருக்கிறேன் என்ற தமது அனுபவத்தை வெளியிட்டு அவ்வாறே நீயும் இருக்கிறாய் அனுபவித்து உன்னுள் உணர் என்று கணேச விக்ரஹம் ஞானிகளுக்கு உபதேசிக்கும் குருவாக விளங்கும். இந்த விஷயத்தில் உள்ள சிறப்பான அர்த்தங்களையும் வீராஸனத்தின் உட்கருத்தையும் பின்னர் நடராஜ தக்ஷிணாமூர்த்தி விக்ரஹங்களைப்பற்றி விவரிக்குங் கால் விஸ்தாரமாக வெளியிடுவோம். பெரும்பாலும் ஸகுண உபாஸனைக்கே ஏற்பட்ட மூர்த்தியாகிய கணபதியினிடத்து அதிகமாக வேதாந்த அர்த்தத்தைப் புகுத்திக் கூறுவது நியாயமன்று. ஆதலால், இதைக்கூட ஞானி தன் மனோநிலைக்கு இசைய பொருள்படுத்தி ஆனந்திப்பன் என்பதைக் காட்ட மாத்திரம் முற்கூறிய உட்பொருள் எழுதப்பட்டதே ஒழிய பிறர்களுக்கு எடுத்து விஸ்தாரமாக வெளிப்படுத்தி ஒருவித ஆராதன வழியை ஏற்படுத்தக் கூறியதல்ல.

### 2. ஸுப்ரஹ்மண்யர்

இப்பதத்திற்கே நல்ல ப்ரஹ்மத்தன்மை வாய்ந்தவர் என்று பொருள். மற்ற ஆயுதங்களாலும் வழிகளாலும் அறுத்தள்ளப்பட்டும் அநேக விசித்திர உருவங்களோடு எழுந்து கொண்டே

பிருந்தது. அதிக ஆயுளால் வயது முதிர்ந்து மஹாபலம் வாய்ந்த அஸுரராஜனை சூரபத்மனை இவர் வெகு இளம்பிராயத்தில் வேல் என்னும்புதிய ஆயுதங்கொண்டு வெட்டித்தள்ள, அப்பொழுதும் உடலை மயிலாகவும், தலையை கோழியாகவும் மாற்றிக்கொண்டு அவன் வர, மயிலின் பேரில் ஏறிக் கோழியைக் கொடியாகப்பிடித்து அவனை வசம் செய்தவர். இதன் பின்னர் இவரிடம் இரண்டு தேவிமார் வந்து சேர்ந்தனர். வேறொரு அவஸரத்தில் இவரே தம் பிதாவாகிய பரமசிவத்திற்கு ப்ரணவப்பொருள் கூறி, ஸாமிநாதன் என்று பெயர் பெற்றவர்.

கடவுள் ப்ரபஞ்சமாயையைத் தன் வசப்படுத்தும் ஞானஸ்வரூபி. எவ்விதமான உருவுடன்வந்த போதிலும், எவ்வித வித்தைகளாலும் அடக்க முடியாதிருந்தபோதிலும் மாயை அவர் வேலாகிய ஞானத்திற்கு அடங்கிவிடும் என்றும், இவர் கையிலுள்ள திரிசூலம் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் முதலியவைகள் தன்னிடமிருந்தே உண்டாகின்றன என்றும், இவரை இரண்டு தேவிமார் வந்தடைந்தது, பக்தி ஞானம் இவரை அடைய ஏற்பட்டுள்ள மார்க்கம் என்றும் ஸுப்ரஹ்மண்ய விக்ரஹம் வெளிப்படுத்தும்.

இதுபோல ஞானியும், எவ்விதத்தில் கற்ற வித்தையைக்காட்டியபோதிலும் அப்பொழுதும் உருமாறி வரும் அனுதியாய் உள்ள அவித்தை ரூபமான அகங்காரம் நிஷ்டானுபூதியால் அப்பொழுதே எழுந்ததான பால்ய ஞானமாகிய அலங்கம் என்னும் வேலால் சிதைவுண்டு தன் வசப்பட்டதையும், தன்னிலையை அடைய பக்தியும் ஞானமும் வேண்டியது அவசியம் என்பதையும், தன் ஸம்பந்தப்பட்ட ப்ரபஞ்சம் தன் இச்சாமாத்திரம் என்பதையும் ப்ரணவ ரஹஸ்யமாகிய பரம்பொருள் இத்தன்மையது என்பதையும் வெளிப்படுத்தும் ஆசார்யர் ஸுப்ரஹ்மணியர் என்று கருதுவன்.

### 3. மனிதரூபமான விக்ரஹங்கள்

இவைகள் பொதுவாக ஒரு மனிதன் நிற்கிறது போலவும், அவன் வலது கையை அமைதிக் குறியாகத் தூக்கிப் பிடித்து, இடது கையைக் கீழ் நோக்கிப் பிடித்திருப்பது போலவும், மற்றைய இரண்டு கைகளில் மான்மழுவும் அல்லது சங்கு சக்ரமும் ஏந்தி நிற்பதாகவும் காணப்படும். சில விக்ரஹங்களில் கீழ்நோக்கியகையில் காலைச் சென்று எட்டும்கதை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அருகில் ஒரு அம்பிகை விக்ரஹம் ஒன்று காணப்படும். இது பொதுவாக மனித ரூபமான விக்ரஹங்கள் அமைப்பு.

இவைகளைக் காணும் பக்தன், கீழ்நோக்கிய கையால் தமது பாதத்தைக் காட்டி அதுவே வழிபடுவன் கதி, என்பதையும் அபயமுத்திரையால் அவனுக்கு அதனால் சாந்தி உண்டாகும் என்பதையும் குறிப்பாகக்காட்டுகிறார் ஈசன் என்றும், அவர் தமது ஸ்ருஷ்டியாதிகளுக்குக் காரணமான சஞ்சல ஸ்வபாவமுடைய மான்போன்ற மாயையை தம்வச முடையவர்; மழுவாகிய கர்மபலன் கொடுக்கும் சக்தி வாய்ந்தவர், அல்லது சகத் காரணமாகிய நாதம் உண்டாக்கும் சங்கால் ஸ்ருஷ்டியாதிகளைத் தம்வசம் உள்ளவர் சக்ரம் போல ஆதி அந்த மற்றவர் என்பதையும், கதை காலைத்தொட்டு நிற்பதால் புத்தியை பகவான் பாதார விந்தத்தில் செலுத்தவேண்டும் என்பதையும் விளக்கி தம்மை அடைவதற்குச் சிரத்தையே முக்கியம் என்பதை தம் அருகிலுள்ள அம்பிகை மூலமாகக்காட்டுகிறார் கடவுள், என மதிப்பன்.

ஞானியோ அபயஹஸ்தால் சாந்திமுதலியவைகளைக் குறித்து, கீழ்நோக்கிய கையால் இன்றே இப்பொழுதே சிரத்தையுடன் அடைய முயன்றால் அது கிட்டுவது, இறந்தபின் தான் கிடைப்பது என்று எண்ணவேண்டாம் என்று

ஆசார்யன் உபதேசிப்பதாகக் கொள்ளுவான். உடனே

நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பிலதனை உணர்ந்து உணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள்
செத்துக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே.

என்று கூறிய நம்மாழ்வார் வாக்கு யாருக்குத்தான் கடவுளின் அபயஹஸ்தம், கீழ் நோக்கிய ஹஸ்தம் இவைகளைக் கண்டவுடன் ஞாபகம் வாராமலிருக்கும்! இவ்வாறு உயிருள்ள போதே பெறக்கூடிய பரமநிலையில் தாம் இருப்பதால் தமக்கு மான்போலச் சலிக்கும் மனமும், அது ஸம்பந்தமான விஷயங்களைத் திடமாகச் சேதிக்கும்படியான அஸங்கம் என்னும் மழுவும் எல்லாம் வசப்பட்டிருக்கும், சங்கரூபத்தால் குறிக்கப்படும் காரணத்தால் உண்டாகும் ப்ரபஞ்சம் எல்லாம் தம் வசம், தாம் சக்கரம்போல ஆதி அந்தமற்ற நித்யர் என்று ஆசார்யர் தமது அநுபவ நிலையை உணர்த்தி சிரத்தை உடன் அநுஷ்டித்தால் உனக்கும் இந்நிலை வரும் என்று அருகிலுள்ள முக்தி காந்தாவால் வெளியிடுகிறார் என்று மதிப்பான் ஞானி.

ஆகவே இதுவரையில் கூறிவந்தவைகளிலிருந்து பக்தன் விக்ரஹங்களைக் கடவுளென மதித்து அவர், தம்முள்ளும் எங்கும் பாவி தொழில் நடத்துபவர், அவரன்றி ஓர் அணுவும் அசையாது என மதித்துப் பரவசப்படுவான் என்பதும், ஞானியோ எங்கும் உள்ள பரம்பொருள் தாமாகி நின்று, சிஷ்யனும் அவனுள்ளிருக்கும் பரம்பொருளை அவ்வாறு உணர்ந்து ஒன்றுபட்டு அந்நிலையை அடையும்படி, அநுக்கிரஹிக்கும் குருமூர்த்தமாகக் கொண்டு விக்ரஹங்களை வழிபடுவன் என்பதும் விளங்கும். இது போலவே மற்றுஞ்சில விக்ரஹங்களைப் பின்னர் எடுத்து விளக்குவோம்.

# கம்பநாடர் சரித்திர விளக்கம்

## LIFE OF KAMBAN

281-வது பக்கத் தொடர்ச்சி

இது தற்காலம் தேரழந்தூர் என வழங்கிவருகிறது. மாயூரமென்ற ஸ்தலத்திற்கு மேற்கு, குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கு $2\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. சைவசமயாசாரியர்களால் பாடல்பெற்ற சிவக்ஷேத்திரம் 274. அவற்றுள் காவேரி நதியின் தென்கரையிலுள்ள 127-ல் இது ஓர் திவ்ய க்ஷேத்திரம். வைஷ்ணவாசாரியர்களான ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பெற்ற 108 திருப்பதிகளினுமிதொன்று.

### திருஞான சம்பந்த மூர்த்திகள்

அருஞானம் வல்லாழந்தை மறையோர்
பெருஞான முடைப்பெருமா னவனைத்
திருஞான சம்பந்தன் செந்தமிழ்கள்
உருஞான முண்டாமுணர்ந்தார் தமக்கே."

### சுந்தரமூர்த்திகள்

காட்டேர் கடலே கடம்பூர் மலையே கானப்பேருராய்
கோட்டேர் கொழுந்தே யழுந்தூரரசே...

### திருமங்கையாழ்வார்

தந்தைகாலிற் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண்
வந்தவெந்தை பெருமானார் மருவிநின்ற வூர்போலும்
முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாள
ரந்திமூன்று மனலோம்பு மணியார்வீதி யழுந்தூரே."

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியர் பொருளதிகாரவுரையில் எடுத்துக் காட்டியது மிவ்வழுந் தூரேயாம்.

மன்றே புகழுந் திருவழுந்தூர்
என சடகோபாந்தாதியினும்
சிரணிசோழ நாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்
என ராமாயணத்தும் கூறப்படுவது காண்க."

இனி கம்பநாடர் கதையை எடுத்துக்கொள்வோம்.

ஆதித்தன் என்னும் ஒச்சன் தம்மினத்தவர்களோடு ஜாதி முறைமையின்படி அம்மன் சந்நிதியிற் கூட்டம் கூடி, தனக்குக் காஞ்சியில் கடவுள் அருளால் கிடைத்த அப்பிள்ளையின் வரலாற்றைக் கூறித் தங்களில் பெரியோருடன் இப்பிள்ளைக்கு என்ன பேரிடலா மென்றுலோசித்தான். அதனைக் கேட்டவர்கள் மகிழ்ந்து கம்பநாட்டிற் கம்பருளாற் கிடைத்த காரணம்பற்றி கம்பநாடன் என்பதே தகுதியென்று நாமகர்ணம் சாற்றி தேவியின் பிரசாதமான திருநீறளித்து (கண்டி) உருத்திராக்ஷமாலை முன்னூல் முதலிய பூசாரிச்சாதிக் கேற்ற கோலம் புனைவித்து, தத்துக்கொண்டாரோ, தாங்கள்தான் பெற்றுரோவென அவ்வூரா ரெல்லாம் கொண்டாட, அனைவருக்கும் உண்டி யளித்து மகிழ்ந்தார்கள்.

இனி ஒச்சர் மரபைச் சிறிது விளக்குவோம். ஓச்சர் என்பார் குயவர்களின் ஒரு பகுதி. குயவரிற் தாதனில்லை. தாதனிலாண்டியில்லை என்பதொரு பழமொழி. அதாவது குயவரில் வைஷ்ணவாசாரமுடையவரே இல்லை. அதுபோல் (தாதர்) யாதவர் இனத்தில் சைவாசாரமுடையவர் இல்லை என்பதாம். ஸ்ரீரங்கத்துக் குயவர் மாத்திரம், நெற்றியில் நாமதாரணம் செய்துகொள்வர். அவ்வூரில் மற்ற ஜாதியாரிடத்திலும் இந்தச் சம்பிரதாயம் காணலாம்—கோவில் சம்பந்தமான வேலையுள்ளோர்க்கு இந்த நிர்பந்தம் பிற்காலத்துண்டானது. இது வயிற்றுப்பிழைப்பு என்றணிவார். இக்குயவர்கள் பிர்மசிருட்டியன்றிச்சிவனுல்சிருட்டிக்கப்பட்டனர்—அதனுற்றுனிவர்களை - கு, சிவன் கு, சத்தி - பூமியில் சிவசத்தி யம்சங்கள் விளங்க இப்பெயரிட்டனர்களென்றும் குலாலபுராணம் கூறும்) அன்றியும் ஆந்திர தேசத்தில் இவ்வருக்கத்தில் (மொல்லம்மாள்) என்னும் ஓர் குசப்பெண் ஸ்ரீமத்ராமாயண மியற்றித் தன்போரால் (மொல்லராமாயணம்) என பத்யகாவியமாக விளங்கச் செய்திருப்பது தற்காலத்தில் யாவருமறிந்த விஷயம். அக்காவியம் ஆங்கில கலாசாலைகளிலும் பாடம் நிகழ்ந்து வருகிறதும் காண்க. இவ்வர்க்கத்தின் ஓர் பகுப்பினராகிய ஒச்சர் குயவர்கள்போல் (பாண்டவிர்த்தி) சட்டிபானை செய்யும் தொழிலினரல்லர். இவர்கள் கிராம தேவதையாகிய, (பிடாரி) காளி கோவில் பூஜகர்களாம். இது நமது தென்னுடு முழுதும், ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள கோவில்களில், இவ்வருக்கத்தினரே பூஜை செய்து வருவதையும் அதற்காகக் கிராமங்களில்மானியம் உம்பளம் நெடுங்காலமாகப் பூர்வீக ராஜாங்கத்தாரால் விடப்பட்டிருப்பதையும் காணலாம். இவர்களுக்கு விபூதி, ருத்ராக்ஷம், முன்னூல் இயற்கை லட்சணம். இவ்வோச்ச மரபினர்கள் சென்னை, தஞ்சை, திரிசிரபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய பல இடங்களிலும் வசிக்கிறார்கள்.

இவர்களில் சிலர் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதம், தென்மொழியாகிய தமிழ் முதலிய பல பாஷைகள் பயின்று கவிகளாகவு மிருக்கிறார்கள். சிலர், சங்கீத வாத்திய சாமர்த்தியர்களாகவுமிருக்கிறார்கள். சிலர் வைத்தியம், சோதிட முதலிய தொழில் பயின்று வருகிறார்கள். அனேகர் தென்னாட்டில் தங்களியற்பெயரோடு கம்பர் என்னும் பட்டப்பேரும் தரித்து வழங்கி வருகிறார்கள்.

ஆதித்தன் தன் மகனை கம்பநாடனை நாடோறும் காலையில் அம்மன் கோவில்வாயிலில், பொழுதுவிடியுமுன் சங்கூதும்படி சட்டமிட்டு, பூஜா காலங்களிலும் தன்னுடன் வைத்துக்கொண்டு பூஜா விதானங்களையும் தெரிவித்து வந்தான்.

"ஈடார் தருஞ்சோழ நாட்டிலுருக்
திருவழுந்தூரினிற்
பீடாருமோச்சக்குலத் தொருவனவ்வூர்
பெருங்கோயின்வாய்
நாடானுதிக்குந்தொறுஞ் சென்று
சங்கூது நல்வேலையான்
கோடாமலது செய்து வருநாளி
லொருநாளிற் கூராயிடை"

அத்திருவழுந்தூருக்கு அடுத்த மேல் கிராமமாகிய வெண்ணைநல்லூரில் வேளாளர் குலதிலக

ராகவும், மிக்கசிறப்பாகவும் வாழ்பவர். பரம்பரையாகவே பெரிய குடித்தனமிராசுடையவர். தமிழ் நாட்டரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டவர். பெருங் கொடையாளர். கவிவாணர்களெல்லாம் கற்பகம் என்றுபலகாலும் பாராட்டத்தக்கவர் (சடையப்ப வள்ளல்)இவருக்குப் புதுவைச் சேதிராயர்,புதுச்சேரிக்குடையார், திரிகர்த்தாரயர், பிள்ளைப் பெருமாள் எனப் பல சிறப்புப்பேர்களுமுண்டு.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டுவந்த வஞ்சிமார்த்தாண்டன் மூத்த திருவடிகள் சேரமான் பெருமான் என்னுமரசர் சடையப்ப பிள்ளைக்கு விடுத்ததாக அதன் பக்கத்து கிராமம் மூவலூர் கோவில் கல் வெட்டில் காணப்படுகிற

காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தரும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து."

"பேராசைப்பிள்ளை பெருமாளைச் சோதிப்பனே" என்ன கவிகளால் இவர் சிறப்புப்பெயர்கள் வெளியாகின்றன. இவர்க்குக் கண்ணப்பப்பிள்ளை, சராமபிள்ளை என்ற இரண்டு (பாகு) கைகள் போன்ற சகோதரர்களுண்டென்பதும், சேதுப்பிள்ளை என்ற அருமைக் குமாரருமுண்டென்பதும் ஸ்ரீராமாயணத்தில் விளக்கப்படுவதுங் காண்க."

இவர் தந்தை சங்கரபிள்ளை. இடம் உதவித் தொழில் புரிந்திருந்த ஒட்டக்கூத்தனை அக்காலத்தில் கல்விபயில்வித்து கவிராக்ஷஸன், கவுடப்புலவன் என உயர்த்திச் சிறப்பித்த காங்கேயன் என்னுமாசன் நன்றிபாராட்டிய கூத்தப்புலவரைக் கூறிய

புதுவைச் சடையன் பொருந்து சங்கானுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களிறு கைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் களங்கள் வியந்துகாங் கயன்மேல்
கூறுநா லாயிரக் கோவைகொண் டியர்ந்தோன். என்ற

கம்பநாடர் தந்தை ஆதித்தன் உத்திரவுப்படி தேவியின் கோயில் பணிவிடையி லமைந்து பூஜை வேலையிற் பழகி வருநாளில்,

ஒருநாள் வெண்ணை நல்லூர் மகா பிரபுவாகிய சடையப்பபிள்ளை திருவழுந்தூர் காளி கோயிலுக்குத் தெரிசனார்த்தம் வந்தார். ஆதித்தன் மிக்க பிரீதியோடு தங்கள் நாட்டுத்தலைவராயும், தங்கள் காளிகோயிலுக்கு மானியம் விட்டிருப்பவராயும், தேர் திருவிழா நடத்துபவராயுமுள்ள சிமான் சடையப்பபிள்ளை வரவே கண்டு எதிர்சென்று மிக வணக்கத்துடன் உபசரித்து, கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய், தேவிக்குத் தீபாராதனை முதலியன செய்து மிக அன்போடு விபூதி, திருமாலை முதலிய பிரசாதங்கள் அளிக்கும்போது, பிள்ளையவர்களும் மிக்க பக்தியோடு சாஷ்டாங்கமாகப் பரதேவதையின் சந்நிதியிற் பணிந்து எழுந்து பெற்றுக்கொண்டு மிக்க சந்தோஷத்தோடு ஆதித்தனைப் பார்த்து உம் பக்கத்திலிருக்கும் இப்பையன் யாவன்? குட்டிப்பூசாரியோ? என்று கேட்டார். ஆதித்தன் மிக வியத்துடன் சிரித்துக்கொண்டு ஓ, ஓ, இது அவ்விடத்திற்குத் தெரியாதோ அடியேன் பாக்கியம், நமது பையன்தான் என்றான்.

---

கவியால் சடையப்பபிள்ளை தந்தை சங்கர பிள்ளையென்றது வெளியாகிறது. வெண்ணெய் நல்லூர் என்பது தற்காலம் கதிராமங்கலம் என வழங்குகிறது. இது முற்கூறிய குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கில் இரண்டுமெயிலுள்ளது. வெண்ணெய் நல்லூர் என்ற பெயரை மாற்றி கதிர்வேய். மங்கலம் எனக் கம்பரால் அமைக்கப்பட்டதென்றும் அது மருவி கதிராமங்கலமென வழங்கி வருகிறதெனச் சொல்லுவார். அன்றியும் அவ்வூர் வெள்ளைப்பிள்ளையார் கோவிலிலிருக்கிற செப்புவிக்கிரகத்தின் பீடத்திலும் வெண்ணை நல்லூர் பிள்ளையார் என்று எழுத்துக்கள் வெட்டியிருக்கின்றன. இவ்வூரில் சடையன் திடல், கம்பர்திடல், என்னு மிடங்களின்னும் அறிகுறியாக விளங்குகின்றன. இதன் விருத்தாந்தம் இனி சரித்திரத்தால் வெளியாகும்.

அதற்குச் சடையப்ப பிள்ளையவர்கள் 'இதேது புதுமை ? உமக்கு இப்படி ஒரு பிள்ளை யிருக்கிறதோ நான் அறியேனே ?' என்றார். ஆதித்தன் 'ஆண்டவனே எல்லாம் ஈசுவரி கடாக்ஷம். அடியேன் சில நாளைக்குமுன் காஞ்சிக்கு யாத்திரை சென்றேனல்லவா, அப்போது பல ஸ்தலங்களுக்கும் போய்த் தெரிசனம் செய்துகொண்டு கடைசியில் காஞ்சி சென்று அக்கடவுளைப் பணிய, அக் கம்பாருளால் இப்பிள்ளையைப் பெற்றேன் ; இவ்வளவு காலம் பிள்ளையில்லாக் குறையுமற்றேன்' என நடந்ததைக்கூற இதையெல்லாம் சடையப்ப பிள்ளை கேட்டு மிகமகிழ்ந்து அப்பையனைச் சமீபத்திலழைத்துத் தடவிக்கொடுத்து, உற்றுப் பார்த்துப் பார்த்துக் களிப்படைந்து 'நல்லது பையன் உமக்குக் கிடைத்தது தேவியின் கிருபையே! இப்பையன் மிக்க மேன்மை யடைவான், இவனால் நீர் வெகு சிறப்பை யடைவீர்' என்று பின்னரும், சடையப்ப வள்ளல் 'இவன் பெயரென்ன'வென ஆதித்தன் 'கம்பன்' என்றான். 'நல்லது தக்க வயதை அடைந்திருக்கிறானே? வித்தை என்ன நிலைமையிலிருக்கிறது' என, ஆதித்தன் 'ஆண்டவனே, அதுதான் பூச்சியம். இனிமேல்தான் ஆரம்பஞ்செய்யவேணும். பூஜை செய்வான். சாதி முறை கொஞ்சம் பழக்கி யிருக்கிறேன் அன்றி வேறில்லை' என்றான். அதைக் கேட்டுச் சடையப்ப பிள்ளை 'அப்படியா, அது நியாயமல்ல. அவசியம் படிப்பிக்கவேண்டும். மனிதர்களில் யாவரே யாயினும் கல்லாத மாந்தர், நெல்லுடன் பிறந்த பதரன்றோ, அவர்க்கு இவ்வுலகத்தில் என்ன இன்பம் உண்டாகும். படியாதவர்களுக்கும் நாற்கால் பிராணிகளாகிய மிருகங்களுக்கும் ஏதாவது பேதம் உண்டோ ? இல்லை. ஆகையால் அது அவசியம் வேண்டுவதே. இக்கல்வியை அவர்களுக்குப் புகட்டுவது பெற்றோர் கடனே. நீர் அதை எத்தனியாதது நியாயமன்று. ஆயினும் இப்பிள்ளையைக் கண்டவுடனே எனக்கு மனது ஒருவிதமாகச் சந்தோஷமடைந்தது. நான் என்ன உதவிசெய்யலாம் என்றாலோசித்தேன். நீர் இதைச் சொன்னபிறகு, எக்காலத்துமழியாப் பெரும் பொருளாயும், எவற்றினும் மேன்மை யுடையதாயும், நீங்கா நெடுந் துணையாயும், இம்மை மறுமைப் பயன்களை யளிக்க வல்லதாயுமிருக்கிற கல்வியினும் கைகண்ட பொருள் வேறுண்டோ ? இல்லை. ஆகையால் அப்பொருளை உம் புதல்வனுக்கு நானே உதவி செய்விக்கிறேன்' என்றார். அதைக் கேட்ட ஆதித்தன் மிக சந்தோஷித்து 'ஆண்டவனே ! நாங்கள் என்றும் தங்களை அடுத்தோர்களாகையால், எங்கள்மேல் கிருபைசெய்து காக்கத் தாங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். எல்லாந் தங்களுடையது. தங்களிஷ்டப்படி நடத்திக்கொள்ளலாம். ஈசுவரி காப்பாற்றுவாள்' என்று, பையனைப் பார்த்து 'அப்பா கம்பா, எல்லாம் கேட்டுக்கொண்டனையா. நீ தேவியை நமஸ்கரித்து ஐயாவுடன் போ. அவர்கள் சொன்னபடியே கேட்டு நட. நம்மை என்றும் காப்பாத்தும் எஜமான்கள்' எனக், கம்பனும் அப்படியே அம்மையைப் பணிந்து தந்தை உத்திரவையும்பெற்றுக்கொண்டு சடையப்ப பிள்ளையுடன் மிக்க விநயமாய்ச் சென்று வெண்ணெய் நல்லூரை யடைந்தான்.

சடையப்ப வள்ளலும் தன் கிராமத்தில் தன்னாலமைக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயராகிய கணக்காயரிடத்தில் ஒப்பிவித்து, ஐயா இப்பிள்ளைக்கு மிகச் சிரத்தையாய்க் கல்வி கற்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்.

அவருமப்படியே சம்மதித்து ஒரு நல்ல நாளில் அக்ஷராப்பியாசந் தொடங்கினர். சடையப்ப வள்ளலோ அன்னம், வஸ்திரம் முதலிய வளித்துத் தன் மக்களினு மிக்க அன்பு பாராட்டிக் கவனித்து வந்தார்.

கம்பன் பள்ளியில் தன்னொத்தவர்களோடு படிக்கத்தொடங்கி மாந்தர்க்கினிய கண்ணெனத் தகுவதாகிய, எண்ணு மெழுத்தும் பயின்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருளிச்செய்த திருக்குறள் பாடம் பெற்றான். ஆனாலும் இளம் பருவத்தில் புத்தி கொஞ்சம் மந்தகுணத்தால்

மூடப்பட்டிருந்தது. ஆயினும் பாடம் படிப்பதில் சோம்பலில்லை. மனதில் படிவது கடினமாயிருந்ததால் அடிக்கடி சிந்தனை செய்யவேண்டிய தவசியமாயிருந்தது. இதற்குக் காரணம் 'இளமையிற்கல்' என்னுமொழிக்கு மாறாய் கொஞ்ச முதிர்ந்த பருவத்தில் கல்வி தொடங்கியதேயாம்.

அப்பால் சிலநாளைக்குப்பின் திருவழுந்தூரில் சடையப்ப வள்ளல் பிரதி வருஷங்களிலும் நடத்துகிற அம்மன் திருவிழா வந்தது. வெண்ணெய்நல்லூர் ஜனங்களெல்லாம்திருவழுந்தூருக்குச் சென்றார்கள். பள்ளிக்கூடமும் விடுக்கப்பட்டது. சடையப்ப பிள்ளை உத்திரவின்பேரில் வாத்தியார் தம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளோடு திருவழுந்தூர் சென்று, தேவியாலயத்தில் தோரணம் புனைதல், மலர்களெடுத்தல், தொடுத்தல், தண்ணீர் தெளித்தல், முதலிய வேலைகளை வழக்கம்போல் பையன்களைக் கொண்டு செய்வித்தார்.

கம்பனோ தந்தையுடன் கலந்து கோயிலுக்குள் போய் அபிஷேக திரவியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் மறுநாள் பாடமாகிய

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

என்னும் குறளை மனனம் செய்துகொண்டேயிருந்தான். அதற்குள் தகப்பனாகிய ஆதித்தன் 'அப்பா! கம்பா! நாழியாச்சுது. எஜமான் வந்து விட்டார்கள். அபிஷேகம் செய்யவேண்டும், நீ சீக்கிரம் அம்மன் திருவாபரணம், திருமாலை, பரிவட்டம முதலியதை மாற்றி ஜாக்கிரதை செய்' என்றார்.

அப்போது வாத்தியங்கள் முழங்க வாரம்பித்தன. கோவில் பிரகாரத்தில் பலிக்காக அனேகம் கடாக்களைக் கொண்டுவந்து நிறுத்தவும் மே, மே, என்று கதறத் தொடங்கின.

கம்பன் சந்நிதித் திரையை இழுத்துவிட்டு உள்ளே சென்று (அகண்டத்தை) தீபத்தைத் தூண்டினான். வாயினால் தனது பாடத்தை மறவாமலிரைந்து சொல்லிக்கொண்டே திருவாபரணங்களைக் கழற்ற வாரம்பித்தான். இவனது பூர்வஜன்ம புண்யமும் பரிபாகமடைந்தபடியால், அம்மன் திருவுளம் மகிழ திருமறைப்பொருளாகிய அக்குறள் பாட்டொலியும், கதறுகிற ஆட்டொலியும், லோகமாதாவினது திருச்செவியில் செவ்வையாய் நுழைந்ததும், உடனே ஜெகதீசுவரி திவ்ய சுந்தர வடிவத்தோடு பிரசன்னமாகி மந்தஹாஸ வதனத்தோடும் "குழந்தாய் கம்பா! உனக்கென்ன வேண்டும்" என்றார். கம்பன் திடுக்கிட்டு இதேது சப்தம் என்று பிரமித்து, சுற்றுமுற்றும் பார்த்து மூல பிம்பத்திலிருந்து தோன்றும் விசித்திரத்தைக் கண்டு, அம்பாளை பற்றியபடியே தன்னை மறந்து சாஷ்டாங்கமாகத் தேவியின் திருவடியில் வீழ்ந்தான். பிறகு எழுந்து காரணமின்றியே கண்கள் நீர் பெருக ரோமம் சிலிர்க்க மறுபடியும் பணிந்தான்.

உடனே தேவி,கைகளால் அணைத்து எடுத்து 'உனக்கென்ன வேண்டு'மென, 'தாயே எனக்கு உன்னருள் வேண்டும். பாடம் மறவாதிருக்க வேண்டும்' என்றான். தேவியார் "நீ எனக்குப் பேரறி வளித்ததால் உலகத்தார்க்கெல்லாம் பேரறிவளிக்கக் கடவை" யென ஆசீர்வதித்து, தனது ஓர் அம்சமாகிய சரஸ்வதி கலையின் பிஜாக்ஷரத்தையுமனுக்கிரஹித்து, உனக்கு எல்லாம் சித்திக்க; எத்திறனுமுண்டாக; இம்மை மறுமைப் பயனெய்தக் கடவாய்!' எனவருள் புரிந்து யாவருங் காணாதபடியே தனது மூல வடிவிற் கலந்தனள். அப்போது கம்பன் தேகம் வியர்த்தது. மெய்ம்மறந்து,சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமலிருந்தான். பிறகு கண்ணைத் திறந்து பார்க்க அம்மையின் பிம்பம் எப்போதும்போல் அசையாமலிருக்கக் கண்டான்.

இதற்குள் சீக்கிரம், சீக்கிரம், என்று ஆதித்தன் வந்து அபிஷேகம் செய்யத் தொடங்கினன். அலங்காரம் செய்து பூஜைகள் கிரமமாய் நடந்தது. கோயில் சந்நிதியில் பலிக்கு ஆடுகளையும் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அந்தச் சமயத்

தில், வழக்கம்போல் சகுனம் ஆகவில்லை, அப்போது சடையப்ப பிள்ளை அம்மன் உத்திரவு கொடுக்க வில்லையே? என்று வருந்தி பூசாரியைப் பார்த்தார்.

மற்ற பூசாரிகள் யாவரும், சங்கு, உடுக்கு, மணி, சேகண்டி, திருச்சின்னம், திமிலை,சண்டை முதலிய பல வாத்தியங்களை முழங்கி, தூபம் தீபாராதனைகளாலும் துதிப் பாட்டுகளாலும், அம்மனை வருந்தி, வருந்திப்போற்றவே, ஆதித்தன[illegible] தேவீ ஆவேசம்கொண்டு, சடையப்ப வள்ளலை நோக்கி,யாவரும் காண உரத்து, இன்று முதல் "உயிர்ப்பலி வேண்டேன், வேண்டேன், நமக்குப் பள்ளயமே கொள்ளத்தகுந்தது உன் பூஜை யுகந்தேன்" என்று விபூதி அள்ளி சடையப்ப பிள்ளை கையில் கொடுக்கவே, ஆவேசமடங்கியது. இதை யாவரும் கேட்டும் பார்த்தும் ஆச்சர்யமடைந்தார்கள்.

## திருவருட்பேறு

பூஜை முற்று முடிந்து பிரசாதம் பெற்று சடையப்பபிள்ளை முதலினோர் கம்பனுடன்வெண்ணெய் நல்லூரை யடைந்தார்கள். கம்பனும் மறுநாட் காலையில் வழக்கம்போல் பள்ளியை யடைந்தான். புத்தி வெகு தீக்ஷண்ணியமாய் துலங்கிற்று. பாடங்கள் படிக்காமலே, 1330, அருங்குறளும் பாயிரத்தோடு பரிமேலழகர் செம்பொருட் டெளிவோடு சிக்கெனத் தோன்றியது. மனது வெகு தைரியமடைந்தது. உபாத்தியாயராகிய கணக்காயரிடம் மிக்க நேயம் உதித்தது.

தான் கண்ட அம்மையின் திருக்கோலம் ஒருகாலும் மனதைவிட் டகலவேயில்லை. கவிபாடநா துடித்தது. ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.மறுநாள் வாத்தியார் மானியத்தில் கதிர்கள் விளைந்து அறுக்கும் பருவமாயிருந்தபடியால், தினம் காவலுக்குப் பள்ளியிலிருந்து பிள்ளைகள் செல்லும் முறையில் கம்பன் முறை வரவே, வாத்தியார் கம்பனைப் பார்த்து அடா பயலே தூங்காதே, ஜாக்கிரதை யென்று எச்சரித்து அனுப்ப, அவனும் அப்படியே போய்க் காவல் புரிந்துகொண்டிருந்தான்.

அப்போது அவ்வூர் தலையாரி காளிங்கராயன் என்பான் குதிரை வந்து கதிரை மேயக்கண்டு, கம்பன் துரத்தியும் அது போகாமல் தின்னக் கண்டு கண்சிவந்து குருபத்தி நேயத்தால் தேவியை நினைந்து துடிப்பான மனதோடு

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
யாய்த்த வரையி லணிதிகழக்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ. *

எனவே குதிரை கீழே விழுந்து உதைத்துக் கொண்டிறந்தது. உடன் எல்லாரும் கம்பன் குதிரையை யடித்துக் கொன்று விட்டான் என்றார்கள். கிர்மமுழுதும் கொல்லென்று பரவியது. காளிங்கராயனறிந்து எங்கே அவனென்று தன்னவர்களோடு பெருங் கூட்டமாக, வெகு கோபத்துடன் வந்தான். இதற்குள் ஊர்முழுதும் பேரிரைச்ச லுண்டாச்சுது, வாத்தியாருக்கு இந்தச் செய்தி தெரியவே நடுக்கம் பிடித்தது. தலையாரி நாட்டுத்தலைவராகியசடையப்ப பிள்ளைக் கறிவிக்க, அவரும், வாத்தியாரும் மற்றோரும், அவ்விடம் வந்து கிடக்கிற குதிரையையும் கண்டு நிற்கிற கம்பனையும் கண்டு, கேட்க அவனும் நடந்தபடி சொன்னான்.

அது கேட்டு சடையப்ப பிள்ளை இது என்ன புதுமை,இவன் கவிபாடவாவது குதிரை யிறக்கவாவது என்று மலைத்தார். சிலர் அப்படிச் செய்தது உண்மையானால்,எழுப்பவும் கவிபாடலாமே யென்றார்.சிலர் இவனால் என்ன முடியுமென்றார். சிலர் எப்படிக்கொன்றான்என்றார். இப்படி ஆளுக்

* இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆலயம் வாய்ந்த வயிரபுரம் என்று முற்கவியில் சுட்டியதாம். இது வெண்ணெய் நல்லூரின் பக்கத்து கிராமம். காவிரியின் வடகரையி லுள்ளது. இது தற்காலத்தில் (க்ஷேத்ரபாலபுரம்) என வழங்குகிறது. (க்ஷேத்ரபாலன்) பைரவக் கடவுள். இவ்வூரில்தான் முற்சொன்ன குதிரை மேஞ்சான் என்னும் வயலுமிருக்கிறது.

கொரு பேச்சு பேச சடையப்ப பிள்ளை மனம்கூசி, காளிங்காயனையும் சமாதானம் செய்து, கம்ப னைப் பார்த்து ' அப்பா ! கம்பா ! இது என்ன பெரு வம்பாயிருக்கிறதே,என்னகாரியம் செய்தா' யெனக் கம்பன் கெம்பீரமாகப் பிள்ளையை நோக்கி "ஐயா தாங்கள் ஒன்றுக்கு மஞ்சவேண்டாம், எங் கள் வாத்தியார் நஷ்டத்தை இவர் தந்தால், இவர் குதிரையின் நஷ்டத்தையும் அம்பாள் தருவாள்" என்று சொல்லக் கேட்டவர்கள் பிரமித்து நகைத் தார்கள்.

அதற்குள் காளிங்காயன் 'ஆம், ஆம், நியா யம், நியாயம், ஒரு பங்குக்கு 10-பங்கு தருகி றேன். குதிரைவந்தால் போது'மென்றான். கம்ப ரும் முன்போல்தேவியைத்தியானித்துக்கொண்டு

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
யாய்த்த வரையி லணிதிகழக்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்க ராயன்
குதிரைமீ ளக்கொண்டு வா.

என்று அந்தக் கவியின் ஈற்றடி இரண்டு மொழி களை மாற்றிக் கூறவே குதிரை கனைத்து உதறிக் கொண்டெழுந்தது. இதைக் கண்டவர்களுக் குண் டான சந்தோஷம் சொல்லமுடியுமோ ? அந்தத் தினம் தேவியின் திருநாள்போலவே விளங் கிற்று. சடையப்ப பிள்ளை, கம்பா என் மானத் தைக் காப்பாற்றினையே யென்று தழுவிக் கொண்டார்.

கணக்காயரும், 'கம்பா ! உன்னாலே நமக்கு இந்த ஊரை விட்டோடும் காலம் வந்த தென்று பயந்தேன். நீயே இந்த ஊரும் பேரும் மானிய மும் நிலைக்கச் செய்தாய். உன்னால் நானும் பெருமை பெற்றே' னென்றார்.

இதைக் கேட்டுக் கிராமத்திலுள்ள அந்தணர் முதலிய மஹா ஜனங்களெல்லாம், ஆச்சர்ய மடைந்து, இந்தத் தெய்வசக்தி இவனுக்கு எப் படி யுண்டாச்சுது—பூர்வஜன்ம புண்ணியம், சாபானுக்கிரக (வாக் ஆகிவிட்டான், இதுதான் விட்டகுறை தொட்டகுறை என்று வியந்தார்கள்.

பயத்தோடும் பரபரப்போடும், இதற்குள் ஆதித்தன் இச்செய்தி கேட்டுத் திருவழுந்தூரி லிருந்து குடல்தெரிக்க ஓடிவரக்கண்ட சடை யப்ப பிள்ளை 'ஐயா பூசாரி; பயப்படாதே ஒன்று மில்லை. நீர் நல்ல மகனை யடைந்தீர். உம் புண் யமே புண்யம், இவ்வுலகத்தில் ஒருவருக்கு மில்லை. உம்மகன் கவிபாடி இறந்த குதிரையை எழுப்பினன். நீங்கள் என்றும் அம்பாளை நம் பிய குடிகளாகையால், அந்தத் தேவி உம்மகன் நாவில் குடிகொண்டு விட்டாள். உம மகன் தெய்வக்கவி ஆனன்' என்று எல்லாரும் ஒரு வாயாகப் புகழ்ந்துபேச, ஆதித்தன் கேட்டு, பெருமூச்சு விட்டு மனத்துயாறி "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் " என்றபடி பெற்ற வன்றினும் பெரியதோர் உவகையனாகி " சடை யப்ப வள்ளலை நோக்கி, ஐயா எல்லாம் தங்கள் அன்ன விசேஷம்" எனக் கண்ணீரோடு கரைந்து போற்றித் தேவி கிருபையெனத் திருநீறு அளித்தான்.

இதை எல்லாம் கண்டிருந்த காலிங்காயன் வெகு சந்தோஷமடைந்து, தான் சொன்ன படியே தந்து, அக்குதிரையையும் கம்பருக்கு வெகுமதியாக அளித்தான். அவ்வூரார் யாவரும் சேர்ந்து கம்பரை அக்குதிரையின்மீது ஏற்றி, கொம்பு தம்பட்டை முதலிய வாத்தியமொலிக்க சடையப்ப வள்ளல் முதலினோர் முன்னும் பின் னுஞ் சூழ்ந்துவர, ஊர்வலம் வந்து, அக்கிராம தேவதையின் சந்நிதியிற் போய், பூசை முதலிய நடத்தி மறையவர் முதலிய மகாஜனங்களெல் லாம் ஒரு முகமாகத் "தெய்வப்பரியான் திரு வருட்புலவன்" எனப் புகழ்ந்தார்கள்.

கணக்காயரும் கம்பனை நோக்கி நீ மெத்தப் புகழ்படைத்த கவியாகத் தேவி கிருபையாலே அமைந்து விட்டபடியால், பள்ளிப்படிப்பு இனி யுனக்கு வேண்டாம். " நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே. " எல்லாம் தானே வரும். உனக்கு உபாத்தியாயாக நான் தக்கவன்

அல்லேன், என்று விடைகொடுக்கக் கம்பன் குருவைப் பணிந்து மனையிற்சென்று பிள்ளையவர்களிடம் தெரிவித்தான்.

## ஆராய்ச்சி

அப்பால் கம்பர் கல்வியாராய்ச்சியில் கண்ணுடையராய் அக்காலத்து விளங்கும் அரிய சங்க நூல்களையும், சங்கமருவிய நூல்களையும், இலக்கிய விலக்கணங்களையும் சந்தேக விபரீதக் குற்றமகல, நன்றுயாராய்ந்து, ஆரியம் முதலிய பல பாஷைகளையும் செவ்வையாய்ப் பயின்று தேர்ந்தார்.

இப்படியிருக்க சிலநாட்களின் பின் ஒரு நாள் கொங்கிற் பெருமழை பெய்து எங்கும் நீர் பொங்கி வர,காவேரி வெள்ளம் கொண்டு உடைப்பெடுக்கும் தருணமானது கண்டு, அப்போது கிராமங்கள் முழுதும் கூட்டமாக ஜனங்கள் சேர்ந்து அணைகட்ட முடியாமல் வெள்ளத்தைக் கண்டுபயந்து கதறினார்கள். சடையப்ப வள்ளலோ, ஏது கிராமம் முழுகிவிடும் என்று அஞ்சி தத்தளிக்கும்போது கம்பர் சடையப்ப வள்ளலைப் பார்த்து யாவரையும் கையமர்த்திக்—கங்கா தேவியை நினைத்து, லோகமாதாவே கன்னி யழிந்தாளென்றும்,கங்கை திறம்பினாள் என்றும், பொன்னிகரை யழிந்தாளென்றும், • உலகோர் பழித்துக் கூறும் உரை கொள்ளாதே. எல்லா உயிர்களாகிற மக்களையும் காப்பது உனது கடமை யல்லவா ? என்று

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினாள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீ
ருரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண்.

எனப் பாட வெள்ளம் குறைந்தது. யாவருக்கும் உள்ளம் நிறைந்த சந்தோஷம் பொங்கி, அதிசயித்து இவர் பூமிக்கோர் அவதாரம், இவ்வற்புத, சக்திகளைப் புகழ்ந்து, நம்மால் சொல்லமுடியாது என்று அந்தணர் முதலினோர் யாவரும் மிகவும் நன்கு மதித்துப் பேசி முன்னினு மதிகமாகக் கொண்டாடினார்கள். சோழநாட்டிலெங்கும் இவர் பெரும்புகழ் தவழ்ந்தது.

அப்பால் சடையப்ப வள்ளலுக்கு இவரிடத்தினுண்டான செயல்களைக் கண்டும், உலகத்தாரால் புகழ்ந்து பேசப்படுகிறதைக் கேட்டும், அதிகப் பிரீதியோடு பயபக்தி முதலியது மிகுந்தது.

கம்பர் சடையப்ப பிள்ளையையே தன்னுடைய தந்தையினும், குருவினும், மற்றப் பெரியோரினும், பெரியவராகப் பாவித்தார். அவர் அன்னதாதா வாகையால் அவரை யன்றி இவ்வுலகத்தில் நமக்கு வேறு யாரு முரியாரிலை என்ற எண்ணமே சத்தியமாக உள்ளத்தில் விளங்கியது.

பிறகு கம்பரோ கவிபாடுவதிலூன்றிய மனதுடையவரானார்.சடையப்பவள்ளலின் மாடு வீடு முதலிய குடித்தனத்தைச் சிறப்பித்து

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
விட்டளவும் பால்சொரியு வெண்ணையே-நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு
முடையான் சடையப்ப னூர்.

என்னும் கவியால் மேய்ந்து கொழுத்துக் குளங்களில் முழுகி, நீர் குடித்து வரும் எருமைகள் மடியில் முட்டிய வவரால் மீன்களைக் கன்றென்று நினைக்கவே சுரந்த மடிகளிலிருந்து பால் தானே சொரிய,கூட்டங்கூட்டமாய்க் கொட்டில்களுக்கு வருவதையும், செல்விருந்தோம்பி, வருவிருந்தினரை வழிநோக்கி, உபசரிப்பவர்களால் நிரம்பி எக்காலத்தும் (அடையாமல்) சாத்தாமல் திறந்து விளங்கும் திருவாசல் சிறப்பையும், தன்னை நோக்கி வருபவர்களையும், மற்றோரையும் ஒரே விதமாக அன்போடு பார்த்து, அருமையான இனிய சொற்களாலுபசரித்து, அவர் வறுமை முதலிய பிணிகளைப் போக்கும் பெருங்கொடை வண்மையாலும் இவ்வுலகத்திலிவர்க்கு நிகருண்டோ என்றும் புகழ்ந்தார்.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போலுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து.

இவ்வுலகத்தில் எவரும் மதிக்க வாழும் சடையப்ப வள்ளல் மனைக்கு இனிய விருந்தாக வருகிற பேர்கள் குளித்தும், உண்டு களித்தும் கைகழுவிய நீர் அன்றோ, இப்படிக் காவேரியென்னும் பேர் பெற்றதோர் பெருநதிபோலப் பெருகி ஓடுகிறதென்றும்,

மேழி பிடிக்குங்கை வெல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நினைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை.

என்றும் தாழ்வடையாத மேழிக்கொடி யுடையோன், அரசர்களுக்குப் பொருள் வேண்டிய காலங்களில் கொடுத்துதவும் கீர்த்தியாளன், ஆழிதரித்த கையாளன், அனைவர்க்கு முதவுங் கொடையாளன், அடுத்தோரை விடாது கார்க்கும் காராளன் சடையப்ப வள்ளல் என்னுமவர் கைச் சிறப்பையும் கூறி,

கலித்துறை

* காலப் புயல்நிகர் காராளர் தம்மைக் கடலுடுத்த
தாலக் குலமங்கை பெற்றதனுற் சதா காலமுமால்
கோலத் திருமுகத்தாலே முகந்தனன் கூடலிலே
சூலக் கரப்படையான் றலைமீது சுமந்தனனே.

பருவ மேகம்போல் தருணமறிந்து கொடுக்கும் உதார சீலர்களாகிய சடையப்பன் முதலிய வேளாளரைப், பெற்றதினாலேயே இந்தப் பூமாதேவி என்னும் சிறந்த பெண்ணை, வராக வடிவம் கொண்ட திருமால் தனது கொம்பிலும், சூலபாணியாகிய சிவபெருமான் தனது சிரத்தினும், இடைவிடாமல் சர்வகாலமும் சுமந்து கொண்டேயிருக்கிறார்கள் எனப் பல கவிகளால் சடையப்ப வள்ளலின் குலத்தையும் நலத்தையும் வேளாண்மைத் தொழிலையும் துதித்துப் பாராட்டினர்.

பின் தனது ஜனன தேசமாகிய காஞ்சி நகரத்தில் கோயில்கொண்டருளிய பெருமான்மீது உண்டான நேயத்தால் காஞ்சிப்பிள்ளைத் தமிழ், காஞ்சிக் குறவஞ்சி, † காஞ்சிப் புராணம் முதலிய பல பிரபந்தங்களையுமியற்றிப் பிரசித்தி பெற்றார். இவர் பெரும் புகழ் சோழநாடு முதலெங்கும் மிகுதியாகப் பரவியது.

* இந்தக் கவியால் ஸ்ரீ ஹரியின் வராக அவதார வைபவத்தையும் ஈசுவரர் மதுரையில் பிட்டிற்கு மண் சுமந்ததும் கூறினர்.

† முற்சொன்ன நூல்கள் காணப்படவில்லை. தற்காலம் விளங்கும் காஞ்சிப்புராணம் திருநெல்வேலி ஜில்லா தாம்ரபரணி உத்பத்தி ஸ்தானமாகிய பாபவிநாசத்திற்குக் கீழ்புறம் உள்ள விக்கிரமசிங்க புரத்தில் அவதரித்து அகஸ்திய முனிவர் அருள்பெற்று, மகாக்ஷேத்ரமாகிய திருவாவடுதுறை யாதீனபீடமமர்ந்த திராவிட பாஷிய கர்த்தா 'சிவஞான முனிவர்' அவர் மாணக்கர் கச்சியப்ப முனிவர் என்ற மஹான்களாலியற்றியது.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 11. ஓதுவதொழியேல்

படிப்பதை நிறுத்தாதே என்பது இதன் பொருள். எந்தப் படிப்பை என்ற சங்கை பிறக்கும். இதற்கு உத்தரம் கூறுங்கால் காலத்திற்குத் தக்கபடி கூறிவிடலாம். ஔவை காலத்தில் இதற்கு வேதம் முதலிய மதவிஷய நூல்களை ஓதுவது என்றும், இக்காலத்தில் ப்ரக்ருதி, மானிட சாஸ்திரங்களை ஓதுவது என்றும் பொருள்கொள்ள வேண்டும். வேதம் முதலியவைகளை ஓதுவதால் இவைகள் விஷயத்தில் மனம் ஸதா ஊறிக்கொண்டிருக்கும். தர்மஸங்கடங்கள் வருங்கால் ஒதி உணர்ந்த பெரியோர் நடத்தைகள் ஞாபகம் வர நமக்கு ஒப்புரவொழுகும் நிலை வரும். ஆகவே வேத விஷயங்கள் மிக எளிதான விஷயங்களாக இருப்பினும், அவைகளை உள்ளபடி உணர்ந்து அனுஷ்டித்து மனங்கலையாதிருப்பது மிகக் கடினமாதலால் விடாது வேதம் முதலியவைகளை ஓதி இந்தக் குறையை நீக்கிக்கொள்ள வேண்டும். இது பற்றியே ஔவை 'ஓதாதார்க்கில்லை உணர்வொடுவொழுக்கம்' என்று கொன்றைவேந்தனில் கூறியிருக்கிறாள். இக்காலத்திய ப்ரகிருதி மானிட சாஸ்திர விஷயமாக இதை உற்று நோக்குவோம். இவை வெளி விஷயமாதலால் இவைகள் விசித்திரங்களும், இவைகளின் ஒழுக்குகளை உணர்ந்து நமக்கு இவைகளை ஸாதகப்படுத்திக் கொள்ளும் வழிகளும் முடிவில்லாதன. இவைகளைப்பற்றிய ஞானம் இன்னமும் பூர்ணமாகாது மேல்மேலும் விருத்தியாகி வருவதால், இவ்விஷயங்களைப்பற்றிப் புதிய ஞானம் ஸம்பாதிக்கப் புதிய நூல்களை விடாது பயின்று, முன் நாம் உண்மை என மதித்தவைகளுக்கு விரோத முகாந்திரங்களைக் கண்டுவிட்டால் பக்ஷபாதமின்றி உதறித் தள்ளும் பழக்கத்தையும் விஷயத்தை ஆழ்ந்து யோசிக்கும் பழக்கத்தையும்

413



வரவர பலப்படுத்தி வரவேண்டும். மனிதன் உயிருள்ளவரை ஓதுவதை ஒழியாது ஸதா சிஷ்யபாவத்தில் மனதைப் பக்ஷபாதம் ப்ரமாதம் முதலிய நிலைகளில்லாது பாதுகாத்து வரவேண்டும். ஆதலால் முன் அர்த்தப்படி பூர்ண விஷயத்தை அடிக்கடி அணுகுவதாகிய ஓதுவதால் அதை உள்ளபடி உணரவேண்டிய முயற்சியிலேயே ஒருவன் இருக்கவேண்டும் என்றும், பின் அர்த்தத்தால் முடிவில்லா ஸ்ருஷ்டி வைசித்ரியத்தைப் புதிதாக உணர்ந்து அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுவதற்கும் முடிவு எத்தன்மையதோ என்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதற்கும் வெளிவிஷய சாஸ்திரங்களை ஓயாது கற்று வரவேண்டும் என்றும் இந்நீதி வாக்கியத்திற்குப் பொருள் கூறலாம்.

இனி இதன் எல்லை வாக்கியத்தை நன்கு உணர்ந்து எம்மாதிரியாக ஓதிக்கொண்டிருக்க வேண்டும் என்பதை அறியப்புகுவோம். 'புத்திமான் கிரந்தங்களை ஞான விக்ஞானிகளில் கண்ணுக ஓதி, தானியத்தை விரும்பி அறுப்புக்குப் போகிறவர்கள் வைக்கோல் உமிகளைத் தள்ளிவிடுவதைப் போலக் கிரந்தங்களை நீக்கிவிடவேண்டும்'என்பது அமிருதபிந்து உபநிஷத்வாக்கியம். ஓதலினன்றே வேதியர்க் கோழுக்கம், என்பது கொன்றைவேந்தன் வாக்கியம். வேதத்தை ஸதா மொக்கைஉருப்போடுபவரை நோக்கிப்பெரியோர், 'குங்குமம் சுமக்குங்கழுதை' என்று இகழ்ந்துள்ளார். ஓயாது படிப்பவர்களை நோக்கி இக்காலத்தவரும் 'புத்தகப் புழு' என இகழ்ந்து வருகின்றனர். ஆகவே இந்த வாக்கியங்கள் எல்லாம் ஓதுவது ஒழியேல் என்ற வாக்கியத்தின் எல்லையை நன்கு குறிக்கும். இந்த எல்லை உபநிஷத் வாக்கியத்தில் 'ஞான விக்ஞானங்களில் கண்ணுக ஓதி' என்ற தொடரால் விளங்கும். இக்கருத்தையே திருவள்ளுவரும்:—

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க வதற்குத் தக."

என்று கூறுகிறார். ஓதுவதெல்லாம் அதன்படி நடக்கவே. ஆகவே கற்றபடி நடக்கவேண்டிய காலத்திலும் ஓதிக்கொண்டிருக்கலாகாது. நூதனப்பொருளோடு பொருத்துங்கால் கற்றபடி வெளிப்பொருள்கள் இருக்கின்றனவா என்று உற்று நோக்குவதே கற்றபடி நடந்துபார்த்தல் இவ்வாறு உற்றுநோக்கும் சக்தியைக் கவனியாது படித்துக்கொண்டே இருக்கலாகாது. ஆகவே ஓதுவதன் நோக்கம் இன்னது. அதில் இவ்வாறு நிலைபெறுவது என்பதையே கவனியாது ஓதிக்கொண்டே இருப்பவர்களைப் பழித்த வாக்கியங்கள் முற்கூறியவைகள். ஆதலால் ஓதுங்கால் ஓதியபடி நிற்பதற்கு வேண்டிய மனோதிடம் ஞானம் முதலியவைகளைச் சம்பாதித்துக்கொண்டு, அதன்படி நிற்குங்கால் ஓதுவதை நீக்கி அப்படி நிற்கவேண்டாத காலத்தில் ஓதுவதை ஒழியாது இருக்கவேண்டும் என்பதே இந்நீதி வாக்கியத்தின் உண்மைப் பொருள். இம்மாதிரி ஓதுவதை ஒழியாது பெரியோர்கள் இருப்பர் என்பதை ஒருவர் 'அதை நினைந்தும் அதை உரைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி' என்று எடுத்துக் கூறிப் பாராட்டி இருக்கிறார்.

தேஹப்ரக்ஞை நீங்கி மேலான நிலை அடைவதற்கு முன்னமே சில அப்யாஸிகள் ஓதுவது ஒழியேல், சாஸ்திர குப்பையைத் தள்ளு என்னும் இருவித வாக்கியங்களின் எல்லையை உணராது, பிறர் தம்மிடம் காட்டிவரும் மதிப்பு மரியாதைகளை அங்கீகரித்துத் தம்மை யறியாது வியவஹாரங்களுள் இழுக்கப்பட்டு அதோகதியை அடைகின்றனர். இவர்கள் வெறும் வேஷதாரிகளாக மிஞ்சி அநேக கஷ்டங்களுக் காளாகின்றனர். ஜடபாதர் முதல் ஜன்மத்தில் நாடுகள் எல்லாம்துறந்துவெளிப்பட்டு தகுந்தபடி ஓதுவதின்

(மனனம் முதலியவைகளின்) வலிக்குறைவால் பூஜை ஒழிந்தவேளைகளில் தாம்காப்பாற்றிவிட்ட அனுதையான மானிடம் அன்பு வளர்க்க, வரவர வழிபாடுகள் குறைந்து இழிவான மான்ஜன்மத்தை அடைந்தார். ஆதலால் எவ்வளவு பெரியவராயினும் தம்வரையில் கற்ற ஞானப்படி நிற்பதும் மற்ற வேளைகளில் அதை நினைத்தும் உரைத்தும்நிற்பதாகிய ஓதுவதை ஒழித்துநிற்பராயின் பரதர் பட்டபாடு படவேண்டியதுதான்.

இனி இதன் எல்லே வாக்கியத்தை விளக்க ஒரு கதை ஒன்றுண்டு. முன்னொரு காலத்தில் மஹரிஷிகள் எல்லாம் பரமேசுவரரைத் தரிசித்து கிருதார்த்தர்களாக வேண்டும் என்று கைலாஸத்தில் வந்து கூடினர். அப்பொழுது ஒரு ரிஷி பெரிய வண்டி நிரம்பப் புஸ்தகங்களை நிறைத்துக்கொண்டு இழுக்கமாட்டாது இழுத்து வந்தார். அவர் வண்டியுள் அடங்காத புஸ்தகங்களைத், தலை தோள்கள் முதுகு முதலிய விடங்களில் சுமந்து வந்தார். அப்புஸ்தகங்கள் எல்லாம் சிறந்த நூல்கள். அவைகளிடம் அவருக்கு விசேஷப் பற்றுண்டு. இவ்வளவு விசித்திரமாக இவர் கைலாஸத்தில் புகுந்ததும், மற்றைய ரிஷிகள் வயிறு வெடிக்க நகைக்கத் தொடங்கினர், 'ஏன் நகைக்கிறீர்கள்' என்று புஸ்தகரிஷி கேட்க, 'இப்படிப் புத்தகத்தைக் கட்டிக்கொண்டழுகிற வரையில் உமக்குக் கடவுள் வெளிப்படார். இங்குள்ள விஷயம் புத்தகத்தில் இல்லவே இல்லை. நீர் படித்தவைகளை மறந்தபின் தான் இது விளங்கும். உமக்காவது, கடவுள் தோன்றவாவது' என்று ஒளியாது கூறிவிட்டார் ஒரு ரிஷி. இதன் ரஹஸ்யம் ஓதி யுணர்ந்த புத்தக ரிஷிக்கு உடனே விளங்கிவிட அவர் சாஸ்திர மூட்டை ஸமுத்திரத்தில் எறிந்துவிட்டார். உடனே பகவான் அவர்கள் முன் தோன்றினராம்.

## யானையில் முத்துக்களுண்டா ?

செப்டம்பர் மீ' த்திய விவேக போதினியில் மிஸ்டர் ம. கோபால கிருஷ்ணையர் முத்துக்களைப்பற்றிய ஓர் அருமையான வியாசம் எழுதியிருக்கிறார். அவை யுண்டாகு மிடங்களைப்பற்றி விஸ்தரிக்குங்கால் யானையை அதன் பிறப்பிடங்களிலொன்றுகப் பல ஆதாரங்களுடன் நிருபித்திருக்கிறார்.

சென்ற செப்டம்பர்மீ' 12௳ "ஹிந்து" பத்திரிகையில், மிஸ்டர் T. S. விசுவநாதன் என்பவர் குமாரசம்பவம் முதல் சர்க்கம் 6-வது சுலோகத்தை எடுத்துக்கொண்டு, ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தச் சுலோகமும் அவர் எழுதியதும் பின்வருமாறு:—

**पदं तुषारस्तुतिधौतरक्तं यस्मिन्नदृष्ट्वापि हतद्विपानां ।**
**विदन्ति मार्गं नखरन्ध्रमुक्तैर्मुक्ताफलैः केसरिणां किराताः ॥**

(இதன் பொருள்).—யாதொரு ஹிமயமலையில், பனிப் பெருக்கத்தால் அலம்பப்பட்ட ரக்தத்தையுடைய யானைகளைக் கொன்ற சிம்மங்களின் அடிவைப்பை (அந்த ரக்த அடையாளங்கள் பனியால் அலம்பப்பட்டு விட்டபடியால்) கண்டுபிடிக்க முடியாவிடினும் (சிம்மங்களின்) நகங்களின் இடைவெளிகளிலிருந்து நழுவின முத்துக்களினால் வேடர்கள் வழியை அறிகிறார்கள்.

இந்தச் சுலோகத்திலுள்ள **मुक्ताफलैः** என்னும் பதத்திற்கு முத்துக்கள் அர்த்தமல்லவென்றும் முத்துக்கள் போலொத்த பனித்திவலைகள் அர்த்தமென்றும், யானையிலிருந்து முத்துக்களுண்டாகிறதென்ற மூடத்தனமான கொள்கையைக் காளிதாசரும் நம்பினரென்று எண்ணக்கூடாதென்றும் சொல்லிவிட்டு, அதற்கு ஆதாரமாக டாக்டர் செவன்ஹெடின் என்னும் பிர... யாணி "ஹிமாலயாவின் கிழ்ப்பாகத்தி... அதிகக் கடினமில்லாமலிருப்பதுடன் க... கங்களின் அடிவைப்புக்கள் பனியால்... முத்துக்களின் கோர்வை போல... "

என்று எழுதியிருப்பதை எடுத்துக் காட்டுகிறார். இன்னும் அவர் சொல்வதாவது.—" நமது பிரா
" சீனக்கல்வி பொக்கிஷத்தின் உண்மையான
" சில போதர்களுள் ஒருவராக நான் கருதும்
" ஒருவரிடமிருந்து இந்தப் பொருளை நான்
" அறிந்தேன். சமுஸ்கிருத காவியங்களில்,
" முக்கியமாய் காளிதாசருடையவைகளில்,
" அபிமானமுள்ள ஒவ்வொருவரின் அறிவிப்பு
" புக்கும் அங்கீகாரத்திற்கும் நான் இதை அனுப்
" கிறேன். இதைப் பத்திரிகைக்கு அனுப்பும்
" படி என்னைத் தூண்டிய பிரதானமான காரணங்
" களில் ஒன்று, மேலே சொல்லிய இந்தச் சுலோ
" கத்தில் காளிதாசருடைய தாத்பரியத்தை
" அந்த மல்லிநாதர்கூட அறியவில்லை என்பது
" தான்."

இம்மாதிரி அவர் வரைந்ததிலிருந்து அதிக மாய் ஒன்றும் எழுதத் துணியவில்லை. டாக்டர் செலன் ஹெடின் பார்த்து எழுதியபடி காட்டு மிருகங்களின் காலடிகள் பதிந்து பனி முத்துக் கோர்வைபோ லிருக்கலாமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதைக்கொண்டு யானை யில் முத்துக்களிருக்கக்கூடாதென்று சொல்ல யாதொரு ஆதாரத்தையும் காணேம். மல்லி நாதர்கூட அந்த அர்த்தத்தை யறியவில்லை யென்று அங்கிளுபர் காட்டுகிற குறைக்கு இடங் கொடுத்திருப்பவர் ஸ்ரீமல்லிநாதால்லவென்றும் உலகத்திலுள்ள வியாக்கியான கர்த்தாக்களுள் முதல்மையானவரென்று எல்லா வித்துவான்க ளாலும் ஒருங்கே கொண்டாடப்படுபவர் ஸ்ரீமல்லி நாதார பென்றும் இந்த ஸமயத்தில் சொல்ல வேண்டி வருகிறது.

ஸ்ரீமல்லிநாதர் இந்தச் சுலோகத்துக் கெழுதிய வியாக்கியானத்தின் இறுதியில் இம்மாதிரி சந் தேகமுண்டாகக் கூடாதென்றே அடியில் கண்ட ஆதாரத்தை எடுத்தெழுதி யிருக்கிறார்.

யானை, மேகம், பன்றி, சங்கு, மீன், சிப்பி, மூங் கில், இவைகளில் முத்துக்களுண்டாவது உல கில் பிரசித்தம். அவைகளுள் சிப்பிகளிலுண் டாவதே அதிகம்" என்பது இதன் பொருள். ஆகையால் முத்துக்களின் பிறப்பிடங்களில் யானையுமொன்றென்பதைஆட்சேபிக்கவிடமில்லை.

V. பஞ்சாபகேசன்.

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 25. உதகநிமஜ்ஜன ந்யாயம்

ஓர் அரசன் அரண்மனையில் திட்டுடுபோய் விட்டதாம். அப்பொழுதுசேவகர்கள் யாரோ ஒரு வனைப் பிடித்து வந்து குற்றவாளிஎன்று சாதித் தனர். அவன் தன்பேரில் குற்றமே இல்லையென்று எவ்வளவு மன்றாடியும் ராஜசபையிலுள்ளோர் இதை ஒப்புக்கொள்ளாதது கண்டு 'நான் குற்ற வாளியல்ல என்று தெளிவு வரும்படி செய்ய நான் ஒரு சபதம் செய்து கொடுக்கிறேன். ஒரு குளத் துள் நான் முழுகி விடுகிறேன். உங்கள் வேலைக் காரருள் ஒருவன் குளத்திலிருந்து குறிப்பிட்ட தூரம் ஓடி அதே வேகத்தோடு திரும்பிவரட்டும். அவன் வந்து சேர்ந்ததும் நான் உள்ளிருந்து கிளம்பாமலிருந்தால் குற்றம் என்பேரிலில்லை. கிளம்பிவிட்டால் என்னைக் குற்றவாளி என்று கருதுங்கள்' என்று வேண்டிக்கொண்டான். இம் மாதிரியேசெய்து தான்குற்றவாளியல்லவென்று எல்லோரும் அறிய தெளிவித்து இவன் விடுபட் டான். ஆகவே எந்தவிதஅபவாதம் ஏற்பட்டகால த்தும்ஏதாவது ஒரு கொடியப்ரதிக்ஞை செய்து அதன்படி நடந்து அந்த அபவாதத்தை நீக்கிக் கொண்டு வெளியேறும் இடங்களில் இந்நியாயம் உபயோகப்படும். இக்காலங்களைப் போல சாக்ஷி மூலமாக நியாய விசாரணை விஷயம், இடம், அதிகாரிகள் முதலிய ஒழுங்குகள் அதிகமாக எல்லோருக்கும் பொதுவாக ஏற்படாத முன் காலங்களில் ஒருவன்மேற் குற்றம் சுமத்தப்பட் டால் அவன் பாம்புக்குடம், எரியும் நெருப்பு, கொதிக்கும் எண்ணெய்க் கொப்புரை, முதலிய வைகளில் கைபிடுதல், அல்லது மூழ்குதல் முதலிய கொடிய ஸாஹஸச் செயல்களைச் செய்து தன் குற்றத்தை நீக்கிக்கொள்ளுவது வழக்கம். இதுவன்றி கடவுளின்பேரில் சத்தியம் செய்தல், கடவுளின் முன்னுவது, நியாயாதிபதி

பின் முன்னுவது எரியும் கற்பூரத்தைச் சபதம் செய்துகொண்டு அணைத்தல் முதலிய சாதாரணப் பழக்கங்களுமிருந்தன. இதற்கேற்பவே பெண்கள் நாயகமாகிய ஸீதை,ராவணன் அசோக வனத்தில் தனிமையாகக் கொஞ்சநாள் இருந்ததால் பிறருக்கு தன்மேல் ஏற்படக்கூடிய சந்தேஹத்தை நீக்கி ராமர் தம்மை அச்சமின்றி அங்கீகரிப்பதற்காக முதலில் தீயில் மூழ்கித் தனது பரிசுத்த நிலையை வெளிப்படுத்தினுள். இப்படிச் செய்தும் ஜன அபவாதம் நீங்காமல் போக ராமரால் நீக்கப்பட்ட காலத்தில் மறுபடியும் அயோத்தியை வரும்படி நேர மிக வெறுப்பால் கொடிய சபதம் செய்து அதன் மூலமாகப் பூமிதேவியால் எடுத்துச் செல்லப்பட்டு மறைந்து தனது பரிசுத்த நிலையை வெளிப்படுத்தினுள். வெளிதேசங்களிலும் இம்மாதிரியான கொடிய ஒழுங்குகள் பழக்கத்திலிருந்தன. ஐரோபாவில் முன் காலத்தில் குற்றம் அவதூறு முதலியவைகளுக்கு ஆளானவர், இவைகளைச் சுமத்துபவரோடாவது, அல்லது அவர்கள் ஆட்களோடாவது, அல்லது தமது ஆட்களுள் இருவரையாவது தனிச்சண்டை செய்யும்படி ஏற்பாடுசெய்து யார் ஜயம் பெறுகின்றனரோ அவர் வாதம் உண்மையென மதிப்பதாகிய **சண்டை நியாய நிர்ணயம்** என்ற பழக்கம் இருந்து வந்தது. ஆகவே இம்மாதிரி விஷயங்கள் எல்லாம் உதகநிமஜ்ஜனநியாயத்திற்கு உதாரணங்கள்.

### 26. உபயன்ன பயந்தர்ம இதிந்யாயம்

மாங்காய் காயாக விருக்கும்போது பச்சை வர்ணத்துடனிருக்கும். அது பழுக்கும்போது அதற்கு மஞ்சள் வர்ணம் வந்து விடும். உள்ளே ருசிமாற்றங்களும் ஏற்படும். இதற்குப் பழம் என்ற நிலையும் வருகிறது. ஒரு வஸ்துவுக்கும் தர்மம் (வஸ்துதத்வம்) மாறுவதால் விகாரம் ஏற்படுகிறது. இந்த வஸ்துதத்வமாற்றமே (Chemical Change)இந்த நியாயத்தின் கருத்து. இம்மாதிரியான மாறுதல் ஏற்படும் விஷய ஸம்பந்தமாக இந்த நியாயம் பிரவர்த்திக்கும்.

### 27. உபவாஸ பைக்ஷ்யாயம்

பட்டினி கிடப்பதென்றல் எல்லோருக்கும், எக்காலத்தும் கஷ்டம். அதைப் பிச்சை எடுத்துத் தடுக்கவேண்டி வருவது மானிகளுக்கு மிகக் கஷ்டம். இந்நிலைக்கு அவர்கள் வாராதபடி ஜாக்கிரதையுடன் இருப்பார்கள். ஆனல் இந்தக் கஷ்டநிலை வந்துவிட்டால் என்ன செய்வது என்ற விஷயம் வந்துவிடும். ஏதாவது ஒருவழி நடந்தே தீரவேண்டி வந்துவிடும். இறப்பதா அல்லது பிச்சை எடுத்து இருப்பதா என்ற கேள்வி எல்லோரையும் வருத்தத் தொடங்கி விடும். பொதுவாக இவ்விரண்டில் அதிகக் கஷ்டமில்லாததாகிய பிச்சை எடுத்தலையே எவரும் மேற்கொள்ளும்படி வந்துவிடும். ஆகவே இம்மாதிரி தர்ம சங்கடமாக வந்து ஏற்படும். ஸமயங்களில் குறைந்த கஷ்டம் கெடுதி உள்ள வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்யும் இடங்களில் இந்நியாயம் உபயோகப்படும். நல்லோருக்கு இம்மாதிரியான கஷ்டம் வருங்கால் தம்மால் கூடியவரையில் முற்கூறியபடி முயலுவர். ஸ்ரீராமர் ராவணனை வெறுங்கையனுக யுத்தகளத்தில் நிறுத்தி 'இப்பொழுது உன்னை நான் கொன்று விடுவேன்: என் கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிடும். கொல்லாவிடில் என் கஷ்டம் அதிகரிக்கும். ஆனல் உனக்கு நன்மை புரிந்ததாகும். ஆகவே பிறருக்கு நன்மை எவ்வளவு செய்யலாமோ அவ்வளவும் செய்யவேண்டியதாதலால் உன்னை விட்டு விடுகிறேன். போய் ஸீதையைத் திருப்பிக்கொண்டுவர இஷ்டமானல் அவ்வாறே செய்: சண்டையை இதோடு நிறுத்தி விடுவேன். இல்லாவிடில் சண்டைக்கு வா பின்னர் உன்னைக் கொல்லுகிறேன்' என்று கூறித் தமது பெருந்தன்மைக்கு ஏற்ப தமது மனதிற்குக் குறைந்த கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய தர்மவழியில் ராமர் நடந்தார். கொடியவர்களோ தமது மனம் போன வழிசென்று கெட்டதை நல்லதெனக் கருதி அதையே பின்பற்றுவர். முற்கூறியபடி சொல்லியும் ராவணன் 'ஸீதையைக் கொண்டு ராமரிடம் விட்டுவிட்டால் நாம் உலகில் கீர்த்தியின்றிச் ஸுகமாக வாழலாம். இல்லாவிடில் கீர்த்தியுடன் இறக்கும்படி நேரிடும். ஆகவே புகழோடு இறத்தலே மேல்' எனக்கருதி விஷயம் கெட்டது என்று சற்றும் நினையாது மாண்டான். ஆகவே இரண்டுவித கஷ்டநிலைகளில் குறைந்த கஷ்டமுடையது இன்னது என்பது தீர்மானம் செய்பவர் குணத்தைப் பொருத்தது.

### 28. உபயத: பாசரஜ்ஜு ந்யாயம்

கயிற்றின் இருபுறத்திலும் வஸ்துக்களை கட்டி விடலாம். ஆகவே அதற்கு இரண்டு புறத்திலும் கட்டும் திறன் உண்டு. இதைப்போல எவ்விதத்திலும் நீக்கமுடியாத ஆபத்துக்களால் சூழப்பட்ட ஒருவன் என்ன செய்தும் ஏதாவது ஒருஆபத்துள் அகப்படும்படியாக இருக்குங்கால் இந்நியாயம் உபயோகப்படும். இருதலைக் கொள்ளி எறும்பு என்ற பழமொழி இந்த நியாயத்தின் கருத்தை நன்கு விளக்கும். ஒரு விறகுகட்டையில் ஒரு எறும்பு ஏற அதன் இரு நுனியிலும் நெருப்புப் பற்றிவிட்டால் அந்த எறும்பின் கதி என்ன? ஓரங்களில் நகர்ந்து சென்றால் நெருப்பில் சாம்பலாக வேண்டியதுதான். இருந்த விடத்திலிருந்தால் கொஞ்சகாலத்திற்குள்எரிந்து சாம்பலாக வேண்டியதுதான். ஆகவே அது எப்படியும் இறக்கவேண்டியதே. இம்மாதிரியான விஷயம்தான் இந்நியாயத்துள் அடங்கி இருப்பது. சாஸ்திர உண்மைகளையும், பெரியோர் நடத்தையையும் நன்கு ஆராயாது, எதையாவது ஒன்றை பிடிவாதமாகப் பின்பற்றிப் பின்னர் இவை இரண்டுள் எதன்படியாவது நடக்க எண்ணங்கொள்பவன் எவ்விதத்திலும் பாபம் சம்பாதிக்க நேருவது இந்நியாயத்திற்கு உதாரணம். மஹாபாரதம் கர்ணபர்வத்தில் கௌசிக பிரஹ்மசாரி கதை கூறப்பட்டுள்ளது. அவன் சாஸ்திரப்படி சத்தியஸந்தனாகவிருந்தான். திருடர் வருவதை உணர்ந்து பெரியோர்கள் செய்வதைப்போல ஒதுங்கிவிடாது, ஊரார்கள் ஓடிப்போய் ஒளித்தும் தான் போகாது இருந்ததால் திருடர்கள் கையில் அகப்பட்டான். அவர்கள் ஊரார் எங்கே என்று கேட்டார்கள் 'தெரியாது' என்றால் பொய் சொன்ன பாவமும்,இருக்குமிடங் கூறினால் கொடியவர்களை ஸஹாயம் செய்து நல்லோரைக் கெடுத்தபாபமும் வரத் தக்க நிலையை அடைந்து இருதலைக் கொள்ளி எறும்புபோலானான். இவன் இந்நியாயத்திற்கு உதாரணம்.

## அல்லஹபாத்—(ப்ரயாகை)

## ALLAHABAD (PRAYAG) ITS SCENERIES.

### அதன் காட்சிகள்

கங்கையும் யமுனா நதியும் சேரும் இடத்தில் உள்ள இந்த நகரம் எல்லா ஜனங்களுக்கும் நன்றாய்த் தெரியும். சிலர் யாத்திரையாகப் போயிருப்பார்கள். அநேகர்கள் அதன் பெருமையைக் கேள்விப்பட்டிருப்பார்கள். அது வைதிகஸம்பிரதாய மரியாதைக் குட்பட்ட எல்லாராலும் ஒரு மகா புண்ணிய ஸ்தலம் என்று கொண்டாடப்படுகின்றது.

2. எந்த நதியிலாயினும் வேறு எந்த இடத்திலுள்ள தண்ணீரிலாயினும் மனிதர்கள் இறந்தால் துர் மரணமாய்ப் போனவர்கள் என்று வருத்தப்படுவோர்கள். இரண்டு புண்ணிய நதிகளும் சங்கமமாகிற இடத்தில் மரணமடைந்தவர்கள் பிறகு நல்ல கதியை அடைவார்கள் என்று நம்புகிறார்கள். கையினால் சிலர் வேண்டுமென்றே உயிரைவிட விரும்புகிறார்கள். அவர்களைத் தடுக்கும் பொருட்டு கவர்ன்மெண்டார் தகுந்த காவல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

3. அதிலுள்ள இரண்டு பாகங்கள் தாராகஞ்சம், கிடகஞ்சம் என்பவைகளை விசேஷமாய்க் கொண்டாடப்படுகின்றன. கங்கை நதிக்கரையிலுள்ள சில பட்டணங்களும் கிராமங்களும் ஆபத்துக்கிடமாகின்றன. அதிக வெள்ளகாலத்தில் கரையை உடைத்துக்கொண்டு மூன்று மயில் வரையிலுள்ள வீடுகளையெல்லாம் நாசம் செய்து, புதிய வழியாய்ப் பிரவாகிக்கிறது. இந்த 'கரம்' அவ்வித ஆபத்துக்குள்ளாகாதபடி, வீடுகள் தூரமாய் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் எப்படியிருந்தபோதிலும் இதுவரையில் எவ்விதமான கெடுதியும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

4. பனாரிஸ் என்று சொல்லப்பட்டு வரும் காசி என்பதும் புண்ணிய ஸ்தலமே, அங்கே கங்கை ஓடுவதற்கும் இங்கே ஓடுவதற்கும் அதிக பேதமுண்டு. காசியில் பாராங்கல் மதில்களை தண்

னீரில் கட்டி அவைகளின் மேல் பெரிய மாடிவீடு களைக் கட்டியிருக்கிறார்கள். 64 கட்டங்களிலும் இப்படியே நெடுந்தூரம் இருக்கிறது. தவிரவும் அவைகள் வளைவாகவும் இருக்கின்றன. ஆகையினால் இவ்வளைவுக்குள் உள்ள தண்ணீர் ஓட்டமில்லாமல் தங்குகிறது. இந்த இடத்தில் ஓட்டம் சாதாரணமாய் அதிகமாக இல்லை. விசேஷமான பிரவாக காலத்தில் வேகமாய் ஓடும்போது தங்கி யிருக்கும் தண்ணீர் போய் புதிய தண்ணீர் ஓடுகிறது. இவ்வித நாட்களில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு ஜ்வரம் முதலிய வியாதிகள் உண்டாவதில்லை. மற்ற காலங்களில் காசி ஜ்வரம் என்று ஜனங்கள் நடுங்கும் குளிர் ஜ்வரம் உண்டாகிறது.

ப்ரயாகையிலோ, வேகமாய் ஓடுவதோடு, ஆநந்தமாய் மணலில் இறங்கி ஸ்நானம் செய்யலாம். முழங்கால் மட்டு ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்தால், உடம்பு முழுதும் ஜலத்துக்குள் ளிருந்து ஸ்நானம் செய்தால் அதற்குள் கொஞ்ச தூரம் தள்ளிவிடும். ஆனால் உயிர்ச்சேதம் நேருகிறதில்லை. காசியில் கட்டங்களில் நீர் அதிக ஆழமாய் இருக்கிறது. பாராங்கல் படித்துறைகள் உண்டு. தவிரவும் இரும்புக் கம்பங்களை நிறுத்தி ஜனங்கள் முழுகிப்போகாமலிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஆழத்தினால் கொஞ்சம் தவறினவர்களுங்கூட இறந்து போகிறார்கள். இதற்குக் காரணம் "காச்யாந்து மாரணான் முக்தி" என்றபடி காசியில் இறந்தால் மோட்சம் கிடைக்கும் என்று நம்பிவேண்டுமென்று செய்வதாய்ச் சொல்லுகிறார்கள். இது பெரும்பான்மை ஒப்புக் கொள்ளத்தக்கதன்று. க்ஷேத்திரத்தில் வஸித்து ஊருக்குள் இறந்து போனால் மட்டும் அது ஸரியென்று எல்லாரும் சொல்லுவார்கள்.

5. "கங்கையமுனயோர் மத்யகுப்தா ஸரஸ்வதி" என்றபடி கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியில் ஸரஸ்வதி என்ற ஒரு நதி மறைந்திருக்கிறது என்று வழக்கமாய்ச் சொல்லுகிறார்கள். மூன்று நதிகள் சங்கமமானபடியால், திருவேணி என்று ஒரு பெயர் வழங்குகிறது. முற்காலத்தில் ஸரஸ்வதி என்ற நதிகண்ணுக்குத் தெரிந்து இப்போது பூமிக்குள் போய்விட்டது என்கிறார்கள். ஸரஸ்வதி என்ற பெயருள்ள நதிகள் ஒன்பது உண்டு. அப்பெயருள்ள இரண்டு ஒன்றில் ஜலம் சிறிதூரம் ஓடிவந்து மணலில் உள்ளே போய் மறுபடி இரண்டுமயிலுக்குப்பிறகு குமிழியாகக் கிளம்பி ஓடுவதாக நேரில் பார்த்து ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது நிற்க.

6. ஜனங்கள் ஸ்நானம் பண்ணுவதற்குமுன்பால், பூ, முதலியவைகளால் கங்கையைப் பூஜை செய்கிறார்கள். மகாராஜர்களும் மணலில் நடந்தே ஸ்நானம் செய்வது விசேஷமாய் வழக்கமாயிருந்தது. மணலில் அதிகதூரம் நடந்தால் களைப்பாகிறது என்று பல்லக்குகளில் வந்து சிறிது தூரம் இருக்கும்போது இறங்கிவருகிறார்கள். இப்படி வருகிறவர்களுக்குப் பின்வரும் பரிவாரங்களும், வெவ்வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு ஆடைகளுடன் போகிறவர்களும், மணற்கரையில் பெரிய கொடைகளை நட்டுக் கொண்டு அவைகளின் கீழிருந்து மந்திரங்கள் சொல்லி வைக்கும் பண்டாக்களும், அவர்களுடன் கூடுகிற ஆண் பெண், குழந்தைகள் கூட்டங்களும், பைராகிகள், ஸந்யாஸிகள் முதலியவர்களும் ஆயிரக்கணக்காய் ஸ்நானம் செய்து மணலில் நிற்பதைப் பார்த்துக் களிக்க இரண்டு கண்கள் போதுமோ என்று மனதில் எண்ணமுண்டாகிறது. தவிரவும் நீல நிறமுள்ள யமுனை ஜலமும், வண்டல் மணல் உள்ள சிறிது சிவப்பான கங்கை ஜலமும் சேரும் இடத்தில் சூரிய உதயமாகும்போது பத்தரைமாத்துத் தங்கத்தை உருக்கி ஓடவைத்தால் போல், வெகு தூரம் பள பளவென்று தெரிகிற அழகை என்னவிதமாய் வர்ணிக்க முடியும்? ஜலத்தில் ஒரு மயிலளவு படகுகள் அநேகங்கள் இருப்பதைப் பார்த்தால் அதிக விநோதமாயிருக்கும். ஜலம் தெளிந்த காலத்தில் சந்திரன் உதயமாகும்போது பார்த்தால், கண்ணுக்குண்டாகும் களிப்பைப் பார்ப்பவர்கள் அநுபவித்தே தெரிந்துகொள்ளத் தகுந்தது. கரைகளில் மரங்களும், செடிகள் முதலாகப் பசுமையாய்த் தெரிகிறவைகளும் கரைகளினின்று ஒரு பக்கம் பார்வையிலும் சங்கமமாகும் இடத்

தில் தெரிகிற நிறம் மற்றொருபக்கம் பார்வையிலும் கண்ணுக்கு முன்னிருக்கும்போது அதைவிட அழகு வேறு உளதோ?

7. நகரத்தில் ரஸ்தாக்கள் அகலமாயும், ஒன்றோடொன்று சேருகிற இடங்களில் ஒழுங்காயும் இருக்கின்றன. இவ்வளவு பெரிய பட்டணமாயிருந்து ஜனக்கூட்ட மதிகமாயிருந்தாலும், இவ்வளவு சுத்தமான பட்டணத்தைப் பார்ப்பது அரிது. சமீப காலத்தில், வடமேற்கு மாகாணங்கள் என்று பெயரிடப்பட்டு வழங்கிவந்த பிராந்தியத்திற்கு, ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த பிராந்தியம் என்று கவர்ன்மெண்டார் புதுப் பெயர் வைத்து இருக்கிறார்கள். அதற்கு இந்நகரம் பிரதான பட்டணம். ஆக்பர்கோட்டையும் ம்யூர் மத்திய காலேஜ் என்ற கட்டிடமும், அதற்குள் தென்பாகத்தில் அல்லஹபாத் யூனிவர்ஸிடி என்று சொல்லப்படுகிற கல்விசங்கத்தார் பீ. எ, எம். எ. முதலிய பட்டங்கள் கொடுக்கும் ஹாலும், ஜிஹாங்கிர் கட்டியிருக்கிற மசோலியமும், ஹைகோர்டு ரிவினியூபோர்டு முதலிய பெரிய கச்சேரிகளும் இருக்கின்றன. அக்பர் நாளில் எல்லாரையும் பார்க்க உத்திரவுகொடுத்து, தர்ப்பார் பண்ணக்கட்டிய ஹால், மிகுந்த விநோதமானது. துலுக்கர் அரசாண்ட காலத்தில் இருந்த முக்கிய கோட்டை முதலிய கட்டிடங்களைப் பாதுகாத்து நல்ல நிலைமையில் வைக்கும்படி கவர்னர் ஜனரல் கர்ஸன் பிரபு ஏற்பாடு செய்து வைத்தார். அவ்வாறு செய்யப்படாத காலத்தில், அவைகளிருந்த நிலைமையைப் பார்த்த கேயன் என்ற ஆங்கிலேய நண்பர் பரிதபித்துச் சொல்லியிருக்கிறார்.

8. கல்கத்தாவிலிருந்து 500 மயிலிலும் பொம்பாயிலிருந்து 800 மயிலிலும் இருக்கிறது. எல்லாப் பாகங்களில் இருந்தும் இருப்புப்பாதை மார்க்கமாய் போகக்கூடிய மத்திய இடத்தில் இருக்கிறது. ஆகையினால் வர்த்தகத்துக்கும் அநுகூலமான நகரம். தண்ணீர் வழியாகவும் படகுகள் கப்பல்கள் சென்று வியாபாரத்துக்குச் சவுகரியமாயிருக்கிறது. டிஸம்பர் கடைசியில் கான்க்ரஸ் ஸபை கூடியது. இந்தியா முழுவதிற்கும் காட்சியும் நடந்தது. இதுவரையில் நேரில் பார்த்தும் கேட்டும் தெரிந்தவைகளை எழுதப் பட்டிருக்கின்றன.

# இராஜபக்தி

## LOYALTY.

1. அரசனால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களின்படி நடந்து, அவனை அந்நியோன்னியமாகச் சேவித்து, அவனுக்கு அநுகூலப்படாத விரோதிகளையெல்லாம் சாதித்து, அவனது அருளைப்பெற்று, அவனால் நன்கு மதிக்கப்படும்படி நடந்துகொள்வதுதான் இராஜபக்தி எனப்படும்.

2. ஏன் அவ்விதம் நடக்கவேண்டுமென்றால், இப்பூவுலகிலுள்ள ஸகல ஜீவராஜிகளையும் படைத்துக்காப்பவர் கடவுளேயாம். என்றாலும் படைத்தற்றொழிலுக்குப் பிரமனை ஏற்படுத்தியதுபோலவே, காத்தற்றொழிலுக்கு மன்னனை ஏற்படுத்தியிருக்கின்றார். அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப்பைம்பூணிறை (இலைமுகத்தைப் போல் பசிய பொன்னாலாகிய ஆபரணத்தையுடைய அரசன் அனைவருக்குந் தெய்வமாவான்) என்று நீதிநெறி விளக்கத்திலும், "திருவுடை மன்னர் காணின் திருமாலைக் கண்டேனே" (அஷ்ட ஐசுவரியங்களையுடைய மன்னரைக் கண்டால் மஹாவிஷ்ணுவைக் கண்டது போலாகும்) என்று திருவாய்மொழியிலும், 'முறை செய்து காக்கும் மன்னவன் மக்கட்கு இறையென வைக்கப்படும்' (நீதியுடன் உலகத்தைக் காக்கும் காவலன், மனிதர்களுக்குத் தெய்வம் என்றே சொல்லப்படுவான்) என்று தமிழ் வேதமாகிய திருக்குறளிலும் கூறப்பட்டிருப்பதை உய்த்துணர்ந்தால், அரசன் கடவுளே அல்லது கடவுளுக்குப் பிரதிநிதி என்று ஏற்படுகின்றது.

எவனொருவன் ஈசுவரனிடத்து உண்மையான பக்தி பாராட்டுகின்றானோ அவன் மறுமையில் மேலான பதவி யடைகின்றான் என்பதை எந்த மதத்தினரும் மறுக்கமுடியாது. அங்ஙனமிருக்க, கடவுளுக்குப் பிரதிநிதியாகும் காவலனிடம் உண்மையான பக்தி விசுவாசம் பாராட்டினால் இம்மையில் நல்வாழ்வு, மேன்மை, பெருமை யடையலாம் என்பது வெளிப்படை. இதை அநு

பவத்தில் நாம் அறிந்தே வருகிறோமல்லவா? இன்னும் நமக்குப் பல பிதாக்களும், பல தாய்மார்களும் உண்டென்பதை நமது சாஸ்திரங்கள் கூறா நிற்கும்.

'தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா, தனை வளர்த்தவனொரு பிதா, தயையாக வித்தையைச் சாற்றினவனொரு பிதா, சார்ந்த சற்குரு ஒருபிதா, அவமறுத்தாள்கின்றவரொரு பிதா' என்று குமரேச சதகமும் முறையிடுகின்றது. ஆதலால் அரசனும், அரசபத்னியும் நமக்கு முறையே தந்தை தாயாகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தாய்சொற் றுரக்தால் வாசகமில்லை, தந்தை தாய்ப்பேண் என்று நாமகள் அவதாரமாகிய ஒளவையாரும் திருவாய் மலர்ந்திருக்கின்றனள். ஆதலால் நாம் அரசன் அரசியிடத்து அன்பு கொள்ளவேண்டும். அவர் சொற்படி அடங்கி நடக்கவேண்டும். அப்படி நடந்தால் அவர் நம்மீது அன்புகொண்டு சந்தோஷப்படுவார்கள் என்பது உண்மையே. இதை மறுக்க யாவராலு மாகாது.

இனி அரசனே நமக்கு அத்தியாவசியமான பள்ளிக்கூடம், கச்சேரி,ரயில், தந்தி, வியாபாரம், மதம், விவசாயம், கைத்தொழில் முதலியன சரிவர நடந்துவர காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றதாலும், சமயோசிதமாகவும் சாதனமுள்ள ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனன்றோ?

முற்காலத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போனாலும், சமாசாரம் சொல்லியனுப்பினாலும், சாமான்கள் தருவித்தாலும் எவ்வளவோ மாதக்கணக்கான நாட்களாவதோடு வழியில் நேரிடும் கஷ்டங்களுக்கும் அளவில்லையென்பது அனைவோரும் அறிந்த விஷயமே. இக்காலத்திலோ சங்கடங்கள் கிஞ்சித்தேனுமில்லாமல், போக்குவரவு, பிரயாணம் முதலியன யாவும், வெகு சுலபமாகவும், சீக்கிரமாகவும், லாபகரத்துடனும் நடந்து வருகின்றன வென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ? பல்லாயிர மைலுக்கப்பாலுள்ள கண்டங்களிலுள்ள தேசங்களாகிய லண்டன், பாரிஸ், நியூயார்க் முதலியவைகளுக்கு நாட்கணக்கில் சென்று திரும்பலாம். மேலும் முற்காலத்தில் நெருப்புண்டாக்க வேண்டுமானால் சகிமுகிக்கல்லினால் வெகு கஷ்டப்பட்டு உண்டாக்கவேண்டியிருந்தது. சரியான சாமான்களும் கிடைப்பதருமை. இக்காலம் இங்கிலீஷ் இராஜாங்கத்தாரால் நாம் நன்மைகளை எடுத்துச் சொல்வதென்றால் பலநாளும் சொல்லிக்கொண்டிருக்கலாம். நிற்க, நம் பொருளை ஒருவன் களவாடிச் சென்றாலும், நம்மை ஏசிப்பேசி பிறர் தொந்தரவு செய்தாலும் உத்தியோகஸ்தர்கள் குடித்தனக்காரர்களுக்குத் தீங்கு விளைவித்தாலும் புகலிடம் எது? அரசனே. உடனே மன்னன் அவர்களை ஏற்றவாறு சிட்சித்து நம்மை ஆபத்தினின்று நீக்கிவிடுகிறான். தெய்வம் ஒருவன் செய்த குற்றத்திற்கு உடனே தண்டிப்பதில்லை. அரசன் அக்கணமே செய்துவிடுகிறான். இதுவே மேலாகும். இது பற்றியே அரசு அன்று ஒறுக்கும், தெய்வம் நின்று ஒறுக்கும் என்னும் பழமொழியும் வழங்கி வருகின்றது.

கொலையாற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்களை கட்டதனொடு நேர். குடிபுறங்காத் தோம்பிக் குற்றங்கடிதல் வழுவன்று வேந்தன் றொழில், என்ற பிரமாணத்தால், எப்படிப் பயிரைச் சுற்றி யிருக்கும் களையைப் பிடுங்கி யெறிந்தால்தான் பயிர் நன்றாய் வளருமோ, அதுபோல, நல்லவர்களாகிய பயிரிடையே தோன்றும் தீயோரைத் தண்டித்தால்தான்,நல்லவர் சுகமுடன்வாழலாகும். துஷ்டநிக்கிரஹமும், சிஷ்டபரிபாலனமும் அரசநீதியே என்று தெளிவாக விளங்குகிறது. தீயோரை ஒறுத்தலும்,நல்லோரைப் புரத்தலும் வேந்தன்றொழில் என்னும் பழமொழியும் சான்றாகும். இன்னமும் "அந்தணர் நூற்கும், அருமறைக்கும் ஆதியாய்—நின்றது மன்னவன் கோல்" என்பதுதிருக்குறள். பிரம, க்ஷத்திரிய,

வைசிய, சூத்திரர் என்ற நான்கு வருணத்தாரது ஆசாரமும், சாஸ்திரங்களும் சரிவரச் செழித்தோங்கக் காரணபூதமாயிருப்பது அரசனது இறைமாட்சி. "மாதவர் நோன்பும், மடவார் கற்பும் காவலன் காவலன்றித் தங்கா" (தவசிரேஷ்டர்களது தவமும், பெண்மணிகளது கற்புநிலைமையும் கலங்காதிருப்பதற்கு ஆதாரம் அரசனது ஆக்ஞை). "என்பது சிலப்பதிகாரம் வானேக்கிவாழு முலகெல்லாம் மன்னவன் கோனேக்கிவாழுங்குடி" உலகத்திலுள்ள ஸகல சராசரங்களெல்லாம் மழையினுற்றான் உயிருடன் வாழ்கின்றன. அதுபோலவே மன்னவனது செங்கோலினல்தான் ஜனங்கள் சுகமடையும் என்றிருத்தலால் அரசனது ஆளுகையினுல் தர்மம் பெருகி, அதர்மம் குறுகி, புல், பூண்டு, ஈ, எறும்பு முதல் மனிதர்வரையிலுள்ள யாவத்து ஜீவகோடிகளும் உயிருடன் உயர்வாகவும், சுகமாகவும் வாழக்கூடும் என்பதற்கு ஆக்ஷேபமேயில்லை. "இகல் மன்னன் சீர்வழிப்பட்டதே மன்பதை, மற்றென் செய்யும் நீர்வழிப்பட்ட புணை" (திருக்குறள்). தண்ணீரில் மிதக்கும் கட்டை, தண்ணீர் எவ்வழி ஓடுகின்றதோ அவ்வழியேதான் போகக்கூடும். வேறுவழி போக முடியாது. அதுபோலவே மனிதர் அரசனது ஆட்சியை அனுசரித்தே நடக்கவேண்டும் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

முன் குலோத்துங்க சோழ மகாராஜனுக்கு மகுடாபிஷேகம் நடந்த காலத்தில் புலவர் பலரும் அவன்மீது கவிபாடி வாழ்த்தினர்கள். அச்சமயம் அங்கிருந்த நமது அன்னையாம் ஔவை "வரம்புயர" என்று வாழ்த்த இதன் உண்மைப் பொருளை யுணராத சிலர் ஔவையைப் பரிகசித்தார்கள். உடன் "வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும், கோனுயரக் கோனுயர்வான்', என்று பூர்த்தி செய்தனள் ஔவை. அக்காலை மன்னனும் குலோத்துங்க சோழனுக்கு ஔவையின்மீது உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை "தவமும் அரசிலாரில் வழியில்லை, அரசனும் இல்வாழ்வாரில் வழியில்லை" (நான்மணிக்கடிகை). "குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்" என்ற நீதிவாக்கியங்களை நன்குணர்ந்து, அருட்கடலுக்கும், கல்விக்கடலுக்கும் உறைவிடமாய் விளங்கும் நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் மன்னரும், இப்பரதகண்டமாகிய இந்திய நாட்டிற்கு, தன்னுலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், பிறவுயிர்களாலும், யாதொரு தீங்கும் வாராதபடி, தன்னுயிர்போல் மன்னுயிரைப் புரப்பதோ தனக்கு ஒரு பெருமகிழ்ச்சி என்றும் திருவாய் மலர்ந்ததை யாவரும் மறக்காது அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட காரணங்களால் குடி ஜனங்கள் இராஜபக்தியுடன் இருக்கவேண்டும் என்பது அத்தியாவசிய மாகின்றது. அவ்விதம் இராஜபக்தியில் குறைபவர்கள் என்ன கதி யடைவார்கள் என்று நம் சாஸ்திரங்கள் சாற்றும் சில மொழிகளையும் இங்கு எடுத்தியம்புவது இயல்பே.

1. மன்னனைக் கடவுளுக்குச் சமானம் என முற்கூறி யிருந்தால் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" எனவழங்கும் முதுமொழியும் மறக்கத்தக்கதன்று. கடவுளை நம்பாதவர் கைவிடப்படுவர் என்பது திண்ணம்.

2. இராஜனும் இராஜபத்தினியும் தந்தை தாய் என்றிருப்பதால் இராஜபக்தியிற் குறைகிறவர்கள் மாத்ருதுரோகம், பித்ருதுரோகம் என்பவைகளுக்கு ஆளாவார்.

3. நமக்கு இன்றியமையாத சௌகரியங்கள் இறைவன் செய்துவருகின்றான். நாம் பெற்ற உதவிக்குப் பிரதி செய்யச் சக்தியில்லையாயினும் அதை மறத்தல் ஆகாது என்பதை வற்புறுத்த "நன்றி மறவேல்" என்று ஔவையும், "நன்றி மறப்பது நன்றன்று" என்று எழுதுண்ட மறையும்.

நன்றியை மறந்தால் அதற்குப் பிராயச்சித்தம் வேறில்லை என்பதற்கு ஆதாரம் "எந்நன்றி கொன்றார்க்கும், உய்வுண்டாம், உய்வில்லை செய்க்நன்றி கொன்ற மகற்கு" (வள்ளுவர் வாய்மொழி) "நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்றார்க்கு உய்தியில்" (புறநானூறு). ஆனல் ஒருபரிகாரமுண்டு அதாவது படுதாகே!

தினைதுணை நன்றிசெயினும் பனைத்துணையாக் கொள்ளவேண்டும் என்றிருக்க, அளவிடப்படாத நன்றியைப் பெறுபவர் மறத்தலாகுமே?

(4) யாரைப் பகைத்தாலும் பகைக்கலாம், அரசனைப் பகைத்தல் ஆகாது. மழைக்குக் குடைபிடிக்கலாமே யொழிய, இடிக்குக் குடைபிடிக்க யாராலாகும்? ஒருவராலுமாகாது. வேந்தன்சீறின் ஆந்துணையில்லை (கொன்றைவேந்தன்). அரசனைப் பகைத்திட்டார் ஆருயிர் இழப்பர்தாமே (விவேக சிந்தாமணி) என்ற நமது முன்னோர் முதுமொழிகளும் முழங்கிக்கொண்டிருக்கின்றன.

நதி உடைப்பெடுத்தால் அணை போடலாம், கடல் கரைபுரண்டால் யார்தான் கரைபோடக் கூடும். ஆதலின் அரசனிடத்து அன்புகொள்ள வேண்டும். மேலும் இராஜத்வேஷிகளது நாவை நறுக்கித் தேசப்பிரஷ்டம் செய்யவேண்டும் என்பது (Yajnawalkya Samhita) (Dharma Sastras, Sloka 305) தர்மசாஸ்திரம் யாஜ்ஞவால்கிய ஸம்ஹிதை 305-வது சுலோகத்தின் பொருள்.

இராஜபக்தியினால் உண்டாகும் நன்மைகள் இன்னின்னவை யென்று எடுத்துச் சொல்ல என்னாலாகாது போனாலும் ஒரு வாக்கியத்தில் சொல்லி முடிக்கிறேன். "கொற்றவனறிதல் உற்றிடத்துதவி" (கொன்றைவேந்தன்) மேல் எடுத்துக்காட்டப்பட்ட பிரமாணங்களை மறவாது இராஜபக்தி கொண்டிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம். இராஜபக்தி என்ற வியாசத்தை இராஜவாழ்த்துடன் முடிக்கிறேன்.

### இராஜ வாழ்த்து

("சங்கானே" என்ற தேவாரமெட்டு.)

வாழ்கவே வாழ்கவே
ஜார்ஜ்மன்னன் வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
ஜார்ஜ்மன்னன் வாழ்கவே.

ஆங்கில நாடதனில்
பாங்குடனே தோன்றியவன்
வீங்குலகம் யாவுமாளும்
வீறுள்ள வேந்தனவன்

டெல்லிமா நகர்தன்னில்
தேவியுடன் வந்தானே
பல்லியம் பலமுழங்கப்
பட்டமதைக் கொண்டானே

தில்லைநட ராஜனருள்
எங்கள்மன்னன் ஜார்ஜ்மே
எல்லாம்வல்ல இறைவனருள்
எங்களன்னைமேரியுடன்

அன்னவர்தம் மைந்தர்களாம்
அன்புள்ளகுழந்தைகளும்
முன்னவன் தனைப்பணிந்து
வாழ்கவென்றுவாழ்த்திடுமே

H. S. சுப்ரமணிய அய்யர்.

# சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

### ஒளி—பிரதிபலனம்

### LIGHT REFLECTION

வெளி வஸ்துக்கள் நமது கண்ணுக்குப் புலப்பட வேண்டுமாகில் அவைகளிலிருந்து வெளியேறும் வெளிச்சம் நமது கண்களுள் வந்து தாக்கவேண்டும், என்று முன்னரே கூறியாகிவிட்டது. இந்த வெளி வஸ்து ஸூரியன், நக்ஷத்திரங்கள், நெருப்பு முதலிய பிரகாசமான வஸ்துக்களாயின் இவைகளே ஒளி விடும் தன்மை உடையனவாதலால் இவ்வொளி கண்களில் விழ இவைகள் புலப்படும். கல், வீடு, மேஜை முதலிய இருண்ட வஸ்துக்களாயின் தாமே ஒளிவிடும் திறனில்லாததால் ஒளிவிடும் வஸ்துக்கள் முன்னிலையில் இவைகள் நமது கண்ணுக்குப் புலப்படுகின்றன. ஆதலால் இந்தக் காலங்களில் இவைகளிலிருந்து ஒளி நமது கண்களில் புகுந்துகொள்ளவேண்டும். ஆனால் இவைகள் தாமே ஒளிவிடா, ஆதலால் ஒளிவிடும் வஸ்துக்களின் ஒளி இவைகள்மேல் விழ அது திரும்பி இவ்வஸ்துக்களிலிருந்த நமது கண்களில் விழவேண்டும். ஆகவே ஸூரியன் முதலிய ஒளிவிடும் வஸ்துகள் முன்னிலையில் அவைகளிலிருந்து வரும்ஒளியைச் சுற்றியுள்ள இருண்ட பதார்த்தங்கள் நாற்புறமும் சிதறிப்போகும்படி செய்து தம் இருப்பை உள்ளபடி உணரும்படி கண்ணுடையோரைச் செய்கின்றன. இம்மாதிரி ஒளி இருண்ட வஸ்துக்களால் திரும்பி வெளி ஏறும் தோற்றத்திற்கே பிரதிபலனம் என்று பெயர்.

இந்தப் பிரதிபலனம் உண்டாவதை வேறுவிடங்களிலும் காணலாம். ஒரு வீட்டுமுற்றத்தில் நடுப்பகலில் ஸூரியன் காய்ந்துகொண்டிருந்தால் சுற்றுமுள்ளகூட ஒருவாறு முற்றப்பிரதிபலனத்தால் விளக்கப்படும். இப்படி இருக்கையில் ஒரு வெள்ளை வேஷ்டியை முற்றத்தில் கட்டினால் கூட விளக்கம் அதிகப்படும், எடுத்துவிட்டால் முன்போல வாகிவிடும். இது வெள்ளை வேஷ்டி ஸூரிய ஒளியைப் பிரதிபலனம்செய்யும்விதத்தைக் காட்டுகிறது. நமது சமயல் அறைமேல்பாகத்தில் உள்ள ஓட்டைகள்வழியாகச்சிற்சிலஸமயங்களில்ஸூரியன் ஒளி புகுந்து தரையில் வட்டமான வெளிச்சத்தை உண்டாக்கும். சாதாரணமாக ஓட்டை எங்கிருக்கிறது என்று கண்டுபிடிக்க வட்ட வெளிச்சத்தில் கையை வைத்து நேரே வெளிச்சம் போகாது நமது கண் உயரம்வரை உயர்த்திப் பின்னர் ஒளி கண்ணில் விழும்படி நின்று மேலே நோக்கி அதைக்கண்டுபிடிக்க வேண்டும். இங்கு நகரும் கையிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியால் ஸூரியன் ஒளி மார்க்கத்தைக் கண்டு இவ்வாறு செய்யவேண்டியிருக்கிறது. இப்படிக் கண்டபின்பும் ஓட்டை இருக்குமிடமும் தரையில் வட்ட வெளிச்சமும் தெரியுமே ஒழிய இடையில் உள்ள வெளிச்சம் விளங்காது. புதிதாய் உள்ளே வரும் ஒருவனுக்குத் தரையைப் பார்த்தாலன்றி உள்ளே ஸூரியன்ஒளி விழுந்திருக்கிறது என்பதுவிளங்காது இப்படியிருக்கையில் அடுப்பை மூட்டிபுகையையாவது அல்லது தரையைப் பெருக்கி தூசியையாவது கிளப்பிவிட்டால் உடனே ஒரு பட்டைக் கோடுபோல அந்த உள்ளே வட்டவெளிச்சம் முதல் கூறை ஓட்டைவரை ஒருபிரகாசக்கோடு வெளியாகும் உடனே ஓட்டை இருக்கும் இடமும் முன் கஷ்டமின்றி எளிதில் விளங்கும். இங்கு புகை, தூசி முதலிய இருண்ட வஸ்துக்கள் மேற்கிளம்பி உள் நிறைத்ததும் ஒளிவரும் இடைவெளியிலும் அமர்ந்து, வரும் ஒளிகளைப் பிரதிபலனம் செய்து நமது கண்களில்புகும்படி செய்ய ஒளிபோகும் மார்க்கம் விளங்கி விடுகின்றது. ஆகவே ஒளி நேரிடையாவது அல்லது பிரதிபலனம் செய்யும் இருண்ட வஸ்துவின் மூலமாயாவது நமது கண்ணில் விழுந்தால் தான் ஒளியின் விளக்க சக்தி வெளிப்படும். அப்படி இன்றி நமது கண்களில் விழாது சுற்றிலும் ஒளிநிறைந்திருப்பினும் விளக்கமின்றி இருளிலிருக்க வேண்டியதுதான்.

ஸூரியன் அஸ்தமித்துகொஞ்சநாழிகைவரையிலும், உதயத்திற்குக் கொஞ்ச நாழிகைக்கு முன்னரும் ஸந்தியா வெளிச்சமிருப்பதற்கு நம்மைச்சுற்றிலும் உள்ள வாயு ஸூரியன் ஒளியைப் பிரதிபலனம் செய்து நமது கண்ணுள் புகுத்துவதால்தான். ஸூரியன் அதிகமாகக் கீழே இருக்குங்கால் பூமியின் நிழல்போகுமிடம் தவிர ஆகாயத்தின் மற்றைய பாகமெல்லாம் ஸூரியன் ஒளியால் நிறைந்திருக்கிறது. இது க்ரஹ, சந்திரர்கள் இரவிலும் தாம் ஸூரியன் ஒளியால் பிரகாசிப்பதால் விளங்கும். கிரஹணம்வரும் பௌர்ணமிஇரவிலும் கிரஹணம் பிடிக்கும்வரையில் சந்திரன் ப்ரகாசிப்பதால் பிடிக்குமிடம் தவிர மற்றைய விடங்களில் ஸூரியன் ஒளியிருக்கிறதுஎன்பது புலப்படும். அப்படியிருந்தும் இந்த வஸ்துக்களிருக்குமிடம் தவிர மற்றைய விடங்கள் எல்லாம் இருளாகத்தான் தோற்றுகின்றன. அங்கு நிறைந்திருக்கும் ஒளி மேல் நோக்கியே போவனவே ஒழிய நமது கண்ணுக்குத் திருப்படாததால் அங்கு விளக்கமின்றி இருண்டிருப்பதாகக் காணப்படுகிறது. ஆகவே ஸூரியன் ஏராளமாக ஒளி விட்டுக்கொண்டிருக்கிறபோதிலும் சுற்றுமுள்ள வாயு தரை வீடு முதலிய பிரதிபலன பதார்த்தம் இல்லாவிடில் ஸூரியனைப்பார்த்தால் அன்றி எங்கும்இருளாகத்தான்இருக்கும். இதுபற்றியே வானசாஸ்திரிகள் பூமியைவிட்டுக் கிளம்பி ஸுமார் 10 கோடி மையில் தூரம் வெளியில் போய் விட்டால் எங்கும் இருட்டாகவிருக்கும் என்றும், அந்த ஓயா இரவில்ஸூரியன் நக்ஷத்திரம்முதலிய ஒளிவிடும்பொருள்களே மின்மினும் பூச்சிபோல பிரகாசிக்கநிற்கும் என்றும் கூறுகின்றனர். ஆதலால் சகல ஒளி விளக்கத்திற்குக்காரணமாகிய இந்தப்பிரதிபலனத்தையும்அதன் ஒழுங்கையும் நாம் நன்கு விசாரிக்கப்புகுவோம்.

424



உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒளியை பிரதிபலனம் செய்வதாலே நமது கண்ணுள் விழும்படி செய்து அவைகளின் உருவம்முதலியவற்றை நாம்உணரும்படி செய்தபோதிலும் அவைகள் எல்லாம் நன்றாகவும் ஒழுங்காகவும் ஒளியை பிரதிபலனம் செய்யாததனால் அவைகளிடமிருந்து வரும் ஒளியைப் புகை தூசி முதலியவைகள் மூலமாக நாம் காணமுடியாது. ஆனால் அவைகளுள் கண்ணாடி, தண்ணீர், எண்ணெய் முதலிய வஸ்துக்கள் ஒளியை ஒருவாறு ஒழுங்காக பிரதிபலனம் செய்வதால் பிரதிபலன ஒளியை முன்கூறிய வழிகளால் காணவும் கூடும்,: பிரதிபலன ஒளியை ஒளியில்லாவிடத்தில் விட்டுப் பார்த்தால் அங்கு ஒளி விழும் இடம் பிரகாசமாக விருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடி மெருகு வரும்படி தேய்பட்ட வஸ்துக்கள் ஆகிய இவைகளே ஒளியைப் பூர்ணமாகவும் ஒழுங்காகவும் பிரதிபலனம் செய்யும் திறனுடையவை. ஆகவே பிரதிபலன ஒழுங்குகள் காரியங்கள் முதலியவைகளை உற்றுநோக்கி உணரவேண்டுமாகில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய முகம் பார்க்கும் கண்ணாடியிலும் தண்ணீரிலும் ஸம்மந்தப்படுத்தி உணரவேண்டும்.

ஒரு கண்ணாடியைவட்டமாகத் தரையில் ஸூரியன் ஒளி விழும் இடத்தில் வைப்போம். அதன்மேல் ஒரு தொளையுள்ள அட்டையைச் சரிவாக நிறுத்திச் சிறு ஸூரியரச்மி மாத்திரம் விழும்படி வைப்போம். இது கண்ணாடியில் விழுமிடத்தில் ஒரு மட்டமான அட்டை அல்லது தகரத் தகட்டை நேராக நிறுத்தி மெதுவாக அந்த விடத்தைச் சுற்றித் திருப்புவோம். ஒரு நிலையில் ஒரு புறமிருந்து வரும்ரச்மியும், பிரதிபலன ரச்மியும் இந்த அட்டைமேல் விழுந்து நிற்கும். இந்த ஸமயத்தில் ரச்மி விழுமிடத்தில் ஒரு குச்சியை நேராக நிறுத்தி அட்டையில் மேல் கோடிழுத்து,



ரச்மிகள் படுமிடத்திலும் கோடுகள் வரிந்து காட்டிவிடுவோம் வெளியில் அட்டையை எடுத்துநோக்கினால் நடுநேர்க்கோடுஇரண்டு ரச்மிக்கோட்டிற்கு மையமாகப் போவதைக்கண்டு கொள்ளலாம். இதிலிருந்து இரண்டு விஷயம் வெளியாகின்றது.

(1) வரும் ரச்மியும் அதன் பிரதிபலன ரச்மியும் கண்ணாடி விஷயமாக ஸமச்சரிவை உடையனவாக விருக்கும். (அட்டையிலிருக்கும் கோடாகிய கண்ணாடிக்கு நேர் கோணக்கோட்டிற்கு ஸமசரிவுடையதாக இவைகள் இருத்ததால் இது ஊகிக்கப்பட்டது)

(2) வரும் ரச்மிக்குநேர் எதிர்ப்புறம்பிரதிபலனரச்மி கிளம்பிப்போகும் (இரண்டு ரச்மிகளும் மத்தியிலுள்ள நேர்க்கோணக்கோடும் ஒரே அட்டையில் விழுவதால் இது ஊகிக்கப்படும்.)

முற்கூறிய கண்ணாடியை இருக்கிறபடி வைத்துத் தூசியைக் கிளப்பினால் இரண்டு ரச்மிகளின் மார்க்கம் நமக்கு நன்றாகப் புலப்பட்டு முற்கூறிய உண்மைகளை நன்கு வெளியாக்கும்.

இவ்வொழுங்குப்படி ஒளிப்பிரதிபலனம்ஏற்படுவதால் ஆகும் காரியங்களை எடுத்து விளக்குவோம். ஒரு சுவரில்ஒரே உயரத்தில் ஒற்றைப்படையான பொட்டுக்கள் ஸமஇடைவெளியுடன் அகலமாக இட்டு, மத்தியப் பொட்டில் பூஜ்யம்போட்டு மற்றையபொட்டுக்களருகில் 1, 2, 3 என்ற எண்களை ஒழுங்காக இருபுறங்களில் இடுவோம். எதிர் சுவரில் இதே உயரத்தில் பொட்டிற்கு நேரெதிரில் ஒரு வட்டக்கண்ணாடியைப் பதிப்போம். இப்பொழுது 0 பொட்டில் நாம் கண்வைத்துப் பார்த்தால் கண்ணாடியுள் 0 பொட்டுத்தெரியும், 1-ல் வைத்துப்பார்த்தால் மறுபுறம் 1 பொட்டு தெரியும், 7-ல் கண்வைத்துப்பார்த்தால் மறுபுறம் 7-ம் பொட்டு தெரியும். இதனாலே மறுபுறம் 7-ம் பொட்டி விருந்து புறப்படும் ரச்மிசரிவாக வட்டக்கண்ணாடியில் விழுந்து நம் கண்ணிருக்கும் 7-ம் பொட்டி வருகிறதென்றாயிற்று. இதுவும் முற்கூறிய பிரதிபல ஒழுங்கிற்கு ஒத்ததாகவே இருக்கிறது. இங்கு நடுப்பொட்டியி விருந்து ஒரு தட்டியை வைத்து, ஒரு புறம் உள்ள பொட்டுகள் மறுபுறமிருந்து பார்த்தால் தெரியாதபடி செய்துவிட்டபோதிலும், வட்டக்கண்ணாடியில் உள்ள தோற்றம் மறையாது. நேராகவரும் ரச்மியை தட்டி மறைத்தபோதிலும் கண்ணாடியில்விழும் ரச்மியை இது மறைக்காததால் இவ்வாறு கண்ணாடியுள்ளிருக்கும் தோற்றம் மாறாதிருக்கின்றது. இதுபற்றியேதாம் நம்மைவிடச் சிறிய குருக்களவுள்ள கண்ணாடிகளிலு

ஒரு தூரத்தில் நன்றாய் நமது தேச முழுவதையும் பார்க்கமுடியும்.

கண்ணாடிபோன்றஒழுங்காகவும் பூர்ணமாகவும் பிரதிபலனம் செய்யும் வஸ்துக்களுள் பிரதிபிம்பம் உண்டாவதும் இந்த பிரதிபலனத்தால்தான். வஸ்துக்களிலிருந்து போகும் ஒளிகண்ணாடியில்பட்டு நமது கண்ணுள் புகுங்கால் ஒளிகண்ணாடியிடமிருந்தே நேராக வருவதால் அந்த மார்க்கத்துக்கு நேரே ஒளிவிடும் பொருளிருப்பதாக நமக்கு ஒரு தோற்றம் உண்டாகிறது. இதற்கே பிரதிபிம்பம் என்று பெயர். இது கண்ணாடியுள்ளிருப்பதாகத் தோற்றியபோதிலும் உண்மையில் அப்புறம் இல்லாததால் இதற்குப் போலி பிரதிபிம்பம் என்றும் பெயர். இது தோற்ற மாத்திரமேயாயினும் வஸ்து கண்ணாடியை விட்டு விலகினால் பிரதிபிம்பம் கண்ணாடியுள் போவதுபோலவும், கண்ணாடியை அணுகினால் அதுவும் நெருங்கிவருவதாகவும் தோற்றுகிறது. ஆகவே இந்தப் பிரதிபிம்பம் எவ்வளவுதூரம் உள்ளிருப்பதாகத் தோற்றும் என்பதை ஆராய்வோம்.

ஒரு மேஜையின் நேராக ஒரு கோடிழுத்து அந்தக் கோட்டிற்கு நேர்குறுக்காக ஒரு கண்ணாடியை நிறுத்துவோம். ஒரு சிறுமெழுகுண்டையில் ஒரு நேரான துடைப்பக்குச்சியைச் சொருகி கண்ணாடியில் முன்புறத்தில் கோட்டின்மேல் வைப்போம். கண்ணாடியுள் இந்தக் கோடு நேராக உள்ளே போவது போலவும் அங்கு உள்ளே ஒருமெழுக்குண்டையில் ஒரு குச்சி நிற்பது போலவும் காணப்படும். வேறொரு மெழுக்குண்டையில் முன்னதைவிட நீளமாகியும் கண்ணாடிக்குமேல் உயரமாகியும் உள்ள குச்சி ஒன்றைச் சொருகிப் பின்புறம் இருக்கும் கோட்டின்வழியே நகர்த்திச் செல்லுவோம். போகும்போது முன்புறமிருந்து கண்ணை வெவ்வேறு இடங்களில் நிறுத்தி பிரதிபிம்பத்தையும் கண்ணாடிக்குமேல் தெரியும் குச்சியையும் உற்று நோக்குவோம். ஓரிடத்தில் இரண்டும் ஒன்றாகக் காணப்படும். கண்ணை எங்கு வைத்துக் கண்ணாடியுள் நோக்கியபோதிலும் இந்த நிலையில் இவ்விரண்டு குச்சிகளும் ஒன்றுபட்டே காணப்படும். ஆதலால் பின்னிருக்கும் குச்சிஎங்கிருக்கிறதோ அங்கேதான் உள்ளிருக்கும் பிரதிபிம்பம்இருப்பதுபோலத் தோற்றுகிறது. இப்பொழுது கண்ணாடியிருக்கும் இடத்தில் முன்புறமும் பின்புறமும் கோடுகிழித்துக் கண்ணாடியை எடுத்துவிட்டு இக்கோட்டிலிருந்து முதலிழுத்த நேர்கோட்டு வழியாக இரண்டு குச்சிகளிருக்கும் தூரத்தை ஒப்பிடுவோம். இவை இரண்டும் சமமாகவே இருக்கும். கண்ணாடி இருந்த கோட்டில் எங்கிருந்து குச்சிகளிருக்கும் இடம் வரை அளந்து ஒப்பிட்டாலும் அந்த இரண்டு தூரங்களும் ஸமமாகவே இருக்கும். ஆகவே கண்ணாடியுள்ளிருக்கும் பிரதிபிம்பமானது கண்ணாடிக்குமுன் அதன் வஸ்து எவ்வளவு தூரத்திலிருக்கிறதோ அதே தூரத்தில் பின்னே இருப்பதாகத் தோற்றும். மேலும் கண்ணாடியில் எந்த இடத்திலிருந்து வஸ்துவரை அளந்தபோதிலும் அதே தூரத்தில்தான் பிரதிபிம்பமும் அந்தவிடத்திலிருந்து உள்ளே இருக்கும். உள்ளேதெரியும் பிரதிபிம்பம் வெளிவஸ்துவைநோக்கியிருப்பதால், அதன் இடது வலது புறங்கள் மாறிக் காணப்படும். இந்த ஒழுங்கின்படிதான் தடாகம் முதலிய நீர் நிலைகளுள் எதிர் புறம் இருக்கும் வஸ்துக்கள் பிரதிபிம்பித்து விளங்குவதும், நேரே பார்த்தால் தெரியாதவைகள் தண்ணீர் உள் சிலவேளை பிரதிபிம்பித்து விளங்குவதும் சில நிலைகளில் நேரே பார்த்தால் தெரியும் வஸ்துக்களின் பிரதிபிம்பம் தண்ணீருள் தெரியாமலும் போகும்.

இனி இரண்டு கண்ணாடிகளைச் சேர்த்துக் கதவு போல அமைத்து மூடவும் திறக்கவும் வரும்படி செய்துவிட்டு இங்கு உண்டாகும் பிரதிபிம்பங்களை ஆராய்வோம். இவை இரண்டின் மேஜையில் ஒன்றை வைத்து மற்றொன்றை நேராக மேஜைமேல் நிறுத்துவோம். இரண்டிற்கும் இடையில் ஒரு நேர் கோணப் பிரிவு இப்பொழுது இருக்கிறது.

[ஒரு நேர் கோணம் 90 ஸமபாகமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு டிகிரி என்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு கோடு ஒரு நுனியை ஸ்திரமாகக் கொண்டு ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு சுற்றத் தொடங்கினால் முறையே 90 டிகிரியை விட சிறிய கோணங்களையும் நேர் கோணம், இதைவிடப் பெரிய கோணம், இரண்டு நேர் கோணம் மூன்று நேர்கோணம் முதலியவைகள் உண்டாகும் சரிவில் நின்று முடிவில் புறப்பட்டவிடம் வருகையில் நாலு நேர்கோணம் அதாவது 360 டிகிரி கோணம்ஏற்படுத்திவிடுகிறது.]

உடனே முதல் கண்ணாடிக்குள் இரண்டாவதும், இரண்டாவதுள் முதலதும் நேராகத் தெரிந்து மொத்தம் நாலு நேர்கோணம் உண்டாக்கிவிடும். இவைகள் இடையில் ஒரு வஸ்துவைப் பிடித்தால் உள்ளிருக்கும் மூன்று நேர்கோணங்களில் ஒவ்வொன்றில் ஒவ்வொரு பிரதிபிம்பம் காணப்படும். ஆகவே 3 பிரதிபிம்பங்கள் தோற்றும். இவைகள் கண்ணாடி சேர்த்திருக்கும் கோட்டில் நேரான இடத்திலிருந்து ஒரே தூரத்திலிருப்பதால் அந்த இடத்தை மத்தியாகவும் அதிலிருந்து வஸ்துவரையில் உள்ள அளவைக்கொண்டு ஒரு வட்டமிட்டால் அதிலேதான் பிரதிபிம்பங்களும் இருக்கும். இம்மாதிரியே 60 டிக்கிரியில் கண்ணாடிகளை நிறுத்தினால் பிரதிபிம்பங்கள் ஒரு வட்டமாக ஒழுங்குபட்டு நிற்கும் என்பது விளங்கும். இவ்வாறு நிறுத்தியதும் 60 டிகிரி 360-இல் 6-இல் ஒரு பங்காதலால் இரண்டு கண்ணாடிகளையும் உள்ளிருக்கும் பிரதிபிம்பக் கண்ணாடிகளையும் சேர்த்தால் மொத்தம் 6 கண்ணாடிகள் காணப்படும். இடையில் ஒரு வஸ்துவைப் பிடித்தால் மற்றைய ஐந்து இடவெளிகள் ஒவ்வொன்றில் ஒன்றாக 5 பிரதிபிம்பங்கள் காணப்படும். ஆகவே பொதுவாகக் கண்ணாடிகளுக்கிடையில் என்ன

டிகிரிப் பிரிவு இருந்தபோதிலும் 360-ஐ அந்த அளவால் வகுத்துவரும் தொகையிலிருந்து ஒன்றைக் கழித்துவிட்டால் கிடைக்கும் தொகையே அப்பொழுது உண்டாகும் பிரதிபிம்பங்களின் தொகை. ஆகவே கண்ணாடிகளை நெருக்க நெருக்க பிரதிபிம்பங்கள் அதிகமாகிக்கொண்டே வரும். முடிவில் இரண்டு கண்ணாடி



களையும் பிரித்து எதிர் எதிராகப்பிடித்தால் இவைகள் ஒன்றின்மேல் ஒன்றுபட்டமாதிரியில் ஒதுக்கியதற்கு சமானம். இங்குக் கணக்குக்கு அடங்கா பிரதிபிம்பங்கள் காணப்படுவதை நாம் கண்ணாரக் காணலாம். ஒளி பிரதிபலனத்தால்! இரண்டு கண்ணாடிகள் விஷயத்தில் ஏற்படும் விசித்திரம் இது.

இம்மாதிரி மூன்று சிறியநீண்ட கண்ணாடிகளைச் சேர்த்தே திருநாள்களில் வரும் கால் அணா விலையுள்ள விசித்திரக்குழாய் செய்யப்பட்டிருக்கிறது. கண்ணாடிகளுக்குள் ஏற்படும் பரஸ்பர பிரதிபலனத்தால் சுற்றி முக்கோணப்பட்டை பிரதிபிம்பங்கள் ஒழுங்காக உண்டாக இடையில் வரும் வர்ணக்கண்ணாடிச்சில்லுகள் ஒவ்வொருபட்டையுள்ளும் பிரதிபிம்பமாகக் காணப்பட்டு விசித்திர ஒழுங்கான புதிய தோற்றங்களை உண்டாக்குகின்றன. கண்ணாடி முதலியவைகள் பிரதிபலன சக்தியைக் கொண்டே மயன் தர்மபுத்திரருக்கு ஸபையை அமைத்துச் சுவரிருக்குமிடத்தில் வாயிலிருப்பதுபோலவும், வாயிலுள்ள விடத்து சுவரைப்போலவும், தண்ணீர் உள்ள விடத்து இல்லாதது போலவும் இல்லாதவிடத்தில் உள்ளதுபோலவும்காட்டிவிசித்திரத்தோற்றங்களை உண்டாக்கித் தன் சிற்பத்திறமையை அங்குக் காட்டியிருந்தான். இந்த ஒழுங்கை முன்னிட்டுத்தான் திருவிழாக்களில் காட்டப்படும் பேசும்தலை என்ற தோற்றம் உண்டாக்கப்படுகிறது. ஒரு மேஜை கீழ்ப்புறத்தில் ஒருகண்ணாடி முழுவதும் மறைக்கும்படி வைத்துவிட்டுப் பின்புறம் ஒருவனிருந்து தலை நீட்டிக்கொண்டு பேசுவான். மேஜையின் முன்புறம் கண்ணாடியுள் பிரதிபலித்து மேஜை முழுவதும் இருப்பதாகக் காட்டும் கண்ணாடி பின்புறம் இருப்பவன் அங்கங்களை மறைக்கத் தலை மாத்திரம் வெளிப்பட்டு நிற்கும். இதனால் தலைமாத்திரம் பேசுவதுபோலத் தோற்றும்.

இதுவரையில் கூறிவந்தது மட்டக்கண்ணாடியில் ஏற்படும் பிரதிபலனத்தையே. இனி வளைந்த வஸ்துக்களில் ஏற்படும் பிரதிபலனத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம். குதிரை வண்டிகளின் பின்புறம் வளைந்து பளபளப்பாக விருக்கும். அங்கு காணப்படும் பிரதிபிம்பத்தை நோக்கினால் நமது முகம் தட்டையாகி விகாரமாக விருக்கும். அதன் எதிரில் நடந்து பார்த்தால் சித்திரக்குள்ளன் அசைந்தாடி வருவது போன்ற வேடிக்கைத்தோற்றம் உண்டாகும். இம்மாதிரித்தோற்றம் ரஸகுண்டுகளில் காணப்படும். இது குவிவான வளைந்த பதார்த்தங்களில் உண்டாகும் தோற்றம். இனிக் குழிவான வஸ்துக்களில் உண்டாகும் தோற்றங்களை நோக்குவோம். விளக்குக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரதிபலனத்தட்டை எடுத்து நெருங்கி நோக்கினால் முகம் பூதாகாரமாகப் பெரியதாகித் தெரியும். சற்று ஒதுங்கி நோக்கினால் பிரதிபிம்பம் தலைகீழாகவும் சிறியதாகவும் விளங்கும். ஆகவே வளைந்த வஸ்துக்கள் முன்னுள்ளவைகளை ஒருவிதமாக விகாரப்படுத்தியே காட்டும்.

குழிவான வஸ்துக்களில் ஏற்படும் பிரதிபலனத்தில் சிலவிசேஷங்கள் உண்டு. வளைவான குழிந்த கண்ணாடியை எடுத்து ஸூரியனுக்கு நேராகப்பிடித்துக் கிழிருக்கும் அசியைக்கிளப்புவோம். பிரதிபலன ரச்மிகள் எல்லாம் குவிந்து கண்ணாடிமுன்பு கொஞ்சதூரத்தில் ஒருபுள்ளியில் வந்து சேர்ந்து விரிந்துபோகும். இது சேருமிடத்தில் ஒரு காகிதம், பஞ்சு முதலிய எளிதில் எரியும் வஸ்துக்களைப் பிடித்தால்உடனே ஜ்வாலைவிட்டு அவைகள் எரியும். ஆகவே ஒவ்வொரு வளைந்து குழிந்த கண்ணாடிக்கும் இம்மாதிரி ஸூரிய ரச்மி சேருமிடம் ஒன்று உண்டு. இதற்கு முக்கிய சேர்க்கை இடம் என்று பெயர். இவ்விடத்தில் காகிதத்தைப் பிடித்துப் பார்க்கும்போது அது எரிவதற்குமுன் அங்கு காணப்படும் புள்ளியைக் கவனித்தால் அதன் அசைவு உருவு முதலியவைகளால் ஸூரியனது பிரதிபிம்பம் என்பது வெளியாக, ஆகவே முக்கிய சேர்க்கைப்

427



புன்ளியில் இக்கண்ணடி வெகு தூரத்திலுள்ள வஸ்துக்களின் உண்மை பிரதிபிம்பந்தை உண்டாக்குகிறது. இதுபோலவே அருகாமையிலுள்ள வஸ்துக்களின் பிரதிபிம்பங்களையும் இது உண்டாக்கும். வளை



வின் சமயம்வரையில் வெளியிலுள்ள வஸ்துக்களில் பிரதிபிம்பத்தை இது முக்கியச் சேர்க்கைப் புள்ளிக்கும் மையத்திற்கு இடையில் சிறிதாகவும் தலைகீழாகவும் உண்டாக்குவதையும், இந்த இடையில் அமையும் வஸ்துக்களுக்குத்தலைகீழாகவும்,பெரியதாகவும் உள்ள பிரதிபிம்பம் மையத்திற்குஅப்பால்உண்டாக்குவதையும்,முக்கிய சேர்க்கை ஸ்தானத்திற்கும் கண்ணடிக்கு இடையிலிருக்கும் வஸ்துக்கள் கண்ணடியுள் நேராகவும் பெரிதாகவும் உள்ள போலி பிரதிபிம்பத்தை உண்டாக்குவதையும் நாம் எளிதில் காணலாம், இதனால் இக்குழிவானகண்ணடிகள் தமது முக்கிய சேர்க்கைஸ்தானத்திலுள்ள வெளிச்சத்தில் ஒளியை ஸமப்படுத்தி பிரகாசப்படுத்தும் பிரதிபலக் கருவியாகவும், தூரதிருஷ்டிக் கண்ணடிகளில் வெளி வஸ்துக்களிலிருந்துவரும் ஒளிகளைக்குவித்துச் சிறியனவாயும் பிரகாசமாயும் தலைகீழாகவும் உள்ள உண்மை பிரதிபிம்பத்தை அருகே உண்டாக்கி அதைப் பரீக்ஷித்து அறிவதை எளிதாக்கவும் உபயோகப்படுகின்றன.

## உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 19. கர்மோபநிஷத் (17)

கர்மோபனிஷத்தில் விளங்குவதாயும், கர்ப்பத்தில் ஆத்மஞானத்தை விளக்குவதாயும், சரீரம் பொய்யாகிவிட மேல் விளங்குவதாயும், விஷ்ணுஸ்வரூபமாயும் இருக்கும் பரமாத்மாவைத் தியானம் பண்ணுகிறேன்.

சரீரம் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என ஐந்து பூதங்களாலாகியது ; இதில் கடினமாக விருப்பது ப்ருதிவி, த்ரவமாகவிருப்பது அப்பு, உஷ்ணமாகவிருப்பது தேஜஸ், ஸஞ்சரிக்கும் குணமுள்ளது வாயு, வெறும் இடமாகவிருப்பது ஆகாசம். இந்தச் சரீரம், ஐந்து இந்திரியங்களிலிருப்பது ; காதுகள் சப்தத்தையும், தோல் ஸ்பர்சத்தையும், கண்கள் ரூபத்தையும், நாக்கு ரஸத்தையும், மூக்கு கந்தத்தையும் உணருகின்றன. இது தித்திப்பு, உவர்ப்பு,புளிப்பு, கைப்பு,உரப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவைகளுக்கு ஆச்ரயமானது ; ஷட்ஜ, ரிஷப, காந்தார, மத்யம, பஞ்சம, தைவத நிஷாத சப்தங்கள் மனதின் தியானத்தால் 10 விதமாகின்றன. இது வெளுப்பு, சிவப்பு, கறுப்பு, சாம்பல்வர்ணம், மஞ்சள், கபிலம்,பாண்டரம் (வெளிப்புச்சிவப்பு) ஆகிய ஆறுகுணங்களோடு கூடியது.

ஒருவனுக்கு(தேவதத்தனுக்கு)பணம்முதலியவைகள் உண்டாகுங்கால் ஒருவிதமான சாந்தகுணத்தால் ஆறுவிதரஸங்கள் உண்டாகின்றன.இவைகளிலிருந்து, ரக்தம், மாம்ஸம், கொழுப்பு, நரம்பு, எலும்பு, உந்தண்ணீர், ரேதஸ் ஆகிய இவைகள் முறையேமுன்னதிலேயிருந்து பின்னதாக உண்டாகின்றன. ரேதஸ்ரக்தம் இவைகள் ஸம்பந்தத்தால் மாதாவின்வயிற்றில் கர்ப்பம் உண்டாகின்றது. ஒருநாளைக்குப் பிறகு இது கருவாயும், ஏழுநாளில் குமிழியாயும், இரண்டுவாரங்களில் பிண்டமாயும், ஒரு மாதத்தில் கடுமையாயும் மாறுகிறது. இரண்டாம் மாதம் தலையும், மூன்றுவதில் கால்களும், நான்காவதில் இடுப்பு முழங்கால், வயிறு முதலியவைகளும், ஐந்தாவதில் முதுகும், ஆறுவதில்

முகம் மூக்கு கண் காது முதலியவைகளும், ஏழாவதில் ஜீவனும், எட்டாவதில் எல்லா லக்ஷணங்களும் உண்டாகின்றன.

தகப்பனுர் ரேதஸ் அதிகமாயின் பிள்ளையும், தாய் ரேதஸ் அதிகமாயின் பெண்ணுமாக அந்தக் குழந்தை ஏற்படும். இருவரதும் ஸமமாயின் நபும் ஸகனுகிவிடும். குழந்தை உண்டாகுங்காலத்தில் தம்பதிகள் மனம் துக்கமடைந்திருக்குமாயின் பிறக்கும் குழந்தைகளுக்குக் கூன், குருடு, மூடம், நொண்டி, குள்ளம் முதலிய குரூபங்கள் உண்டாகும். இருவருடைய வாயு பீடையால் ரேதஸ் இரண்டாகப் பிரிந்து விட்டால் இரட்டைப் பிள்ளைகள் உண்டாகும்.

பஞ்சபூத விகாரனுயும், பஞ்சஇந்திரியங்களை உடையவனுயும், சப்தஸ்பர்சாதி ஞானமுடையவனுயும், கர்ப்பத்திலுள்ள குழந்தை அக்ஷரங்களுக்கெல்லாம் அக்ஷரமான பிரணவத்தை அப்பொழுது நினைக்கிறது. உடனே அதற்கு எட்டு ப்ரகிருதிகளும், 16 விகாரங்களும், சரீரத்தில் உண்டாகின்றன. பிறகு தாய் உட்கொள்ளும் உணவின் ரஸம் அதனிடம் போய்ச்சேரும் வழியாகிய தொப்புள் கொடியால் அதற்கு ப்ராணன் உண்டாகின்றது. பிறகு ஒன்பதாவது மாதத்தில் வரவேண்டிய லக்ஷணங்களெல்லாம் குழந்தைக்கு வந்துவிடுகிறது. உடனே முந்திய ஜன்மஸ்மரணம் உண்டாகிறது அப்பொழுது சுபாசுபகர்மங்களை நினைத்துக்கொண்டு, 'முன்னர் நான் எத்தனையோதரம் தாயின் கர்ப்பத்தை அடைந்து, ஆகாரம் கிரஹித்து, பிறந்து தாய்ப்பால் குடித்தாகிவிட்டது. எத்தனையோதரம், என்னைச் சேர்ந்தவர்களுக்காகச் சுபாசுப கர்மங்களை ஆத்தாத்துடன் செய்தாகிவிட்டது. வாழ்நாள் முடிவதுகூடத் தெரியாது எத்தனையோதரம் மரித்துமாகிவிட்டது. என் வினை என்னையே சுற்றி தனிமையாக இக்கஷ்டத்தை மறுபடி அனுபவிக்கும்படி செய்துவிட்டது. ஐயோ! துக்க ஸமுத்திரத்தில் விழுந்து கரை ஏற வகையறியாது தத்தளிக்கிறேனே! எனக்குத் துணைசெய்வார் ஒருவருமில்லையே! என்னைச் சேர்ந்திருந்தவர்களோ நான்செய்த கர்மங்களின் பலன்களை ஸுகமாகப் பெற்றுக்கொண்டு, இந்த ஸமயத்தில் என்னைத் தனியாகத் திண்டாட விட்டுவிட்டார்களே! என் செய்வது! இனியாவது பிறந்தவுடன் ஜாக்கிரதையாக விருந்து அசுபகர்மங்களை நீக்கி, மோக்ஷமடையும்படி செய்யும், சிவ கேசவர்களைச் சரணம் புகுவேன்; அல்லது ஸாங்கய யோகத்தை அப்யஸிப்பேன்; அல்லது சிறந்த பரம்பொருளை உள்ளபடி தியானித்து இத்துக்கத்திலிருந்து விடுபடுவேன்' என்று பலவாருக அக்குழந்தை மனோராஜ்யம் செய்கிறது.

இப்படி யிருக்கையில் வைஷ்ணவ (சட) வாயு யந்திரம் வேலைசெய்வதுபோலக் குழந்தையைத்தலைகீழாகப் புரட்டியோனித்வாரம் வழியாக வெளிப்படுத்துகிறது. உடனே முற்கூறிய ஜனனமரண ஸ்மரணை இருந்தவிடம்தெரியாமல் பறந்தோடிப்போய் விடுகிறது. முன் பண்ணின தீர்மானமும் வீணுகிறது.

தேஹத்திற்குச் சரீரம் என்றொரு பெயர் உண்டு. ஞானக்னி, தர்சனக்னி, கோஷ்டாக்னி ஆகிய மூன்று அக்னிகள் தங்கி நிற்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. கோஷ்டாக்னி, உட்கொள்ளுபவைகளை ஜீர்ணிக்கும் ஜடராக்னி என்பதே: தர்சனக்னி உருவத்தைத் தோற்றும்படி செய்யும் கண் ஸம்பந்தமான சக்தி. ஞானக்னி, பகுத்தறிவை உண்டாக்கும் அறிவுருவாக விருப்பது. இவைகளுக்கு முறையை கார்ஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணக்னி என்ற மூன்று பெயர்களும் உண்டு. இவைகளுக்கு முறையே வயிறு, முகம், ஹ்ருதயம் ஸ்தானங்கள்.

இவைகள் ஸம்பந்தமாக நடக்கும் யாகத்தில் ஆத்மாவே யஜமானன். மனஸ் ப்ருஹ்மா, காமக்ரோதாதிகள் பசுக்கள் தைர்யம் தீக்ஷை, ஸந்தோஷம் புத்தி, (ஞானே) இந்திரியங்கள் யஞ்ஞபாத்ரங்கள், கர்மேந்திரியங்கள் ஹவிஸ்ஸுக்கள், சிரஸ் கபாலம், கேசங்கள் தர்ப்பங்கள். முகம் அந்தர்வேதி, நான்கு கபாலங்களுடன் கூடியது சிரஸ். தேஹத்தில், 32 தந்தங்கள், 107 மர்மங்கள், 180 ஸந்திகள், 109 நரம்புகள், 700 நாடிகள், 500 உந்தணிகள், 300 எலும்புகள், 66 கோடி ரோமங்கள், ஹ்ருதயம் 8 பலம், நாக்கு 12 பலம், பித்தம் 1 மரக்கால், கபம் 2, ரேதஸ் 3, மதஜலம் 2 உண்டு. ஆஹாரத்திற்குத் தகுந்த மலமூத்ரங்களும் காணப்படும்.

## 20. சாரீரகோப நிஷத் (62)

பஞ்ச மஹா பூதங்களின் சேர்க்கையே சரீரம். இப்பூதங்கள் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்பவைகளே.

1. ப்ருதிவி கடின ஸ்வபாவமுள்ளது. கந்தத்தை விஷயமாக உடைய மூக்கு; ஆனந்திப்பதைத் தொழிலாக உடைய உபஸ்தம்; அபிமானத்தைக் கார்யமாகவும், ஹ்ருதயத்தை ஸ்தானமாகவும் உடைய அகங்காரம்; எலும்பு, தோல், நாடிமயிர், மாம்ஸம் ஆகிய இவைகள் பூமி அம்சம். இதற்குச் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தமாகிய ஐந்து குணங்களும் உண்டு.

2. அப்பு நெகிழ்ச்சியான ஸ்வபாவமுள்ளது. ரஸத்தை விஷயமாக உடைய நாக்கு; மலஜலம் விடுதலைத் தொழிலாக உடைய பாயுரு; நினைப்பைக் கார்யமாகவும், நாபியை ஸ்தானமாகவும் உடைய சித்தம்; மூத்ரம், கபம், ரத்தம், சுக்லம், வேர்வை ஆகிய இவைகள் ஜலாம்சம், இதற்குச் சப்த ஸ்பர்ச ரூப ரஸமாகிய நான்கு குணங்கள் உண்டு.

3. தேஜஸ் உஷ்ண ஸ்வபாவமுள்ளது. ரூபத்தை விஷயமாக உடைய கண்; நடத்தலைத் தொழிலாக உடைய பாதம்; நிச்சயத்தைக் கார்யமாகவும் முகத்தை ஸ்தானமாகவும் உள்ள புத்தி; பசி, தாகம், சோம்பல், மோஹம், மைதுனம், ஆகிய இவைகள் அக்கினி அம்சம். இதற்குச் சப்தஸ்பர்ச ரூபமாகிய மூன்று குணங்கள் உண்டு.

4. வாயு ஸஞ்சாரஸ்வாபவமுள்ளது. ஸ்பர்சத்தை விஷயமாக உடையதோல்; கொடுத்தலைத்தொழிலாக உடையகை; அலைவதைக் கார்யமாயும், கண்டத்தை ஸ்தானமாயும் உடைய மனம்; நடத்தல், கிறதல், கண்களை மூடுதல், திரத்தல் ஆகிய இவைகள் வாயு அம்சம். இதற்கு சப்த ஸ்பரசமாகிய இரண்டு குணங்கள் உண்டு.

5. ஆகாசம் இடங்கொடுக்கும் ஸ்வபாவமுள்ளது. சப்தத்தை விஷயமாக உள்ள காது; பேசுதலைத் தொழிலாக உடைய வாக்கு; (விரிவைக் கார்யமாக உடைய உள்ளம்); காமம் க்ரோதம், லோபம், மோகம், பயம் ஆகியஇவைகள் ஆகாசாம்சம். இதற்குச்சப்தமொன்றே குணம்.

முற்கூறியவைகளில் காது, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, கை, பாதம், பாயுரு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்குக் கர்மேந்திரிங்கள் என்றும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (உள்ளம்) ஆகிய இவைகளுக்கு அந்தஃகரணம் என்றும் பெயர்.

**முக்குணங்கள்.**—ஸத்வ ரஜஸ் தமஸ்என்றவைகளே.

**ஸத்வம்.**—கொல்லாமை, ஸத்யம், திருடாமை, ப்ரஹ்ம சர்யம், பிறர்பொருள் விரும்பாமை, கோபமின்மை, குருவை வழிபடுதல், சுத்தி, ஸந்தோஷம், நேர்மை, தற்புகழ்ச்சி இன்மை, டம்பமின்மை, ஆஸ்திக்யம், தீங்குசெய்யாமை, பூர்ணஞானம் (ப்ருஹ்ம ஞானம்) ஆகிய இவைகள் ஸத்வஸம்பந்தமானவை. இவைகளை உடையவன் ஸ்வர்க்கத்தில் பிறப்பான்.

**ராஜஸம்.**—செய்பவன், அனுபவிப்பவன், அபிமானமுடையவன் என்ற எண்ணங்கள், தர்ம ஞானம் ஆகிய இவைகள் ராஜஸ ஸம்பந்தமானவை. இவைகளை உடையவன் பூமியில் வந்து பிறப்பான்.

**தாமஸம்.**—நித்ரை, சோம்பல், மோஹம், ஆசை, மைதுனம், திருட்டு, அக்ஞானம் ஆகிய இவைகள் தாமஸ ஸம்மந்தமானவை. இவைகளை உடையவன் நரகலோகத்தில் பிறப்பான்.

**அவஸ்தைகள்.**—10 இந்திரியங்கள், அந்தஃகரணம் இவைகளுடன் கூடி இருப்பது ஜாக்ரதாவஸ்தை (விழிப்பு). அந்தஃகரணத்துடனிருப்பது ஸ்வப்நாவஸ்தை (கனவு). சித்தத்துடனிருப்பது ஸுஷுப்தி (தூக்கம்) ஜீவனோடு இருப்பது துரீயம் (நான்காவது நிலை). இவ்வவஸ்தைகளுள் முதல் மூன்றிலும் இருக்கும் ஜீவாத்மா பரமாத்மாக்களுள் ஜீவனே க்ஷேத்ராஜ்ஞன்.|10 இந்திரியங்கள் 5 ப்ராணன்கள், மனம் புத்தி ஆகிய பதினேழும் ஸூக்ஷ்மதேஹம், அல்லது லிங்கதேஹம். பஞ்சபூதங்கள்,மனம்,புத்தி,அகங்காரம் ஆகிய இவைகளுக்கு 8 ப்ருகிருதிகள் என்று பெயர். இங்குக் கூறிய இருபத்திமூன்றுக்கும் அப்பாலுள்ள அவ்யக்தத்தையும்விட சிரேஷ்டன் புருஷன். இது உபநிஷத்.

# வஸந்த மாலிகை

## VASANTHA MALIKAI

## அத்தியாயம் 5.

### காமக்கேடு—*The Evil of Lust*

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோடாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

—திருவிளையாடற்புராணம்.

**வ**லபத்திரனும், ஸ்வாமியாரும், தர்மராஜனைத் தனிமையாய் முன் அறையில் இருக்கச் சொல்லி, ஸரஸ்வதீ மஹாலுக்குள் சென்றார்களென்று முன்னமே சொன்னோமல்லவா?

தர்மராஜன் தனது கருவிழிகள் படபடவென்று துடித்துக்கொண்டு அவ்வறையின் நாற்புறங்களையும் சுற்றிப்பார்த்தான். அவனுள்ளத்தில் ஓர்விதமான வெறுப்பும், வலபத்திரனைப் போன்ற அற்பர்களுடன் கொஞ்சகாலமாவது தனது ஆயுள் நாளில் ஸகவாசம் செய்ய நேர்ந்த தனது துர்பாக்கியத்தால் ஓர் வேதனையும் அவன் உள்ளத்தைப் புண்படுத்த ஆரம்பித்தன.

நிந்தையில்லாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவ
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.*

"ஆஹா! நல்ல ஸஹவாஸங்கள் பிடித்தாய்! பானுமதீ! உன் தந்தை யுன்மேல் பாராட்டி வந்த அன்புக்கு நல்ல பிரதியுபகாரஞ் செய்தாய்! உன் பேதமையால், பெண்களுக்குப் போணிகலனாய் விளங்கும் அச்சம், நாணம், மடமை, மாட்சி யென்னும் கற்புக்கு இன்றியமையாக் குணங்களைத் தவிர்த்து, ஐயோ! சண்டாளர் கைவசப்பட்டு, காமவலையிலகப்பட்டுத் துயர்வது உன் விதியோ! பெண்ணே! ஏகபுத்திரியான உன்னைக்கொண்டு தன் விருத்தாப்பிய காலத்தில் எவ்வளவோ இன்பமாய்க் காலங்கழிக்கலா மென்றிருந்த உன் தந்தையின் வயிற்றில் நெருப்பிட்டாயே! பேதாய்! முன் ஒரு காலத்தில் யான் உன்மீது காதல் கொண்டது உண்மையாயினும், இனி யான் உன்னை வேண்டேன்! துப்பின சோற்றை யாரெடுத்துண்பார்? ஆயினும் உன் தந்தையின் அன்னத்தை நான் புஜித்தவனாதலாலும், உன்னிடத்திலும் கொஞ்சகால

* நீதிவெண்பா.

மாவது அன்பு பாராட்டிய தோஷமும் துர்ப்பாக்கியமுமுடையவனானதாலும், எப்படியாவது உன்னை மீட்டி உன் தந்தையிடம் சேர்ப்பிப்பதே என் கடமை. ஆனால் என் மனத்திருந்தும் கொள்ளை போயின உன்னை மறுபடியும் நான்—"

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவ்வறையின் பக்கத்துக் கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. அவன் சிந்தை கலைந்து திடுக்கிட்டு அப்புறம் நோக்கினான். கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது போலத் தான் இதுவரை தேடிவந்த மாதைக்கண்டு கொண்டான் உடனே அவனுள்ளத்தி லுதித்த வெறுப்பினால் தன் ஆடையால் தன் முகத்தை மறைத்துக்கொண்டான்.

இந்நிலைமையில், மின்கொடி போல் துவளும் அழகிய சரீரமும்,பொன்போன்ற மேனியும், சந்திரபிம்பம் போல் அழகிய வதனமும், கொவ்வைக் கனிபோல் சிவந்த அதரமும், அதிரூபலாவண்யம் வாய்ந்த பதினெண் வயதுள்ள ஓர் யௌவனமங்கை அக்கதவைத் திறந்ததும் "பிராணநாதா!" என்று காதல் மொழியால் ஸம்போதனஞ் செய்துகொண்டு மான்போல் துள்ளித் தர்மராஜன்மேல் பாய்ந்து அவனை யிறுகத்தழுவி மார்பின்மேல் முகம்பதித்து விம்மிவிம்மி யழஆரம்பித்தாள்.

இப்பரிதாபத்தைக்கண்ட தர்மராஜனும், தன்முகத்தை மூடியவாறே தானும் விம்மிவிம்மி யழுதான்.

உடனே அம்மாது அன்னவன் முகத்தை நோக்கி "என் உயிர்க்காதலா! என்னிடம் இவ்வாறு தமக்கு வெறுப்பும் நேரிட்டுவிட்டதோ? என்மேல் தாம் பாராட்டிய மெய்க்காதலைக் கொள்ளைகொள்ள வேறு மங்கையும் வந்துவிட்டாளோ. என் ஆசைநாதா! நீர் இவ்வாறு செய்வது தர்மமா? என்று தீனமானகுரலுடன், அவன் கைகளை முகத்தினின்றும் விலக்க,

தர்மராஜன்.—"ஐயோ! பானுமதி! ஐயோ! ஐயோ!" என்று தீனமான குரலுடன் விம்மி விம்மி யழ ஆரம்பித்தான்.

தர்மராஜனுடைய முகத்தைப் பார்த்ததும் அவன் குரலைக் கேட்டதும் பானுமதியின் மனநிலை நிமிஷநேரத்தில் மாறிவிட்டது. உடனே திடுக்கிட்டுப் பின்னடைந்து, நெஞ்சும் மார்பும் படபடவென்று துடிக்க ஒன்றும் சொல்லத் தோன்றாதவளாய் தர்மராஜனையே நோக்கிய விழிகளுடன் சித்திரப்பாவைபோல ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

தர்மராஜனும் சற்றுநேரம் திகைத்து நின்றுவிட்டு, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடலாகாதே என்ற பயத்தால், தைரியப் படுத்திக்கொண்டு, அம்மங்கையை நோக்கி "பானுமதீ! நீ ஏன் பயப்பட வேண்டும்?" என்று தீனமாய்க் கூறினான்.

பானுமதீ.—"உன்னிடத்தில் ஒருவித பயமுமில்லை! தர்ம! உன்னிடத்தில் எனக்கு என்ன பயம்! சரி அது இருக்கட்டும்! நீ ஏன் இவ்வாறு என் அந்தப்புரத்தில் பிரவேசித்தாய். உன்னை இங்கே யார் அழைத்தார்?"

தர்மராஜன்.—"உன் அந்தப்புரம்! ஐயோ! இச்சிறைச்சாலை உனக்கு அந்தப்புரமாகவா விளங்குகின்றது. ஐயோ! இச்சிறைச்சாலையில் ஓர் கொடிய பாதகன் வசத்துக்குட்பட்டு.—"

பானுமதீ.—"தர்ம! இது என் அரண்மனை. என் இஷ்டப்படிதான் நான் இங்கே ஏகாந்தமாய் வஸித்து வருகின்றேன். இதற்கு ஆட்சேபிக்கத் தக்கவன் எவன்?"

தர்மராஜன்.—உன்னைப் பெற்ற—"உன் தகப்பனார் வயிறெரியச் செய்தாயே—அப்படிப்பட்ட உன் தகப்பனார்,உன்னைத் தேடிவருமாறு அதிகாரத்துடன் என்னை யனுப்பியிருக்கிறார். அவர் வெளியேறக்கூடாத நிலைமையிலிருக்கின்றார். பார்த்தாயா இந்தக் கடிதத்தை? அவர் மனம் பிரிந்து தவிக்கும் நிலைமையில் கண்ணும் கண்ணீருமாய் இதை எழுதியிருக்கின்றார். அவர் அவஸ்தை—"

பானுமதீ.—"அவஸ்தை! அப்படியானால் என் தகப்பனார் வியாதியால் வருந்துகின்றாரா?"

தர்மராஜன்.—"ஆமாம் பெண்ணே! ஆமாம்! நீ வேகமாய்ச் சென்றாலும், அவரை உயிருடனாவது பார்க்கக்கூடுமோ வென்பது ஸந்தேகம். அவ்வளவு அபாய நிலைமையிலிருக்கின்றார். பெண்ணே! சீக்கிரம் புறப்படு. உடனே அழைத்துச் செல்லுகின்றேன்!"

பானுமதீ.—"தர்ம! நான் அவ்வளவு திடீரென்று புறப்பட முடியாது. அப்படிச் செய்யவும் மாட்டேன். இவ்விடத்தினின்று திடீரென்று வெளியேற துணியவும் மாட்டேன். தர்ம! ஆகையால், என் தந்தையிடம் சென்று, நான் உத்திரவுபெற்று, இன்னும் 30 நாழிகைப் பொழுதில் அவரை வந்து பார்ப்பதாக அவரிடம் சொல். தர்ம! சீக்கிரம் புறப்படு! நான் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருப்பதாகவும், அவர் எண்ணிய எண்ணத்துக்கு மேலான பதவியிலேயே நான் இருப்பதாகவும் சொல். தர்ம! நீயும் என்னை மன்னித்துக்கொள்! கொஞ்சம் மனவருத்தம் உண்டு பண்ணி விட்டேன்! என்ன செய்யலாம், தெய்வ ஸங்கல்பம், நான் உன்னிலும் உயர் பதவியடைந்து வாழ எனக்குப் பாக்கியமிருக்கின்றது. தர்ம! வருத்தப்படாதே! நான் சிறுவயது முதல் உன்னிடம் பழகிய அன்புக்கு ஒருவிதத்தாலில்லாத போனாலும்,வேறு பலவிதமாய் உனக்கு உதவிசெய்து, உன்னை நல்ல நிலைமையில் நாட்ட எனக்குச்சக்தியுண்டு.—

தர்மராஜன்.—பானுமதி! என்னைப்பார்த்து இவ்வார்த்தைகள் சொல்ல நீ எவ்வாறு துணிந்தாய்! பானுமதி, நீ ஆயிரஞ் சொன்னாலும், உன்னால் என் மனம் நொந்த புண் ஆறுமா? ஒருகாலுமில்லை. ஏதோ நான் உன் தயவுக்கு வந்திருப்பதாக எண்ணாதே! உன்னுடைய நன்மைக்காக, உன்னைக் காப்பாற்றும் பொருட்டு வந்திருக்கின்றேன். நீ இப்பொழுது ஓர் கைதியாயிருக்கின்றாய், இல்லாவிட்டால், என் வார்த்தைகள் காதில் விழுந்ததும், பறந்தோடி உன் பிதாவின் பாதத்தில் விழமாட்டாயா? பேதாய்! துரதிருஷ்டம் பிடித்தவளே! உடனே புறப்படு. என் நன்மைக்காக நான்

சொல்லவில்லை. உன்னை அப்பொழுதே வெறுத்து விட்டேன். போனதுபோகட்டும் உன் தகப்பனாரை உயிருடனாவது கண்டு, அவர் பாதங்களில் வீழ்ந்து, நீ செய்ததெல்லாம் பிசகென்று அவர் மனதை ஆற்றி, அவரிடம் மன்னிப்பும் ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்.

பானுமதி.—"தர்ம! நான் அப்பொழுதே சொல்லவில்லையா? கட்டாயம் வந்துவிடுகின்றேன். எனக்கு உத்தரவு கிடைத்ததும்—"

தர்மராஜன்.—"உத்தரவு! உன்னுடைய தகப்பனாரை, அவர் மரணாபாய நிலைமையில் இருக்கையில்—உன் தகப்பனாரைப் பார்க்க—உத்தரவு! எந்தச் சண்டாளனிடம் நீ பெறவேண்டும். உன் தகப்பனிட்ட அன்னத்துக்குத் துரோகம் நினைத்து, உன்னையும் அபகரித்துச் சென்று, உன் தகப்பனாருடைய மனதையும் பிளக்கச்செய்த அச்சண்டாளனிடத்தா.—"

பானுமதி.—"தர்ம! இனி இவ்வாறு பிதற்றாதே. பெரிய இடத்துக் காரியம். நீர் நிந்திப்பது யாரையென்று அறிவாயா? தலைபோய்விடும். பத்திரம்! நான் இட்ட கட்டளைப்படி செய் இனிமேல் அனுப்புவதானால் உன்னைத் தவிர வேறு ஒருவனைத் தூதனாய் அனுப்பச் சொல். உடனே வெளியே செல்!"

தர்மராஜன்.—"பானுமதி! இதற்கெல்லாம் நான் அஞ்சினவனல்ல! இருக்கட்டும்! ஒருவிஷயம் மாத்திரம் சொல். உனக்கு இப்பொழுது உத்தரவுஅளிக்கத் தக்கவன் உன் கணவன் ஸ்தானத்திலா அல்லது—"

பானுமதி.—"துஷ்டா! இனி இவ்வாறு மரியாதைக் குறைவாய்ப் பேசாதே! நான்—"

தர்மராஜன்.—தெரிந்தது அறிந்துகொண்டேன் பானுமதி! நீ இந்நிலைமைக்கு வரும்படி உன் தலைவிதியும் எழுதியிருக்கின்றது பார்த்தாயா? நீ என்ன சொன்னாலும் சரி! உன்னை இச்சிறையினின்றும் மீட்டி, உன் தகப்பனாரிடம் சேர்ப்பிப்பதற்கு, ராஜ ஸாஸனம் பெற்றிருக்கின்றேன். இதோ பார்!

பானுமதி.—"தர்ம! சும்மா பயமுறுத்தவேண்டாம். உன்னை இப்பொழுதே வெளியேற்ற எனக்கு அதிகாரமுண்டு—"

தர்மராஜன்.—"ஒருவராலும் முடியாது. நீ செய்யும் தொழிலோ கெட்ட தொழில். நானோ அதிகாரம் பெற்றிருக்கின்றேன். பானுமதி! நீ காம வலைக்குட்பட்டு, மயங்கி காமப் பிசாசால் பிடிபட்டிருக்கிறாய். அப்பிசாசை இப்பொழுதே ஓட்டிவிடுகின்றேன் பார். உன் தகப்பனார் கொடுத்த அதிகாரத்தை முன்னிட்டு, உன்னை இப்பொழுதே புறப்படும்படி ஆக்ஞாபிக்கின்றேன். புறப்படுகிறாயா? இல்லையா? இவ்வாறு அதிகாரத்துடன் கம்பீரமாய்க் கர்ஜித்துக்கொண்டு தர்மராஜன் பானுமதியின் கிட்ட நெருங்கி அவள்கைகளை எட்டிப் பிடித்தான். உடனே அவள் திடுக்கிட்டுத் திகிலடைந்து கைகளைத் திமிறிக்கொண்டு பின்னடைந்து "ஐயோ! ஐயோ!" என்று கதறவே, அச்சத்தத்தைக் கேட்டு வலபத்திரனும் ஸ்வாமியாரும், விரைந்தோடி வந்து சேர்ந்தார்கள். (தொடரும்)



# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

### 3-வது அங்கம்

களம்-1—மலையமலையில் ஓர் உய்யான வனம்

(விசித்திரமான பலவர்ணமான உடைதரித்து தடுமாறி குடிவெறியோடு விடனும், மதுபாத்திரத்தோடு சேடனும் வரல்)

விடன்.—(சந்தோஷத்துடன்)
ஒழியாக் கள்குடிப்பான்—கயல்
விழியுடை காதலித்தனைக்கலந்து
கூடிக் குலாவிடுவான்—இவர்
இருவரு மேபாம் பொருளறிவீர்
காக்குந் தெய்வமவர்—பல
தேவனு காமத்து தேவனென
அவர்தம் பெயர் கண்டாய்—
(தள்ளாடிக்கொண்டு)
இன
சேகரகா எனதா கத்துயிர்
பலன்கண் டிடுங்கண்டாய்—கரு
விழியுடைக் காதலி யெழிலுருவின்
நுழைந்தாள் என்மனத்தே—கருந்
தாமரை யோடுவெண் மாமதுவும்
வாயோ மணம்வீசும்—எழில்
வாச மலர்கண்ணி நேசித்தென்றன்
தலையோ மிலைதருமால்—மன
சேகர கன்எனு நாகரிகன்
அதன்மேல் வாழ்பவனும் (தடுமாறுதல்)

யாரடா அது? என்னை-பிடிச்சு-தள்றது? (ஸந்தோஷத்தோடு) ஆமாம்! ஆமாம்! அவெத்தான்! நோமாலைத்தான் எங்கிட்டெ பரிகாசம் பண்றா!

சேடன்.— அப்படிக்கில்லெங்கோ! ஆண்டே! நோமாலை இன்னமிங்கே வரக்காணலயே?

விடன்.—(கோபத்தோடு) இன்னெ ராவு பகல் மொதல் ஜாமத்தே யல்லவோ மலையதிம்மா கலியாண திருழா தடபுடலா நடந்தாட்து. அடே கிளக்கு வெளுத்தாட்து! இன்னம் அவளெ வரக் காணலயே! (ஸந்தோஷத்துடன்-யோசித்து) ஆமாங்கரே! இந்த மலையதிம்மா கலியாணத்லே வப்பட்ட மனிசாள்! அந்த சித்த விஞ்சாதஆ அவங்கவங்க ஆசை கண்ணாட்டிங்களோடெ இந்தப் பூஞ்சோலையிலே குடிச்சு

கிட்டு குஷாலாக கூத்தாடிக்கின்னு இருக்காருங்கோ. கோமாலை அங்கெயெத்தான் என்னை வரப்பாக்ரா போலெ இருக்கு; நாங்கூட அங்கெத்தான் போறேன். நவ்மாலை இல்லாட்டா சேகரம்யாதுக்கோ?

(தள்ளாடி நடக்கிறான்)

சேடன்.— இதோ வழி! ஐயா! பூஞ்சோலை இங்கிருக்கு, ஐயா, உள்ளே போமே.

(இருவரும் சோலையுள் நுழைதல்)

விதூஷகன் ஒரு சதை வேஷ்டியை தோளிற் கட்டிக்கொண்டு வரல்.

விதூஷகன்.—நான் இன்றைக்கு என் நேசன் உத்தியான வனத்திற்குப் போகப் போகிறதாகக் கேள்விப்பட்டேன். நானும் அங்குப் போகிறேன். (முன் நடந்து, உற்று நோக்கி) இதுதான் உத்தியான வனம். இதற்குள் நுழைகிறேன்—(உள் நுழைந்து, தேனீக்களால் தொந்தரை அடைந்தாற்போலக் காட்டிக்கொண்டு) அகோ! இந்தப் பாழும் மதுகரான் என்மேல் ஏன் இப்படி விழுகிறார்கள்.—(தனது உடம்பின் வாசனையைக் கவனித்து) ஆமாம்! எனக்கு நன்றாகத் தெரிகிறது! தமது மருமகனுடைய ஆத்மநேசன் என்று அறிந்த மலையவதியின் பந்துக்கள், வாசனைப் பூச்சுகளை என் உடம்பில் லேபனம் செய்து இருக்கிறார்கள். ஸந்தான சேகரகம் என்னும் மாலையையும் என்தலைமேல் சூட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய பெரும் விதரணை எனக்குப் பெருந்தொல்லைக்கிடம் கொடுத்து விட்டது. நான் இங்கு இனி என்ன செய்வது? இல்லாவிட்டால் ஒன்று செய்கிறேன். மலையவதியிடம் பெற்ற இந்த இரண்டு சிகப்பு வஸ்திரங்களைக்கொண்டு பெண் வேஷங் கொண்டு மேலாடையால் முகத்தை மறைத்து முட்டாக்கிட்டுக்கொண்டு போவேன். அப்போது இக்கொடும் மதுகரங்களால் என்னசெய்ய முடியும்.

விடன்.—(ஸந்தோஷத்துடன்-நோக்கி) இதோ பாரடா! சேடா! (சுட்டிக்காட்டி - சிரித்துக்கொண்டு) அதோ என்னை பாத்துக்கிண்டு வாராளே அவோத்தான் நோமாலை; நான் வருகாரத்துக்கு நேரமாய்டென்னு மூஞ்சை மூடிக்கிட்டு போறா பாத்தியா! நான் அவொ களுத்தை கட்டிக்கிண்டு அவோகோபத்தைத் தணிக்கிறேன்(பரபரப்புடன் ஓடிவந்து விதூஷகனைக் கட்டிக்கொண்டு அவன் வாயில் தம்பல உமிழயத்திரிக்கிறான்)

விதூஷகன்.—(கள்வாசனை மோந்து) சீச்சீ! தடியாசே! போடா அன்னண்டே! (மூக்கை பிடித்துக்கொண்டு மறுபுறம் பார்த்து-தனக்குள்) மதுகரங்களைத் தப்பி வந்தேன்! அடே என்ன இந்து மதுகரங்கள் கையிலகப்படவா அப்டிச் செய்தேன்?

விடன்.—அடே! கோபத்தோடே என்ன முறிக்கிக்கிறு! ஸரி அவள் காலிலே விளுந்து கெஞ்சிக்கிறேன் (அவள் காலில் விழுந்து, நமஸ்கரித்தல்) நோமாலை கோபியாதடி! கோவம் வாண்டாம்! மனஸை ஸரிபடுத்திக்கோ!

(தாதிவரல்)

தாதி.—அரசி மலையவதியின் தாயால் இவ்வாறு ஆணையிடப்பட்டிருக்கிறேன்.—"நவமாலிகே! நீ உத்தியான வனம் சென்று, என் மருமகன் மலையவதியோடு அங்கு வருவன் ஆசையால் தாமலசாலையை நன்றாக அலங்கரித்துவைக்கத் தோட்டக்காரன் பல்லவிகனுடன் சொல்." நான் பல்லவிகனுக்கு அவ்வாறேசொல்லி இருக்கிறேன். இரவுமுழுதும் என்னைப் பிரிந்ததால் வருத்தமடையும் என் நேசன் சேகரனை, இனி அடைவேன். (உற்று நோக்கி) இதோ இருக்கிறான் சேகரகன் (கோபத்தோடு) அவன் யாரோ வேறு ஸ்த்ரீயையல்லவா ஸந்தோஷப்படுத்தப் பார்க்கிறான். இங்கையே நான் இருந்து அவள் யாரென்று கவனிப்பேன்.

விடன்.—(ஸந்தோஷத்தோடு)

வணங்கா முடியனிவன்—சிவன்
அரியயன் யாரையும் அடிபணியான்
பெயரால் சேகரகன்-கயல்
விழிநோ மாலைநின் கழல்தலைமேற்
கொண்டா னிதுகண்டாய்—

விதூஷகன்.—அடே! அஸத்து! மரியாதை கெட்டப்பயலே! குடிவெறியா! நோமாலை இங்கு எங்கடா இருக்கிறாள்.

தோழி.—(நோக்கி-சிரித்துக்கொண்டு) என்ன! மதி மயங்கி, ஒன்றும் தெரியா அந்த ஆத்ரேயனைப் பிடித்து என்ன பாடுபடுத்துறான். கள்ளுண்ணும்படி வெருட்டுகிறான். நான் கோபங்கொண்டவள்போலக் காட்டி இவ்விரண்டு பேரையும் பரிஹாஸப்படுத்துவேன்.

# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULLYSES

(தொடர்ச்சி).

உதயமானவுடன் கிரேக்கர்களில் இரண்டுபேரை அடித்துத் தின்று ஆட்டுப்பாலை வயிறுநிரம்பக் குடித்து விட்டு ஆடுகளை வெளியிலோட்டிப் போகையில் வாசற் கல்லைத் துரும்புபோலெடுத்துப்போட்டுத் தானும் ஆடு களும் வெளி வந்தபின் கல்லை யெடுத்து வாயிலை ராக்ஷஸன் மூடிவிட்டான். உல்லாஸனும் அவனாட்களும் சிறையிலடைபட்டவர்கள் போலானார்கள். ராக்ஷஸனே உற்சாகமிகச் சிட்டியடித்துக்கொண்டு மேய்ச்சல் நிலத் திற்கு ஆடுகளை ஓட்டிக்கொண்டு போனான்.

உல்லாஸனை உலகமறியாத சிறு குழந்தையாகத் தான் ராக்ஷஸன் எண்ணியிருக்கவேண்டும். உல்லாஸன் புயவலியினும் புத்திவலியில் எல்லோரிலும் மேம் பட்டவனென்பது ராக்ஷஸனுக்குத் தெரியாது. குகையி லடைபட்டிருக்கையில் உல்லாஸன் ஒரு யுக்தி செய் தான். ராக்ஷஸன் கொணர்ந்திருந்த விறகு கட்டை யொன்றை யெடுத்து அதன்முனையைச் சுட்டுக் கூர்மை பண்ணித் தன்னாட்கள் அதை வைத்துக்கொண்டு செய்யவேண்டுவது என்னவென்று அவர்களுக்குச் செவ்வையாய்க் கற்பித்திருந்தான். பொழுதுபோன வுடன் ராக்ஷஸன் குகைக்கு ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தான். வழக்கத்துக்கு விரோதமாக அன்றிரவு ஆண் ஆடுகளையும் உள்ளே ஓட்டிவந்தான். இதுவும் தெய்வத் தின் செயலென்பது பின்பு விளங்கும். உள்ளே வந்த வுடன் கிரேக்கர் இருவரைப் பிடித்துத்தின்று ஆட்டுப் பாலைக் குடித்துப் படுக்கப்போகுமுன்னே உல்லாஸன் ராக்ஷஸன் ஸமீபத்திற்போய், "இரண்டு மனிதர்களு டைய மாம்ஸம் உன் இரைப்பையிற் சேர்ந்திருக்கின் றது. அது ஜீரணமாவதற்கு நான் கொடுக்கும் மது வைப் பானம் பண்ணு. அப்படிச் செய்தபின் எங்க ளூர்ச் சாராயத்தின் மகிமையை நீ அறிவாய். நீ எனக் குச் செய்யவேண்டிய கைம்மாறு மிருந்தவர்களை ஹிம்ஸை செய்யாமல் விடலாம். உன் வீட்டிற்கு வந்த விருந்தினர்களை அருந்திவிடுவாயானல் உன்னைத்தேடி எவர் வருவார்?" என்று சொல்லி ஒரு பாத்திரம் நிறைந்த மதுவைக் கொடுத்தான்.

ராக்ஷஸன் மதுவை ஆவலோடு வாங்கிப் பருகி இன்னும் வேண்டுமென்று மதுவைத்திருந்த தோற் பையினருகே நகர்ந்தான். தனக்குப் பேருதவி செய்த வனென்று உல்லாஸனைப் புகழ்ந்தான். "உட்கப்படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங் கட்காதல் கொண் டொழுகுவார்" என்று பெரியோர் சொன்னது பொய் யாகுமா? குடிவெறியில் மனவெழுச்சியுண்டாகி ராக்ஷ ஸன், "கிரேக்கரை, நீர் யார்? இவ்வளவு ருசியான மதுவை யென்றும் நான் பருகினதில்லை. எங்களூரில் திராக்ஷப்பழம் மிகுதிதான். ஆயினும் உங்களூர் மதுவைப்போல மாதுர்யமான பானத்தை எம்மனோர் செய்ததேயில்லை. உம்முடைய பெயரைச் சொல்வீரா யின் உமக்குத்தக்க ஸன்மானஞ்செய்வேன்," என்றான்.

உல்லாஸன் ஸமயோசிதமாய்ப் பேசத் தெரிந்த சாதுர்யவானாகையால் ராக்ஷஸனை நோக்கி, "எனக்குப் பெயர் நமன் எங்களூரார் என்னை நமனென்றுதான் அழைப்பார்கள்." கள்மயக்கத்தில் ராக்ஷஸன், "நம னுக்கு நான் செய்யும் பிரதியுபகாரம் இதுதான். மற்ற ஆட்களைத் தின்றபின் நமனைத் தின்பேன். இது தக்க கைம்மாறல்லவா?" என்று சொல்லிக்கொண்டே லாகிரியால் தூக்கம்வந்து பிணம்போற் கிடந்தான்.

ராக்ஷஸன் மெய்ம்மறந்து குறட்டைவிட்டுத் தூங் குஞ் சமயம் பார்த்து, உல்லாஸன் தன்னாட்களைத் திடம்பண்ணி கூர்மைபண்ணின விறகுகட்டையை நெருப்பில் பழுக்கக் காய்ச்சிப் பலபீமன் நெற்றிக் கண் ணைத் தொளைக்கும்படி வைத்தழுத்தவே, ராக்ஷஸன் கண்ணிலிருந்து புகைக்கிளம்பி கண் புண்ணாகிப் பொட்டையாயிற்று. உல்லாஸனுடைய தைரியத்தை யும் யுக்தியையும் என்னென்று சொல்வோம்!

கண்ணிலுண்டான வலியால் ராக்ஷஸன் எழுந்து இடி முழக்கம்போல் அலறினன். உல்லாஸனும் அவ னாட்களும் மூலைக்கு மூலை போயொளித்துக் கொண் டார்கள். ராக்ஷஸன் கண்ணிற் புதைபட்டிருந்த விறகு கட்டையைப் பிடுங்கி வெறிகொண்டவன் போலெ றிந்தான். இவன் நள்ளிரவில் ஓலமிட்டதைக் கேட்ட கிக்லாப்பர் ஓடிவந்து வாயிலில் நின்று "பலபீமா, உனக்கு என்ன ஆபத்து வந்தது? நீ யேன் அலறுகின் றாய்? நான் எவனாலாவது உனக்குத் தீங்கு ஸம்பவித் ததோ? எவர் வஞ்சனையினால் நீ துன்பமடைந்தாய்?" என்று கேட்டதற்கு ராக்ஷஸன், "நமன் என்னை வருத்திக் கொலைசெய்கின்றான். என்னுடன் நமனி ருக்கின்றான்" என்று மறுமொழி சொல்ல, மற்ற கிக் லாப்பர், "நமனே உன்னிட மிருப்பானாயின் நாம் செய்யக்கூடிய தொன்றுமில்லை. நமன் செய்தாலும் தெய்வஞ் செய்தாலுமொன்றே. எங்களாலுனக்காகக் கூடியதொன்றுமில்லை. எங்கள் தூக்கத்தை நீ அலறிக் கெடுத்ததுதான் பலன். நாங்கள் வீட்டிற்குப் போகின் றோம்," என்று கூறிவிட்டு அவரவர் ஸ்தானத்திற்கு ஊரார் சென்றார்.

கே. வேங்கடராமய்யர், பி.ஏ.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## வியாஸ விதானம்
## Essay writing
### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
### REFLECTIVE ESSAYS
### 3. விரிவுவிளக்கம்:—

*உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்*
*கச்சாணி அன்னார் உடைத்து.* [தேர்க்

Expansion of thought :—Things are not what they seem

குறிப்பு:—பொருள் முதலியன—மேற்கோள்களும் பயனும்—உதாரணங்கள்—மதவிஷயப் பொருத்தம்—கதை.

இக்குறள் அங்க வியல் வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தில் காணப்படுகிறது. மந்திரியின் லக்ஷணங்களைக் கூறி வருங்கால் வினைசெய்யும் திறன் வெளித் தோற்றத்தால் மாத்திரம் மதிக்கத்தக்கதல்ல ; பார்வைக்குச் சிறியனாகத் தோற்றினும் திறமையில் சிறந்தவனாக விருக்கலாம் மந்திரி என்று கூறப்புகுந்த விடத்து அமைந்துள்ளது இக்குறள். உருளும் பெரிய தேரை அச்சாணி சிறிதாயினும் எவ்வாறு திடமாக விருந்து காக்கின்றதோ அவ்வாறு திறமைவாய்ந்து உருவிற் சிறியவராயினும் காரியத்தில் புலிகள் போன்றவரை உடையது இவ்வுலகம். ஆதலால் தோற்ற இழிவைக் கண்டு எவரையும் இகழலாகாது என்பது இக்குறளின் பொருள். நாம் உலகில் பழகிவருங் காலத்து அநேகரைக் காணும்படி நேரிடும். அவர்களுள் தோற்ற மாத்திரத்தில் கம்பீரமாக விருப்பவரைக் கண்டதும் நமக்கு அவர்கள் விஷயத்தில் ஒருவித நல்லெண்ணமும், அவ்வாறில்லாது சாதாரணமாகத் தோற்றுபவர் விஷயத்தில் ஒருவித வெறுப்பு அல்லது அனாதரவும் உண்டாவது இயற்கை. இவ்வாறு உண்டான போதிலும் இதை மேல் ஓங்கி நமது அபிப்பிராயத்தை நிலைபெறச் செய்யும்படியாகவும், இதற்கேற்ப அவர்கள் விஷயத்தில் நடந்து கொள்ளும்படியாகவும் செய்யவொட்டாது தடுக்க வேண்டும் புத்திமான்கள். இம்மாதிரியாக வெல்லாம் மேற்காரியங்கள் நடத்துவதற்கு முன்னர் நம் எதிரே தோன்றுபவர்கள் நடத்தை விஷயங்களை நன்கு விசாரித்து உணர்ந்து பின்னர்தான் முதல்தோன்றிய எண்ணத்தை வற்புறுத்தவாவது மாற்றவாவது வேண்டும். அதுவரையில் முதல் எண்ணத்தைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு நடுநிலையில் இருக்கவேண்டும் என்பதே இக்குறளின் கருத்து. இவ்வாறு மனதை நடுநிலையில்வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பதைத் திடப்படுத்த தேரின் அச்சாணியின் உபமானத்தைக் காட்டியிருக்கிறது. இதன்படி உருவிற் சிறியாரைக்கண்டு ஆராயாது இகழலாகாது என்பதுமாத்திரம் இக்குறளின் பொருளாயினும், இதனோடு சம்பந்தப்பட்டதாயுள்ள ‘உருவின் பெருமைக் கண்டு மோசம் போகலாகாது’ என்பதையும் பொதுவாக வருவிக்கப்பட்டது. அறிவுடைய மந்திரி விஷயமாகக் கூறியதால் ஒரு வழியாகக் கூறி நிறுத்திய குறளைப் பொதுவாகப் பொருள் படுத்துங்கால் அதனோடு ஸம்பந்தப்பட்ட எதிர் விஷயத்தையும் இங்கு சேர்த்துக் கூறியுள்ளது.

இந்த விஷயத்தை மற்றைய கவிகளும் நன்கு எடுத்து ஆண்டிருக்கின்றனர். ஔவை மூதுரையில்

மடல்பெரிது தாழை, மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்

என்றும், அதிவீரராமபாண்டியன் நறுந்தொகையில்:—

தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே ;
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப்புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே ;
(ஆதலால்)
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாஞ் சிறியரு மல்லர்
பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்

என்றும், இதுபோல மற்ற கவிகளும் அநேகவிதமாக இக்கருத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இதுவும் அன்றி நமது பேச்சிலும் ஸாதாரணமாக இக்கருத்து பழமொழி ரூபமாக வழங்கியும் வருகிறது. அவன் என்னடா ‘பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி போலிருப்பவன்’ என்றும், ‘வெளுத்ததெல்லாம் பாலாகுமா, கருத்ததெல்லாம் தண்ணீராகுமா’ என்றும் நாம் ஸாதாரணமாகக் கூறுவது இக்கருத்தையே அடக்கியுள்ளது. ஆகவே இம்மாதிரியான விஷயங்களை உணர்ந்த நாம்இவ்வுலகில் பழகுங்கால் எந்தப் புற்றில்எந்தப் பாம்பிருக்குமோ என்று எண்ணி ஜாக்கிரதையாக விருப்பது போல எந்த உருவத்துடன் சிறந்தவர்களிருப்பார்களோ என்று கவனித்தே ஒழுகவேண்டும்.

இந்த விஷயத்தில் புராணாதிகளிலிருந்து உதாரணங்கள் கொடுக்கலாம். போஜராஜன், தன் ஸபையில் வந்திருந்த தாய் தகப்பன் பிள்ளை நாட்டுப்பெண் என்ற இவர்களாலாகிய கவி குடும்பத்தை நோக்கி ‘பெரியோர்களுக்கு க்ரியாஸித்தி அவர்கள் ஸத்வத்தால் ஏற்படுவதே ஒழிய கருவிகளால் அல்ல’ என்ற கருத்துடைய ஒரு அடியைக் கொடுத்துச் சுலோகத்தை முடிக்கும்படி சொல்ல, அவர்கள் முறையே அகஸ்தியர், ஸூரியன், ஸ்ரீராமர், மன்மதன் ஆகிய இவர்களைச்சொல்லி, இவர்

களுக்கு ஸஹாயம் அதிகமாக இல்லாவிடினும் இவர்கள் பெரிய காரியவித்தி பெற்றுத் தம்மைக் கண்டு இகழ்ந்த விரோதிகளையும் அடக்கி யிருக்கின்றனர் என்றார்கள். இதுபோலப் புராணங்களில் தர்மவான்கள் மிகக் கஷ்டப்பட்டு முடிவில் ஈச்வரகிருபையால் வெளியேறி தமது வலிமையை வெளியிட்டுச் சிறப்புற்றோங்கினர் என்று காட்டியிருக்கின்றனர் நம்முன்னோர்.

மதவிஷயத்தில் இந்தக் குறளுக்கு நல்ல பொருத்தம் உண்டு. கர்மங்களை ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கும் என்பது மதவிஷயத்துணிபு. பஞ்சுப் பொதிகள் எவ்வளவு பெரிதாக விருப்பினும் அவைகளை எல்லாம் மிகச்சிறிதான நெருப்புப் பொறி சாம்பலாக்கி விடுவதுபோல ஞானம் உள்ளபடி பிறந்தஉடன் கர்மங்கள் எவ்வளவிருப்பினும் அவைகளை இருந்தவிடம் தெரியாமல் பறக்கடிக்கும். இதுபற்றியே குருவைச் சிறியவர் என்றும், சிஷ்யர்களைப் பெரியவர்கள் என்றும் தக்ஷிணாமூர்த்தி விஷயத்திலும், இளங்குழந்தையான ஸுப்ரஹ்மண்யர் மிக வயதுசென்ற வரபலமுடையவரான சூரபத்மாதியரை அழித்துவிட்டதாக ஸ்காந்தத்திலும் கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஞானிகள் பாலர், உன்மத்தர், பிசாசுகள் போல்வும், சாம்பல்பூத்த நெருப்புப் போலவும், ஸாதாரண ஜனங்கள் போலவும் இருப்பார்கள் என்று வேதமே கூறும். ஆகவே ஞானத்தின் மேன்மையை உணர்ந்து பெரியோரை அடுத்து வீடு என்னும் பரமபுருஷார்த்தத்தை அடைய விரும்பும் அப்பியாஸி 'உருவுகண் டெள்ளாமை வேண்டும்.'

இக்குறள் விஷயத்தை நன்கு விளக்கி, இதற்கு விரோதமாக நடந்தால் வரும் கேடு இத்தன்மையது என்பதைக் காட்டுவது ஸ்ரீமத் பாகவதம் 8-ம் ஸ்கந்தத்திலுள்ள மஹாபலி கதையே. மஹாபலியின் வலியை அடக்கித் தேவதைகளுக்கு உதவிபுரியும் பொருட்டு மஹாவிஷ்ணு வாமன உருக்கொண்டு அவனிடம் ஒரு யாக ஸமயத்தில் சென்று தம் காலால் மூன்றடிமண் வேண்டுமென்று யாசித்தார். 'என்னிடம் வந்து இதுதானா உமக்குக் கேட்கத் தோன்றியது! என்னிடம் எவ்வளவோ விலையுயர்ந்த பொருள்கள் உள. அவைகளில் எதையாவது கேட்கலாகாதா? பூமிதான் அதிகம் வேண்டுமென்று கேட்கலாகாதா' என்று பலவாறாக மனக்குறைப்பட்டுக் கொண்டு வாமனமூர்த்தியின் உருவம், அவர் யாசகத்தின் அளவு இவைகளை உணர்ந்து இவ்விஷயத்தை ஒரு பொருட்டாக மதியாது தானம் செய்துவிட்டான். இதனால் பின்னர் அவன் ராஜ்யம் முதலியவைகளைப் பறிகொடுத்து இவ்வுலகைவிட்டுப் பாதாள உலகம் போகும்படியும் நேரிட்டது. ஆகவே தோற்றத்தைக் கண்டு அம்மாத்திரத்தில் ஒருவிதமாகத் தீர்மானம் செய்து நாம் தொழில் தொடங்கிவிட்டால் நமக்கு எப்படியும் முடிவில் அபாயம் வரும் அல்லது நமது காரியம் கைகூடாமல் போய்விடும், என்பது இதிலிருந்து வெளியாகும்.

போதக் குறிப்புகள் :—

1. பொருள் முதலியன.
2. மேற்கோள்களும் பயனும்.
3. உதாரணங்கள்.
4. மதவிஷயப் பொருத்தம்.
5. கதை.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய மேற்கோள்கள்

" தீர்வரு மின்னல் தம்மைச்
செய்யினுஞ் செய்ய சிந்தைப்
போரு ளாளர் தத்தம்
செய்கையிற் பிழைப்பதுண்டோ ?" (1)

—இராமயணம்.

"—வெள்னம்.

"வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு." (2)

—நன்னெறி.

"ஆதாவுடையான் செய்யும் அல்லவு நல்ல வாகும்
ஆதர விலாதான் செய்யும் நல்லவும் அல்ல வாகும்."(3)

—பிரபுலிங்கலீலை.

"உதவாம லொருவன் செய்தவுதவிக்குக் கைம்மாறாக
மதயானை யனைய மைந்த மற்றுமுண்டாக வற்றோ."

—இராமாயணம்.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு." (5`

—தீருக்குறள்.

" இமையும் செல்வமு யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின் " (6)

—சிலப்பதிகாரம்.

" மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழி
னறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு." (7)

—திருக்குறள்.

வெகுளியே யுயிர்க்கெல்லாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே அறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால். (8)

—காஞ்சிப்புராணம்.

நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறிதல் வேண்டும். (9)

—சிலப்பதிகாரம்.

"காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—* * *" (10)

—நாலடியார்.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. (11)

—திருக்குறள்.

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொல லென்று மகிழாதே—* * * (12)

—நன்னெறி.

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லா
லெள்ளுவ வென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத நீது கொடுப்பது நன்றால் (13)

—இராமாயணம்.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே. (14)

—தாயுமானவர் பாடல்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று (15)

—திருக்குறள்.

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள் (16)

—சிலப்பதிகாரம்.

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
டத்தித்தத் திச்சடை தட்டிக்கட் டிப்புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு (17)

—பட்டினத்தார் பாடல்.

வளம்பட வேண்டாதார் யார்? யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினு ரில்லைக் களங்கனியைக்
காரிரனச் செய்தாரு மில் (18)

—நாலடியார்

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## Translation Models

### A NOBLE ACT.

A man who had reached a great age, and amassed much wealth feeling that his end was near, divided his, property among his three sons. Thereafter he set aside a jewel of great value, which he determined to give to that one of his sons who should within three months perform the most noble act, 'Father' said his eldest son one day, 'a person lately entrusted me with a large sum of money. As he was quite stranger to me, and had no acknowledgment from me in writing, I might easily have appropriated the money; but when he asked it back from me, I gave him the whole and refused his offers of reward.' The Father replied, 'yours was an act of duty.' The Second son said, 'I was walking along the edge of a lake when a child fell in. At the risk of my life, I plunged in, and saved it. Was that not a noble act, Father?' No, my son; it was an act of Sympathy.' The youngest son then said,. 'One dark night I found my mortal enemy asleep on the edge of precipice. The slightest movement on waking would have plunged him down the fearful abyss. I took care to rouse him with proper care, and directed him to a place of safely.' 'My dearest son,' said the father, embracing him, 'the jewel is certainly thine'.

### பெருந்தன்மையான தொழில்

அதிகப்பணம் சேர்த்து வைத்திருந்த வயது முதிர்ந்த ஒருவன் தன் முடிவுகாலம் அணுகிவிட்டது என்று உணர்ந்து தன் பிள்ளைகள் மூவருக்கும் தன் சொத்துக்களைப் பகிர்ந்து கொடுத்து விட்டான். பின்னர் விலையுயர்ந்த நகை ஒன்றை அவன் வேறாக எடுத்து வைத்து, மூன்று மாதத்திற்குள் பெருந்தன்மை வாய்ந்த செயல் ஒன்றைச் செய்யும் தன் பிள்ளைக்கு அதைக்கொடுத்து விடுவது என்று தீர்மானித்தான். இப்படி இருக்கையில் ஒருநாள் மூத்தபிள்ளை வந்து; 'அப்பா! கொஞ்ச நாளைக்கு முன் ஒரு புதிய மனிதன் என்னிடம் பெருந்தொகையை வைத்திருக்கும்படி கொடுத்திருந்தான். எழுத்து மூலமாக அவன் என்னிடம் ஒரு ஸம்மதிப்பத்திரமும் வாங்கிக்கொள்ளாததால் பணம் என்னுடையது என்று நான் கூறிவிட்டிருக்கலாம். ஆனால்அவன் வந்து கேட்டஉடன் அதை முழுவதும் அவனிடம் கொடுத்தது மல்லாமல் அவன், அப்பொழுது கொடுக்கவந்த பரிசையும் மறுத்துவிட்டேன்' என்றான். அதற்குத் தகப்பன் 'உன்தொழில் உனது கடமையே யல்லது வேறல்ல' என்றான். பின் ஒருநாள் இரண்டாம் பிள்ளை வந்து 'நான் ஓர் ஏரிக்கரை ஓரமாக உலாவிக்கொண்டிருக்கையில் ஒருகுழந்தை ஏரியில்விழுந்துவிட்டது. உடனே என் உயிருக்கு வரக்கூடிய ஆபத்தையும் ஒரு பொருட்டாக மதியாது உள்ளே மூழ்கி குழந்தையைக் கரையேற்றினேன். அந்தத்தொழில் பெருந்தன்மைவாய்ந்ததல்லவா? என்று கேட்டான். 'இல்லை' என்று தகப்பன் கூறி 'உன் செயல் மனக்கனிவுள்ளதே ஒழிய வேறல்ல?' என்றுமுடித்தான். வேறொருநாள் கடைக்குட்டிவந்து 'ஒரு நள்ளிரவில் என் ப்ராண சத்ரு ஒரு செங்குத்தான பாறை ஓரத்தில் தூங்குவதைக் கண்டேன். விழிக்குங்கால் சற்று அசைந்தால் போதும், பயங்கரமான பாதாளத்தில் உருண்டு விழவேண்டியதுதான். அவனைத் தகுந்த ஜாக்கிரதையுடன் எழுப்பத் துணிந்து அபாயமற்ற விடத்திற்கு அவனை அனுப்பி விட்டேன்' என்றான். உடனே அவனை அன்புடன் அணைத்துக் கொண்டு 'என் அருமை மகனே! நகை உன்னதே!' என்று தகப்பன் கூறினன்.

# சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIE'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்யாயம் 8

விஷய விரஸம்

*திடமிலா விரதியோடே தீர்க்கமாம் பவமாகின்ற*
*கடலுடைக் கரையிலேறக் காதல்செய் முமுட்சு தன்னை*
*விடயமா நக்கரம்தான் அவனுடை கண்டத் தீழ்த்திக்*
*கடலுடைமத்தியத்தில் கடிதினின் மூழ்கவைக்கும்.*

**ஆண்** பெண்ணடங்கலான காட்டுப்பூனைகள் விஷயத்தையும் திண்டுக்கல் மஹாஜனங்கள் விஷயத்தையும் இதோடுவிட்டு நமக்கு முக்கியனாக உள்ள ஒரு தோழன் விஷயத்தைக் காண மதுரை போவோம். நள்ளிரவாக இருக்கிறதென்றும் இப்பொழுது அங்குப் போக புகைவண்டி ஸௌகர்யம் இல்லையே என்றும், நமது தூக்கம் கெட்டுவிடுமே என்றும் மயங்கவே வேண்டாம். ப்ராதிபாஸிகஸத் என்று வேதாந்திகளால் மதிக்கப்படும் தீர்க்கஸ்வப்னமாகிய இவ்வுலகில் உள் ஸ்வப்நமாகிய இக்கதையில் நமது ஸூக்ஷ்மசரீரமாத்ரத்தாலே நாம் பார்த்தல் முதலிய தொழில்களை நடத்தவல்லோம். கைகால்கள் இல்லாவிடினும் நமது வேகத்திற்கு யாதொரு குறைவும் இல்லை. கண் காது இல்லாவிடினும் எல்லாவற்றையும் பார்க்கவும் கேட்கவும் வேண்டிய சக்தி நம்மை விட்டகலவில்லை. நம்மை நாம் அறியாவிடினும் மற்றவை எல்லாவற்றை உணரும் திறன் நமக்கிருக்கிறது.

யாத்திரைக் கருவிகள் முதலியன இவ்வாறு பணச் செலவின்றி ஏற்பட்டுவிட, நாம் மதுரையில் ஓர் மாடிவீட்டை அணுகுவோம். அது ம-ா-ா-ஸ்ரீ, திவான் பஹதூர் நாராயணய்யர் அவர்கள் வீ-ஐ-இ னுடையது என்பது உடனே உங்களுக்குத் தெரிந்துவிடும். டிப்டி கலெக்டர் தூங்கிக்கொண்டிருக்கிறார்; ஒருவேளை அவர் தமது சிறந்த பட்டங்கள் கவர்னர் ஸம்பாஷணை இவைகளை உண்ணி களுக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அவரையும் அவர் குடும்பத்தையும் எழுப்பாது அப்புறம் போவோம். நமக்குத் தூங்குபவரிடம் காரியமே இல்லை. திறந்த மாடியின்மேல் போய்ச் சேருவோம். என்ன ஆச்சரியம்! அங்குஒருகையில்லாத நாற்காலியில் ஒரு யௌவன புருஷன் உட்கார்ந்திருக்கிறான்! அந்தநடுநிசியில்அந்தகாரத்தில் தனிமையாக உட்கார்ந்துகொண்டு வெறும் வெளியைவெருண்டு நோக்கிக்கொண்டு ஏதோ யோசனையில் அவன் ஆழ்ந்திருந்தான். அவன் கருமையான பெரிய கண்களிலிருந்து கண்ணீர் முத்துமுத்தாக ஒழுக அவன் கன்னங்கள் நனைந்து காணப்பட்டன. ஒரு கை நாற்காலியில் தொங்கிக்கிடந்தது. மற்றொரு கையை அவன் தன் தொடைமேல் ஊன்றிக்கொண்டு பிரகாசமாயும் துக்ககரமாயும் உள்ள தனது முகத்தை உள்ளங்கையால் தாங்கிக்கொண்டிருந்தான். கார்மேகம் போன்ற அவன் சுருட்டையான தலைமயிர் அவன் தோளின்மேல் அவிழ்ந்து விழுந்துகிடந்தது. அவன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் துக்கமே ஓர் உருவெடுத்து வந்தாற்போலத் தோற்றிற்று.

அந்த ஸமயத்தில் பிரபஞ்சமுழுவதும் அவன் துக்கத்தைக்கண்டு பரிதவிப்பதுபோலக் காணப்பட்டது. மௌனமாகச் சுற்றி வரும் நக்ஷத்திரக் கூட்டங்களுடன் கூடிய ஆகாயம் நிச்சப்தமாக விருந்தது. தரையிலோ ஒரு பூச்சிகூட அசைந்து கொடுக்கவில்லை. நடுநிசியிலிருந்த நிச்சப்தமானது அந்தஹாரவிருளால் மிக பயங்கரமாகக் காணப்பட்டது. இதை அதிகப்படுத்துவதுபோலச் சில பெரிய கார்மேகங்கள் ஆகாயத்தில் அங்குமிங்கும் ஓடியாட, மலைப்பாம்புகள் விழுங்குவதுபோல ஒன்று மற்றொன்றை மறைத்து முன்சென்றது. கோயில்கோபுரங்கள் பெரியஜடாமுனிகள்போல இருளில் புதைந்து வானுறவோங்கிநின்றன. அவைகளுள் வேலைமுடியாத ஒன்றன் விஷயமாக ஒருவித ஐதிஹம் இருந்தது. அதில் ஒரு பிசாசு இருக்கின்றது என்றும் அது விலைமகள் வீடுசென்று திருட்டுத்தனமாகத் திரும்புவர் அனேகரை அடித்து யமனுலகேற்றியதென்றும் எல்லோரும் நம்பியிருந்தனர். அது முடியாது மொட்டையாக இருட்டில் நிற்பதே அநேக பயங்குள்ளிகளுக்குப் பேய்பிடிக்கும்படி செய்யப் போதுமானதாக விருந்தது. அதிலிருந்த பிசாசு அதைப் பூர்த்திசெய்ய விடுவதில்லை என்றும், அதை முதலில் ஒரு இரவில் சில பிசாசுகள் கட்டத்தொடங்க முடிவதற்குள் கோழி கூவிவிட்டதென்றும், பின்னர் அதைப் பூர்த்திசெய்ய என்ன முயற்சிசெய்தும் முடியாமல் போயிற்றென்றும் அநேகர் முன்னர் சொல்லிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அந்தப் பெரிய கோபுரம் கட்டி முடிந்து விட்டது. ஆயினும் அதில் பிசாசு இருக்கின்றது என்ற மூடநம்பிக்கை மாத்திரம் போகவில்லை. இன்னும் செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமைகளில் அந்தக் கோபுரம் பூமாலை முதலியவைகளால் அலங்காரம் செய்யப்பட்டு வருகின்றது. ஸாதாரண ஹிந்துக்கள் இரவில் அந்த வழி நடக்கவே மாட்டார்கள், நடுநிசியில் அதைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

ஆனால் மாடியில் உட்கார்ந்திருந்த ஸ்ரீநிவாஸன் மனதில் கொஞ்சமேனும் அச்சமே இல்லை. அவன் உள்ளபடி மனப்பூர்வமாக மரணத்தை தரும்பாக மதித்திருந்தான். அநீதி துர்மார்க்கம் ஆகிய இவைகள் நிறைந்த இவ்வுலகிலிருந்து யமன் தன்னைக் கொண்டுபோய் விட்டால் மிகுந்த நலமாக விருக்கும் என்பது அவன் துணிபு. இவ்வுலகில் ஸகல ஸுகங்களும் கெட்டவர்களிடத்திலும், யோக்கியர் நல்லவர்களிடத்திலும் விடாது போய்ச் சேருவதால் இவனுக்கு

இவ்வெறுப்புத் தட்டிவிட்டது. இவன் பின்வருமாறு சிந்திக்கலானான்.

'கடவுள் என்றொருவன் இருக்கிறானா என்ன? அப்படி இருந்தால் இவ்வுலகில் அவிசாரிகள் அடா நீர்க்காயுஸுடன் வாழ்வதேன்! லக்ஷ்மியைப்போன்ற குணசிகாமணிகள் வைதவ்யம், தீராத்துயரம் இவைகளில் வீழ்வதேன்! நல்ல யௌவனதிசையில் ஒரு பாபமும் அறியாத தர்மாத்மாவான தெய்வம்போன்ற கிருஷ்ணனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் இவ்வுலகில் வாழ்வதாலாவதென்? அஹா! என்னருமைத் தோழன் கிருஷ்ணா, நீ ஒருவனே! என் துக்ககாலங்களில் என்னைத் தேற்றுவதும், எனக்கு ஏற்பட்டிருக்கும் மனோவ்யாகூலத்தை, அடிக்கடி வாழ்க்கையின் சிறந்த பாகங்களை எடுத்து வர்ணித்து மாற்றுவதுமே உன் நோக்கமாக விருந்ததே! நீ போயும் நானிருக்கவா? ஆஹா! லக்ஷ்மீ! உன்னைப்போன்ற பெண்சாதி வாய்ப்பது அரிது! அரிது! உனது ஆனந்தமான சாந்தஸ்வபாவம், உனது மாறாக்காதல், உனது பூததயை, நீ கணவனோடு சேர்ந்து வாழ்ந்த அழகு, உனது வாழ்க்கையில் ஏற்பட்ட சிறந்த மனோதர்மம், உன் தகப்பனாரிடமிருந்து ஸ்திரீதனமாகப் பெற்ற வேதாந்த ஞானம், அதற்குத் தகுந்தபடி உன் நடத்தையை நீ பொருத்தி வந்த விதம், ஆகிய இவைகளைப்பற்றி எவ்வளவுதரம் ஏகாந்தமாகக் கிருஷ்ணன் என்னிடம் மிகுந்த ஆவலுடன் எடுத்து விஸ்தரித்திருக்கிறான்! நீயும் கிருஷ்ணனும் இப்படியா பிரிந்து போவது! இனி என்றைக்கும் நீங்கள் சேர முடியாதே! இதுதானா வாழ்க்கைப் பயன்? இதனுள் நம்மை இவ்வாறு அனுப்புவித்து சித்திரவதை செய்ய யாருக்கு அதிகாரம்? நாம் என்ன விதிக்கு அடிமையா? இம்மாதிரி விதி நம்மை வருத்துவது என்ன நியாயத்தோடு சேர்ந்தது? இது ஈசுவராக்ஞை என்று சொல்லுகிறார்களே! மனிதன் படும் பாடுகளையும், அநாதைகளான பிராணிகள் கிடந்து துடிப்பதையும் கண்டுகளிக்கும் கடவுள் என்ற கொடிய பிசாசம் எங்கே இருக்கிறது? உலகமே ஒரு கொடிய காரியம், பிரபஞ்ச இயற்கையே ஒரு பெரிய மோசமான ஜாலம், அது நம்மை இடையறாது ஏமாற்றுகிறது. நாம் மூடர்கள் என்று நன்றாகக் கண்டு, அது நம்மைக் கிழிந்தசெருப்பால்ஓயாது கொஞ்சநாழிகை அடித்துவிடுவதும் பின்னர் நம்மை அது தட்டிகொடுத்துச் சர்க்கரை ஈந்து ஸமாதானப் படுத்துவதுமாக மாறிமாறி இவ்வாறு செய்து வருகிறது. நன்றாகப் பாடி அதைக் கேட்டவர்களை எல்லாம் பன்றியாக மாற்றும் நாசகாவியைப்போல இவ்வுலகம் தனது அற்ப ஸுகங்களை மிகுந்த துக்கமத்தியில் சிறுககாட்டி நம்மைக் கழுதைகளாக்கி விடுகின்றது. ஸாரமற்றமண்ணுருண்டைகளான ஸூர்ய சந்த்ராதி கோளங்கள் உதயமாகின்றன அஸ்தமிக்கின்றன, ஏன்? அந்தப் பாபி பாழும்பிரபஞ்ச இயற்கையால் அவ்வாறு செய்யும்படி தூண்டப்படுவதால் அப்படி உருண்டு வருகின்றனவாம்! இந்த வெறும் கோளங்கள் தேவதைகள் வாஸம் செய்யும் ஜ்யோதிர்லோகங்களாம்! இப்பொழுது அநேகர் குறட்டைவிட்டுக்கொண்டு மெய்ம்மறந்து தூங்குவதும் அந்தப் பாபியின் தூண்டுதலாலேயாம். இதனாலேதான் அவர்கள் மறுநாள் காலையில் விழித்தெழுந்து பரபரப்புடன் தொழிற்பட்டு 'நான் தூங்கினேன்! நான்விழித்திருக்கிறேன்! நான் இதைச் செய்துவிடுவேன், அதை முடிப்பேன், வேறொன்றை முடித்துவிட்டேனே' என்ற இதுபோன்றபேச்சுக்களைப் பேசுகிறார்கள். வெட்கம்கெட்ட வான்கோழியைப்போல இப்பொருளில்லா 'நான்' என்ற பதத்தை உச்சரித்துக்கொண்டு ஒவ்வொருவரையும் எழும்படிசெய்வது இந்தப் பாழும் இயற்கையின் சூது. மனிதனாகட்டும், எந்த ஜந்துவாகட்டும் எதிலும் தானாக ஒன்றையும் செய்வதில்லை. எல்லாம் இந்தப்பாழும் பிரபஞ்ச இயற்கை, ஸ்வபாவத்தாலே ஒழிய வேறில்லை. இந்தப் பிரகிருதிஎன்னும் இயற்கைதான் இந்த 'நான்' என்பதைப் பிறப்பித்தது, அந்தக் கிருஷ்ணனை வெளியே ஓட்டிவிட்டது, பரமசுத்தையும் நிர்தோஷமுமான லக்ஷ்மியின் மனத்தைச் சின்னாபின்னமாகச் சிதற அடித்தது! போதும் இந்த உலகவாழ்க்கை! மறு ஜன்மம் வருமே என்று ஜனங்கள் கூறினால், எப்படி வரும் பார்ப்போம்? எங்கே இப்பொழுது நான் தற்கொலைசெய்துகொள்ளுகிறேன்! பார்ப்போம்! மூடர்களால் வாழ்வு என்றும் ஞானிகளால் மரணம்என்றும் மதிக்கப்பட்ட இந்தப் பைத்தியக்கார உலக வாழ்க்கையில் வரும்படி தூண்டும் சக்தி எது என்பதைப் பார்த்து விடுகிறேன்! வரட்டும் அந்தச் சக்தி என்னிடம்! ஒரு கைபார்த்துத்தான் விடுவது! விடமாட்டேன்!' என்று கூறிவருகையிலேயே ஸ்ரீனிவாசன் கடைசிபாகத்தைப் பரவசமாக மெய்ம்மறந்துவாய்விட்டு உரக்கக்கதறி தன்கால்களால் மிகுந்த ஆவேசத்தோடு தரையை ஒரு உதை உதைத்தான்.

இந்தச் சமயத்தில் 'பிராணநாதா! மோசம்வந்ததே! பிராணநாதா' என்று கூக்குரலிட்டுக்கொண்டு ஒரு 18-வயது யுவதி ஒருவள் தலைவிரிகோலமாய் புடவை கலைந்து பின்னே புரண்டுவர ஓடோடியும் வந்து; அவன்பேரில்விழுந்து, தண்ணீரில்விழுந்துமூழ்குபவன் ஒரு த்ருணம் அகப்பட்டாலும் குரங்குப்பிடியாகப்பிடிப்பதுபோல அவனை இவள் இறுகக் கட்டிப்பிடித்தாள். இவள் முகம் பயத்தால் வெளுத்திருந்தது.

ஸ்ரீநிவாசன்.—[அவளை ஒருபுறம் தள்ளிவிட்டு]

'ஒதுங்கிப்போ! சனியனே! ப்ராணாவுமாச்சு! நாதனுமாச்சு! இவ்வுலகிலாகட்டும் இவ்வுலகுக்கப்பாறபட்ட இடங்களிலாகட்டும் உண்மைக்காதல் என்பதேயில்லை! ஒதுங்கி நில்.'

பெண்.—என் கண்ணே! நான் மிகப்பயந்திருக்கிறேன். என்னைக் குரூரமாய் நடத்தாதேயுங்கள்! புண்ணியம் உண்டு. (அவள் கண்ணீர் அகன்ற ஸ்ரீநிவாஸன் மார்பில் ஆறாய்ப் பெருகியோடக் கரைந்து சற்று அழுதுவிட்டு.) என்மனம் பதைக்கிறதே! என்தேஹம்

பதறுகிறதே! என்னை அணைத்துக்கொண்டு தேற்றலாகாதா என் நாதா!

என்று தேம்பித்தேம்பி அழுதுகொண்டு மன்றாடினாள் அப்பெண்.

இந்தப் பெண்ணைப் பார்த்தால் நமக்கு தெரிந்தவள் போலிருக்கிறதே! எங்கே! ஆம், ஆம் அடங்காப் பிடாரி அன்னம்மாள் திண்டுக்கல்லிலிருந்து வந்தகாலத்தில் வாஸுதேவ சாஸ்திரி வீட்டில் இவள் தாயாரோடுகூட இவளை பார்த்திருக்கிறோம். இவள்தான் ருக்மிணி, திவான் பஹதூர் நாராயணய்யர் பெண்மணி. இதுவரை உலகவியற்கை அதன் வழிகள் இவைகளிடம் கோபங்கொண்டிருந்த ஸ்ரீநிவாஸன் தான் டிப்டி கலெக்டர் மாப்பிள்ளை. ருக்மிணி 'நீயே கதி' என்று அவன்மேல் வந்து சாய்ந்ததும், பயத்தால் அவள் நெஞ்சும் மாரும் படபடவென்று பறையறைவதைக் கேட்டான் ஸ்ரீநிவாஸன். அரைமனதுடன் அவளை அணைத்துக்கொண்டு, கோபாதுக்கத்தால் பல்லை நெறநெறவென்று கடித்துக்கொண்டு சொல்லுகிறான்.

ஸ்ரீநிவாஸன்.—அஹா இந்த உலகவியற்கை என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடும் போலிருக்கிறதே! நீ என் இப்படி என்னை வந்து தொந்திரவு செய்கிறாய்? எனக்கு இன்னொருவருக்கும் என்ன ஸம்பந்தமிருக்கிறது, ஒன்றுமில்லை! நீங்கள் எல்லோரும் இந்த உலக வழிக்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள்! நான் அவ்வாறிருக்கமாட்டேன்! மாட்டேன்!!

ருக்மிணி.—நாதா! நான் பயந்து சாகும்பொழுது இப்படித்தானா என்னை அலங்கோலப்படுத்துவது? உம்மைவிட்டால் எனக்கு வேறு கதி யார்? இதுவரையில் உம்மிடமிருந்த தயையும் அன்பும் எங்கே போய்விட்டது, என் கண்ணே! என் பயத்தை நீக்கும்! பின்னர் எல்லா விஷயங்களையும் கூறிவிடுகிறேன். இந்த நடுநிசியில் இங்கிருக்கப் பயமாக விருக்கிறது, முதலில் உள்ளேபோவோம் வாருங்கள்!

தற்காலத்திற்காவது உலகவழி விஷயமாக ஏற்பட்டிருந்த கோபத்தை ஒருபுறம் ஸ்ரீநிவாஸன் ஒதுக்கி வைத்துவிட்டு உள்ளே போகவேண்டி வந்தது. பெண்கள் புண்பட்டுவருந்துங்கால் எந்தக் கல்மனம்தான் கனியாதா? அவர்கள் ஓர் அகன்ற அறையுள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டனர். விளக்கேற்றி ருக்மிணி சுற்று முற்றும் பார்த்து எல்லாம் ஸரியாக விருக்கிறது என்று கண்டு தேறினாள். உடனே கணவனை நோக்கி நடந்த விஷயங்களைக் கூறலுற்றாள்.

ருக்மிணி.—என் கண்ணே! என்னை இப்படித் தான் தனிமையாக விட்டகலுவதோ? இந்த இருளில் நான் வந்து பார்க்கும் முன் எவ்வளவு நாழிகை நீங்கள் அங்கு உட்கார்ந்திருந்தீர்களோ! அறியேன். நான் கொடிய ஸ்வப்நனம் ஒன்றுகண்டேன். அதற்கேற்றபடி தாங்களும் நடந்துகொண்டு விட்டீர்களே!

ஸ்ரீநிவாஸன்.—பெண்களைப்போன்ற பித்தர்களை உலகில் இல்லை. ஸ்வப்நம் கண்டா பயந்தாய்? இதென்ன அற்ப விஷயம். இதென்ன சொல் பார்ப்போம்,

ருக்மிணி.—என்ன கொடுமை! நளன் தமயந்தியை விட்டோடியதுபோல நீங்கள் என்னை ஆலாய்ப் பறக்கவிட்டு அடர்ந்த நிர்மானுஷ்யமான காட்டுள் புகுந்து ஒரு அகாதமான பள்ளத்தின் மேல் நீட்டிக்கொண்டிருக்கும் செங்குத்தான பாறையின்மீதேறி உமது உயிரை மாய்த்துக்கொள்ள பிரயத்தினம் செய்ததாகக் கண்டேன்! எப்படியோ நான் உங்களைக் கண்டுவிட்டேன். அந்த ஸமயத்தில் என் காதில் 'நான் இப்பொழுது தற்கொலைசெய்துகொள்ளுகிறேன். என்னை மறுபடியும் ஜென்மமெடுக்கச்செய்ய எந்தச் சக்தியால் முடியும்? பார்ப்போம்!' என்று கூறிய உங்கள் குரல் விழ வாரிப் புடைத்துக் கொண்டெழுந்தேன். இந்த அபாயமான தருணத்தில் உங்கள் கோபக்குரலும் நீங்கள் தரையை மிதித்த மிதியும் என்னை அலறச் செய்ய என் ஸ்வப்நம் தடைபட்டது. நான் நன்றாய் விழித்துக் கொண்டேன். பக்கத்தில் பார்க்கிறேனே சுருங்கல் விழாத படுக்கையும் நலுங்காத தலையணையும் இருந்தன 'இதென்ன விபரீதம்'என்றுநினைக்க என்தேஹம் பதறியது. பயம் அதிகமாகிவிட கூக்குரலிட்டுக்கொண்டு வெளியே வந்து நீங்களிருந்த விடத்தில் உங்களைக்கண்டேன். இதென்ன விபரீதமான இரவாகவிருக்கிறதே!

ஸ்ரீநிவாஸன்.—இது விசித்திர ஸ்வப்னந்தான்! ஸந்தேஹமில்லை! எனக்கு மனபூர்வமாக உயிரை மாய்த்துக்கொண்டு உலகவழிக்கு அடிமையாகாது தப்புவித்துக் கொள்ளவேண்டுமென்று தோன்ற, நீ கூறியபடி உரக்கவாய்விட்டுக்கதறினது உண்மையே. இந்த உலக வாழ்க்கை பெரும் மாயம்,இதை எப்படியாவது ஒழிக்க வேண்டும்!

ருக்மிணி.—(அழுதுகொண்டு) என்னை அநாதையாகப் பறக்கவிட்டுப் போய்விடப் போகிறீர்களா? நாதா! இதுதானா மாயையிலிருந்துதப்புவதற்குதகுந்த வழி? வஸிஷ்டாதி மஹாரிஷிகள்கூட தமது பெண்சாதிகளுட னிருக்கவில்லையா?

ஸ்ரீநிவாஸன்.—அவர்கள் எப்படி உலகிலிருந்தும் அதன் மாயைக்கு ஆளாகாது இருந்தனரோ? இந்த வார்த்தைகள் எல்லாம் வெறும்புரட்டு! நிஸ்ஸாரமானவை!

ருக்மிணி.—நாதா! எனக்கு அதெப்படியோ தெரியாது. வாஸுதேவசாஸ்திரி 'மனம் மாறில் ஜகம் மாறும்' என்று சொல்லுகிறார். உலகவழி அல்லது மாயை என்பது ஒருவன் மனமே ஒழியவேறில்லையாம். அலைகிற மனம் அடங்கி நிலையில் நின்று விட்டால் மனிதன் அமரனாவனும். அக்காள் லக்ஷ்மிக்குத் தொலையாத்துன்பம் வருவதற்குக் கொஞ்ச நாளைக்குமுன்புதான் அவர் சில சுலோகங்கள் சொன்னார். அதில் ஒரு மஹான் 'நான் எப்பொழுதும் அழிவற்றவன்! நான் ஸர்வக்ஞன்! நான் பரமாநந்தன்! நான் மாயைக் கப்பாற்பட்டவன்! நான் தேஹமல்ல, எனக்குப் பிறவி ஏது? நான் அகங்காரமல்ல;எனக்குப்பசிதாஹமேது? நான் மனமல்ல, எனக்கு காமாதிகளும் துக்க

மும் எது? நான் கர்த்தாவல்ல, எனக்குப்பந்தமோக்ஷம் எது?" என்று ஆனந்தபரவசமாகக் கூறுகிறார்.

ஸ்ரீநிவாசன்.—இம்மாதிரி விஷயங்களை நான்படித்ததில்லையா என்ன! இவைகள் எல்லாம் பேச்சு! வெறும்பேச்சு! வீண்பேச்சு! இம்மாதிரி உலகவழிக்கும் அப்பாற்பட்டு மாயையாகிய திரையை கிழித்த ஒருவனைக் காட்டு பார்ப்போம்! எது நடந்தாலும் உபேக்ஷையாக விருந்து இறக்கும் பொழுதும் தான் அழிவற்றவன் என்றெண்ணும் மஹான் ஒருவனையும் காணோமே! இவைகள் எல்லாம் வீண்வார்த்தைதானே!

ருக்மிணி.—ஸூரியன் உஷ்ணமாயிருந்தாலும் ஸரி குளிர்ந்திருந்தாலும் ஸரி; நெருப்பு மேல் நோக்கி எரிந்தாலும் ஸரி கீழ்நோக்கினாலும் ஸரி; தம்மைப் பூஷித்தாலும் ஸரி, தூஷித்தாலும் ஸரி, பூஜித்தாலும் ஸரி, வைதாலும் ஸரி; ஆறிவிறந்தாலும் ஸரி நூறிவிறந்தாலும் ஸரி ஒன்றையும் புதுமையாகவாவது ஒரு பொருட்டாகவாவது மதியாத பெரிய மஹான் இன்னும் இல்லாமல்போகவில்லை, என்று மாமா வாஸுதேவர் கூறக் கேட்டிருக்கிறேன். அதெப்படியேன் ஆகட்டும், என் அன்பே! மனதை ஸமாதானப் படுத்திக்கொண்டு தூங்க வாருங்கள் உங்களுக்கு தூக்கமே இல்லையே! நாளை அதிகாலையில் எழுந்திருக்க வேண்டாமா? படிக்கும் முன் என்னை ஒருபொழுதும் விட்டுப் பிரிவதில்லை என்றும், இனிமேல் இம்மாதிரி வெட்டவெளியில் நடுநிசியில் சென்று தனிமையாக உட்காருவதில்லை என்றும் வாக்களித்து என்னை தைரியப்படுத்தலாகாதா? வாரும்!

இவ்வாறு ருக்மிணி அழைத்து அவனைக் கஷ்டப்படுத்த, தனிமையாகத்தன்னை விட்டுவிட்டால் போதும் என்றான். ஸ்ரீநிவாஸனிடமிருந்து மிகுந்த கஷ்டத்தில் மேல் அரைமனதுடன் வெளிவந்த ஸம்மதியைப் பெற்றுக்கொண்டுஅவள் உறங்கத் தொடங்கினாள்.

'மனதை அடக்கவா? என் மனம் எற்கனவேதான் அடங்கி நசுங்கி அடிமைபட்டுக் கிடக்கிறதே! இது போகாதா?" என்று எண்ணமிட்டுக்கொண்டு ஸ்ரீநிவாஸன் படுக்கையில் சாய்ந்து மனனம் செய்யத் தொடங்க அது நல்ல வேளையாகத் தூக்கத்தைக் கொண்டுவிட்டது. அவன் தூக்கங்கூட வேதாந்தத் தூக்கமாகவே இருந்தது. அதில் அவன் தீர்க்கஸ்வப்நம் ஒன்று கண்டான். அங்கு அவன் ஒருவேதாந்தம் பேசும்யோகியைக் காண அவர் அவனுக்கு யோகரஹஸ்யங்களை உபதேசிக்க கருணைகூர்ந்தார். அவருக்குச்சிஷ்யனாகிவிட அவன் ஆயத்தப்படுகையில் ஓர் அற்புத விஷயத்தைக்காண அவனை வந்து சிலர் அவஸரமாக எழுப்பி விட்டனர்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

கனம் ஸ்ரீ P. S. சிவஸ்வாமீ அய்யர் அவர்கள் ஸி ஐ. இ.—கனம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியய்யர் தேஹவியோகமானதும் நெடுநாளாகக் காலியாயிருந்த இந்திய மெம்பருடைய ஸ்தானம் கனம் அட்வகேட் ஜனரலாக இருந்த ஸ்ரீமான் சிவஸ்வாமி அய்யரவர்களுக்குக்கொடுக்கப் பட்டதைக்கேட்டு ஸந்தோஷிக்கிறோம். இவர் 1864-ஷு உத்பவித்து தஞ்சையில் முதலில்படிப்பையடைந்து பின் 1882-ம் வருஷம் சென்னை இராஜாங்க சாலையில படித்து பி ஏ. பரீக்ஷை தேறி, 1884-ஷு (பி, எல்) தேறி 1885-ஷு வக்கீலாயினர் ஹைகோர்ட்டில் பெருங்கீர்த்தி யடைந்த நியாயவாதியாக விளங்கி, கொஞ்சகாள், 'லாகாலேஜில்' நியாயபோதகராயிருந்து, 1904-ஷு சென்னை ஸர்வகலாஸங்கசட்ட நிர்வாண ஸபை அங்கத்தினராகதேர்ந்தெடுக்கப்பட்டு, 1907-ஷு அட்வகேட் ஜனரலாயினர். இத்தகைய லோக வியவஹாரசக்தியும், திடசித்தமுமுடைய நமது அய்யர் இப்பொழுது ராஜாங்கத்துஆலோசனை அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டது யாவர்க்கும்ஆநந்தம். அவர்க்கு அப்பதவிக்குரியவாறுஸத்தியத்திற்கும் இந்திய ஸமூஹத்தின் நன்மைக்கும் உழைக்க அவர்க்கு ஸமயோசித பலமும் திடச்சித்தமும், நடுநிலை முதலியயாவும் என்றும் இடைவிடாது உதவிசெய்யக்கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

லார்ட் கார்மைகேல்.—நமது அன்பின் மிக்க நன்மையே மனங்குடிகொண்டு உண்மையறிந்து ஊர்க்குதவிபுரிய அன்பே உருவெடுத்தாற்போல ராஜாங்கம் நடாத்திய தலைவன் கனம் கவர்னர் கார்மைகேல் பெருமானை வங்காளத்திற்கு மாற்றப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டது கொடுத்ததை கொள்ளை கொண்டாற்போல இருப்பினும், நமது தேசத்தில் மிகவும் மனச்சலனமடைந்த நமது உற்றாராகிய வங்காளியர் சற்றமைதியடைந்து ஸுகம் பெறவேண்டும் என்னும் நம்மவர்பாலாசையும் சேர்ந்து இன்பமும் துன்பமுமடைய நமதுமனம் ஊசலாடுவதைச்சொல்லவும் வேண்டுமோ?

புதியகவர்னர்.—பெண்ட்லண்ட் பிரபு நமது புதிய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரைத்தான் முதலில் வங்காளத் தலைமையைப் பெறக் கேட்டது. அவர் மறுத்ததின்பின் நமது இப்பொழுதிய கவர்னர் அங்கு மாற்றப்பட்டனர். நமது கஷ்டத்தை ஒழிக்குமாறு இம்மஹானை நமது இராஜதானித் தலைவனாக சக்கிரவர்த்தியால்நியமிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது. இவரேஇங்கிலண்ட் கேபினட்டிலிருந்து முதலில் இந்திய கவர்னராக நியமிக்கப்பட்டது. இவர் மிகவும் ஸாதுவென்றும் ஸத்திய வாதி என்றும் கேழ்விப்படுகிறோம். அவரை அடைந்து நமதுநாடு செழிக்க வேண்டுமென்பது எமது அபீஷ்டம். இவர் உடனே வாமுடியாமையால் கார்மைகேல் பிரபு வங்காளம் சென்றதும், பெண்ட்லண்ட் பிரபுவரும்வரை கனம் ஹாமீக் துரையவர்கள் கவர்னராக வேலை பார்ப்பார்.